REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 26 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வருட. 92 இல. 23 | Friday 26, January, 2024 | 20 பக்கங்கள் | 50/-

இன்று நள்ளிரவுடன் நிறைவுறும்

## 09வது பாராளுமன்றத்தின் 4வது கூட்டத்தொடர்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் இன்று நள்ளிரவுடன் நிறைவு செய்யப்படவுள்ளதாக, பாராளுமன்ற வட்டாரத் 06

# கட்டுநாயக்க நெடுஞ்சாலை வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மரணம்!

### இராஜாங்க அமைச்சரின் பாதுகாவலரும் உயிரிழந்ததுடன், சாரதி படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



லோரன்ஸ் செல்வநாயகம்

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று (25) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மரணமடைந்துள்ளார்.



48 வயதான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த கெப் ரக வாகனம் கொள்கலனொன்றை முந்திச் செல்வதற்கு முயற்சித்த போதே விபத்துக்குள்ளானது.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நேற்று முன்தினம் இரவு குருநாகல் மற்றும் சிலாபத்தில் நடைபெற்ற திருமண வைபவங்களில் பங்கேற்ற பின்னர் மீண்டும் கொழும்பு நோக்கிப் பயணிக்கையில் இந்த விபத்து இடம்பெற்றது. கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் 11.01 கிலோமீற்றர் மைல் கல் பகுதியில் பயணித்த கொள்கலனொன்றின் பின்புறத்தில் கெப் ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் படுகாயங்களுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் இராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் முன்பதாகவே உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 1.55 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றதுடன், அவ்வேளையில் குறித்த வாகனத்தில் மூவர் பயணித்துள்ளனர். இராஜாங்கஅமைச்சரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் மரணமடைந்துள்ள நிலையில், வாகனத்தின் சாரதி படுகாயங்களுடன் இராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தின் போது இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மார்புப் பகுதி மற்றும் 06



அதிபர் சேவையில் நிலவும் சிக்கல்களுக்கு தீர்வு

## விசேட குழுவின் பரிந்துரை அமைச்சரிடம் கையளிப்பு

### ரூ. 6,000 கொடுப்பனவை ரூ.15,000 ஆக அதிகரிக்க பரிந்துரை



லோரன்ஸ் செல்வநாயகம்

அதிபர் சேவையில் நிலவும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் நியமிக்கப்பட்டுள்ள குழு, அதன் அறிக்கையை 06

## குற்றவியல் தண்டனை கோவையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி

### ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை கூட்டத்தில் மேலும் பல தீர்மானங்கள்

லோரன்ஸ் செல்வநாயகம்

குற்றவியல் தண்டனைக் கோவையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே, மேற்படி திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. 06

இனிப்புப் பண்ட தொழிற்றுறை

## இனி முன்னணி ஏற்றுமதி துறையாக மாற்றியமைக்க அரசு ஆதரவளிக்கும்

### ஜனாதிபதி உறுதிமொழி




இனிப்புப் பண்டத் தொழிற்றுறையை முன்னணி ஏற்றுமதி துறையாக மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் ஆதரவளிக்குமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொக்கோ உள்ளிட்ட பயிர்களை பயிரிடுவதற்கு 06

தமிழரசுக் கட்சியின்

## பொதுச் செயலாளர் பதவிக்கு சிறிநேசன்



இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசனின் பெயரை தான் முன்மொழிந்துள்ளதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார். 06

## விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சரின் இறுதி செல்ஃபி



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று (25) அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, 06

சனத் நிஷாந்தவின்

## வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கர



திடீர் விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து ஏற்பட்ட அவரது வெற்றிடத்துக்கு தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஜகத் பிரியங்கர நியமிக்கப்பட்டுள்ளார்.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் மாவட்ட தலைவராக ஜகத் 06

சர்வதேச சந்தையில்

## எண்ணெய் விலையில் திடீர் அதிகரிப்பு



சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலையில் நேற்றையதினம் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கமைய சர்வதேச சந்தையில் WTI வகை மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 75.41 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன், பிரெண்ட் 06

## இசைஞானி இளையராஜா இலங்கை வந்துள்ளார்

### நாளையும் நாளை மறுதினமும் அவரது இசை நிகழ்ச்சி



கொழும்பில் இந்த வாரம் நடைபெறவுள்ள மாபெரும் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு பிரபல தென்னிந்திய இசையமைப்பாளரும் இசைஞானியுமான இளையராஜா நேற்று முன்தினம் (24) மாலை இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நாளை சனிக்கிழமை (27) மற்றும் நாளை 06

கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது சிறந்தது

## இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு மிக விரைவான தீர்வு அவசியம்

### ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தி கடிதம்

எம்.கே.ஷாகுல் ஹமீது





கடற்றொழிலாளர் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கூட்டு நடவடிக்கை குழுவொன்றை உருவாக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 06

## ஆனமடுவ விபத்தில் தந்தை, மகன் பலி

### தாய் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஆனமடுவ, நவகத்தேகம பிரதான வீதியில் லபுகம பிரதேசத்தில் நேற்று (25) இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும் அவரது மகனும் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, இந்த விபத்தில் காயமடைந்த 06

## தரமற்ற மின் வேலிகளால் யானைகள் உயிரிழப்பு அதிகம்

### கடந்த 25 நாட்களில் 12 யானைகள் பலி



தரமற்ற மின்சார வேலிகளால் காட்டு யானைகள் உயிரிழந்த பல சம்பவங்கள் கடந்த காலத்தில் பதிவாகியதாகவும் இந்த வருடத்தின் 25 நாட்களில் 12 யானைகள் உயிரிழந்ததாகவும், 06

## கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் மீண்டும் மோதல்

### தப்பிச்சென்றவர்களில் 17 பேர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்




வெலிக்கந்தை, கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து பெருமளவான கைதிகள் மீண்டும் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களில் 17 பேர் 06

## மருத்துவ சேவை விருத்திக்காக புதிய திட்டத்துக்கு முஸ்தீபு

### அனைத்து மருத்துவ சங்கங்களும் இணைவு




மருத்துவ சேவையின் எதிர்காலத்துக்காக அனைத்து மருத்துவ சங்கங்களும் இணைந்து புதிய திட்டமொன்றை தொடங்க முடிவு செய்துள்ளதாகவும் இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (24) நடைபெற்றதாகவும், 06

## கட்டார் விபத்தில் யாழ். குடும்பஸ்தர் பலி

### தொழிலுக்கு சென்று 26 தினங்களில் சம்பவம்



கட்டாரில் பணி புரிவதற்காக சென்று 26 நாட்களேயான நிலையில், வாகன விபத்தில் 06

## நகர்வலம்

# நான் இலங்கைப் பிரஜை;இரட்டைப் பிரஜாவுரிமை எதுவும் கிடையாது

### கன்னி உரையில் நயன வாசலதிலக எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தாம் இலங்கைப் பிரஜை என்றும் தமக்கு இரட்டைக் குடியுரிமை எதுவும் கிடையாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய பாராளுமன்ற உறுப்பினர் நயன வாசலதிலக சபையில் நேற்று தமது கன்னி உரையில் தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு கடவுச்சீட்டே தம்மிடம் உள்ள நிலையில் மக்கள் பிரதிநிதிகள் சிலர் பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்திக் கொண்டு அது தொடர்பில் பொய்யான தகவல்கள் வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எனது பெற்றோர் அரச உத்தியோகத்தர்கள். எமது குடும்ப பின்னணி தொடர்பில் கடந்த காலங்களில் பல விடயங்கள் தவறாக குறிப்பிடப்பட்டன. கடுமையான உழைப்புக்கு மத்தியில் நாம் படிப்படியாக முன்னேறியவர்கள்.

உயர் கல்விக்காக நான் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு சென்றதுடன் அதனையடுத்து அவுஸ்ரேலியாவுக்கு சென்று தொழிற்றுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டேன்.

# உரிமை மற்றும் சுதந்திரத்தை அனைவரும் பொறுப்புடன் கடைப்பிடிப்பது அவசியம்

### சபையில் இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உரிமை மற்றும் சுதந்திரத்தை அனைவரும் பொறுப்புடன் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில் சமூகத்தில் அச்சநிலை காணப்படுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பாலானோருக்கு சட்டமூலம் தொடர்பில் தெளிவில்லாமையே அதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

சபையில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அடுத்த தேர்தலை இலக்காக கொண்டு நாட்டு மக்களை அடக்குவதற்காக இந்த சட்டமூலம் கொண்டு வரப்படவில்லை என்பதை அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். சிறுவர், பெண்கள் உட்பட ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பன பொறுப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 15 ஆவது உறுப்புரையில் அடிப்படை உரிமைகள் தொடர்பில் மட்டுப்படுத்தல்கள் காணப்படுகின்றன.

சமூக ஊடகங்களில் உண்மையான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை மாறாக பொய்யான கருத்துக்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில் மலட்டுத்தன்மை கொத்து, பிளாஸ்டிக் அரிசி, பிளாஸ்டிக் முட்டை என பல செய்திகள் வெளியாகி அவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியதை மறக்கமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை வைத்து எதனையும் பேச முடியும் என்ற நிலைப்பாடு மாற்றியமைக்கப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்துக்குள் பொறுப்புடன் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

உலக சனத்தொகையில் 4.5 பில்லியன் பேர் சமூக ஊடகங்களை பயன்படுத்துகிறார்கள். இலங்கையின் மொத்த சனத்தொகை 22 மில்லியனாக காணப்படுகின்ற நிலையில் தொலைபேசி இணைப்புகள் 36.18 மில்லியனாக காணப்படுகின்றன. நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பல விடயங்கள் குறிப்பிடப்பட்டன.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வில் 10 சிறுவர்களில் 03 சிறுவர்கள் நிகழ்நிலை ஊடாக துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் சமூக ஊடகங்கள் தொடர்பில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாத 25 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகின்றமை அவதானத்துக்குரியது.

# இந்திய முன்னாள் உதவித் தூதுவர் நடராஜனின் நூல் வெளியீட்டு விழா

**இக்பால் அலி**

கண்டி – யாழ். உதவி ஸ்தானிகராலயத்தின் உதவித் தூதுவராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த ஏ. நடராஜன் எழுதிய 'பொரம் த விலேஜ் டு த குளோபல் ஸ்டேச்' (அனுபவ வாழ்க்கைக் குறிப்பு) ஆங்கில நூல் வெளியீட்டு விழா பெப்ரவரி 03 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.00 மணி முதல்

5.30 மணிவரை பேராதனை ரெஸ்ட் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார். நிகழ்வில் வரவேற்புரையை சமூக செயற்பாட்டாளர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன், நூல் நயவுரையை பேராதனைப் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் நெலும்தீபிகா உடகம, நூல் அறிமுகவுரையை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சரத் பி.எஸ்.அபயக்கோன் மற்றும் பேராதனை பல்கலைக்கழ பேராசிரியர் வி. மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையை நூலாசிரியரும் ஓய்வுபெற்ற உதவித் தூதுவருமான ஏ. நடராஜன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி இந்து இளைஞர் மன்றம், கண்டி தமிழ்ச் சங்கம், கண்டி முத்தமிழ்ச் சங்கம், மாத்தளை மகாத்மா காந்தி சபை, மாத்தளை தமிழ் இலக்கிய மன்றம், மலையக கலை – கலாசார (இரத்தின தீபம்) சங்கம், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் என்பனவற்றின் பிரதிநிதிகள், அசோகா குரூப் நிறுவனத் தவிசாளர் பி.டி. ஆர். ராஜன், சன்ரயிஸ் பிஸ்கட் நிறுவன பணிப்பாளர் தொழிலதிபர் எஸ்.முத்தையா ஆகியோர் கலந்து கொள்வர்.



பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தெனிபிட்டிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (25) அமைச்சில் சந்தித்து கடலுணவு ஏற்றுமதி தொடர்பில் கலந்துரையாடினால். அருகில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவும் காணப்படுகிறார்.

# தர்காநகரில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

தர்காநகர் ரூமி ஹாசிம் கல்விநிலைய விஞ்ஞானப்பிரிவில் 2016 முதல் 2023 வரை கல்விகற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் மற்றும் 2023 க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 09 ஏ சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசளிக்கும் நிகழ்வு கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் ரூமி ஹாசிம் தலைமையில் தர்காநகர் ஸாஹிரா கல்லூரி நளீம் ஹாஜியார் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை (27) காலை 9 மணிக்கு நடைபெறும்.

கல்வி நிலையச் செயலாளர் ஜெஸூக் அஹமடின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், கல்வி நிலைய விஞ்ஞானப் பிரிவு விரிவுரையாளர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாக நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் றபீஸ் ஹம்ஸா தெரிவித்தார்.

# புத்தளத்தில் டெங்கு அபாயம் குறித்து கலந்துரையாடல்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் நகரசபை மற்றும் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தளம் பள்ளிவாசல்கள் நிர்வாகப் பிரதிநிதிகளுடன் டெங்கு அபாயம் குறித்த விஷேட கலந்துரையாடல் (24) நகர சபை செயலாளர் எல்.பீ.ஜீ. பிரீத்திகா தலைமையில் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்றது. தற்போது புத்தளம் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து காணப்படுவதையும் துரதிஷ்டவசமாக சில உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு இதனைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக புத்தளம் பிரதான பொது சுகாதார பரிசோதகர் என்.சுரேஷ் மற்றும் நகரசபை சுகாதார பிரிவு அதிகாரிகள் விவரித்தனர்.

அண்மையில் நகரசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினால் டெங்கு தொற்றாளர்கள் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்திருந்தது. எனினும் தற்போது மீண்டும் பிரதேசத்தில் வாரத்திற்கு சராசரியாக 30 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்படுவதாகவும் இது ஆபத்தான நிலைமையை நோக்கி நகருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் உரிய தரப்பினருக்கு வழங்கப்படவேண்டும்

### சாணக்கியன் எம். பி கோரிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை உரிய மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி ராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் சில பகுதிகளில் இராணுவத்தினர் மக்களின் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது காணி சொந்தக்காரர்கள் அதனை பார்த்துக் கொண்டிருக்கும் நிலையே காணப்படுகின்றது. வடக்கு,கிழக்கில் யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்றன. இன்னும் அந்த மாவட்டங்களில் மட்டும் சில இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமை பாதுகாப்பு காரணங்களுக்காக என கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மட்டக்களப்பு குருக்கள்மடம் மைதானம் பாடசாலைக்கு சொந்தமானது. எனினும் இன்னும் இராணுவம் அதனை தமது கட்டுப்பாட்டுக் குள்ளேயே வைத்துள்ளது.

அதனை விடுவிக்க மாவட்ட மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும் அது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதால் அது இன்னும் விடுவிக்கப்படவில்லை.

முறக்கொட்டான்சேனையிலுள்ள இராணுவ முகாமுள்ள பகுதி பாடசாலையொன்றுக்கு சொந்தமானது.

குருக்கள்மடம் மைதான விடயத்தில் பாடசாலை இடமாற்றப்பட்டது என்பதற்காக மைதானத்தை எடுத்துச்செல்ல முடியாது. அதில் இராணுவம் இருக்க முடியாது.

இந்த பிரதேசத்தில் இராணுவத்திற்காக வேறு இடங்களில் காணிகளை பெற்றுக்கொள்ள முடியாதா? வாகரை காயங்கேணி பகுதியில் கடற்படைக்கென காணியை எடுத்துள்ளனர்.

தாண்டியடி, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களிலும் இது போன்ற பிரச்சினைகள் உள்ளன. இந்த காணிகளை விடுவிப்பது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் 12வது பரிசளிப்பு விழா

**(ஆரையம்பதி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி அஸாபீருல் ஜன்னாஹ் அல் குர்ஆன் முன்மாதிரி பாடசாலையின் 12ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் எம். எம். எம். அன்சாரின் தலைமையில் நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் மற்றும் பிராந்திய முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்வில் பரீட்சைகளில் சித்திப்பெற்ற மாணவர்களுக்கும் அல் குர்ஆன் மனனம் செய்த 17 மாணவர்களுக்கும் சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் மீராசாஹிப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## கிழக்கின் குரல்



காரைதீவு ஸ்ரீ பாலையடி வால விக்னேஸ்வர ஆலய மகா சங்காபிஷேக தின நிகழ்வுகள் நேற்று சிறப்பாக இடம்பெற்ற போது..

(படம்; காரைதீவு குறூப் நிருபர்)

# ஸ்ரீலங்கா ஜனரஜ சங்கத்தின் கல்முனை அஷ்ரஃப் வைத்தியசாலை கிளை கூட்டம்

**(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)**



ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை கிளையின் பொதுச்சபை கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிராந்திய ஏற்பாட்டாளர் எஸ்.எ.உமிர் தலைமையில் நடைபெற்றன. மேற்படி கிளைக் கூட்டத்தில் 2024ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக எ.எம்.ஜெலீல்,செயலாளராக எஸ்.எம்.இத்ரீஸ், பொருளாளராக எம்.வி.நசீர் ஆகியோரும் உபதலைவராக ஆர்.ஏ.டீ.எஸ்.ராஜபக் ஷ(செவ்வந்தி), உபசெயலாளராக எ.எம். முக்தார் ஆகியோரும் தெரிவாகினர். அத்துடன் உயர்பீட உறுப்பினர்களாக 13 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். பொதுக்கூட்ட, நிர்வாக தெரிவுக்கு பிரதம அதிதியாக வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி குமுதினி, பதில் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். புதிய நிர்வாக சபை தெரிவானது 14 நாட்களுக்கு முன் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு அந்த தேர்தலுக்காக கண்காணிப்புக் குழு நிறுவப்பட்டு அங்கத்தவர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டு ஜனநாயக முறையில் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

# சக்தி வாய்ந்த மோட்டார் குண்டுகள் மீட்பு

**(பெரியபோறதீவு தினகரன் நிருபர்)**

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு பாலத்தின் கீழிருந்து இரண்டு சக்தி வாய்ந்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு வாவியின் பட்டிருப்பு பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரின் வலையில் இவை அகப்பட்டதாகவும் அதனைதொடர்ந்தே இதுதொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரியவருகின்றது. நீதிமன்ற உத்தரவுக்கமைய குண்டு செயலிழக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு குண்டுகள் செயலிழக்கப்படவுள்ளதாக பொலிஸார். தெரிவித்தனர். கடந்த யுத்தகாலத்தில் பட்டிருப்பு பாலத்தின் இருமருங்கிலும் இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்ததாக தெரியவருகின்றது.

# மட்டக்களப்பு சுகாதார அதிகாரிகளால் உணவகங்களில் திடீர் பரிசோதனை

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பின் தரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளை இரவில் பரிசோதிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி . சுகுணனின் ஆலோசனைக்கிணங்க அவரின் தலைமையிலான குழுவினர் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். மட்டக்களப்பு நகரில் செயற்படும் உணவகங்கள், சிற்றுண்டிசாலைகள் மற்றும் அவற்றில் தயாரிக்கப்படும் உணவின் தரம் தொடர்பான பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களால் திடீர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பாவனைக்குதவாத பல பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டன.

இதன்போது உரிய சுகாதார முறைகள் பின்பற்றப்படாத உணவகங்கள் எதிர்காலத்தில் தொடர்ந்தும் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

# கல்முனை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் விசேட யுக்திய சுற்றிவளைப்பு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

கல்முனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் விசேட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்மவின் ஆலோசனைக்கமைய இச்சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி மற்றும் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் பல இவ்விடங்களில் நிறுத்தப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்குரிய தொலைபேசி இலக்கங்கள் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன் ஸ்டிகர்களும் ஒட்டப்பட்டன.

விசேட அதிரடிப்படையினர், மாவட்ட வீதிப் போக்குவரத்து பொலிஸார், மற்றும் பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

# கைவிடப்பட்ட நிலையில் பாட்டாளிபுரம் பால் சேகரிப்பு மையம்

**(தோப்பூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பாட்டாளிபுர கிராமத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு குளிரூட்டல் மையம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மூதூர் கிழக்கு பாற்பண்ணையாளர் அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் பால் உற்பத்திக்கு ஆதரவு வழங்கும் வகையில் பாட்டாளிபுரம் பால் சேகரிப்பு குளிரூட்டல் மையம் அமைக்கப்பட்டது. எனினும் தற்சமயம் இக்கட்டடம் எந்தவித பயன்பாடுமின்றி புல், செடிகள் வளர்ந்து புதர்மண்டி கிடக்கிறது. இதுதொடர்பில் உரிய தரப்பினர் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பால் சேகரிப்பு குளிரூட்டல் மையம் புனரமைக்கப்பட்டு இயங்குமாகவிருந்தால் கால்நடையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பயனடைவார்கள். இது தொடர்பில் உரிய தரப்பினர் இனியாவது கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கெவிலியாமடு முதல் மஹாஓயா வரை வீதிப் புனரமைப்பு திட்டம்





அம்பாறையில் உஹன மஹாஓயா வீதியில் (A027) கெவிலியாமடுவிலிருந்து மஹாஓயா வரையான புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மஹாஓயா 69 சந்தியில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன உள்ளிட்ட அதிதிகள் முன்னிலையில் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

58 கிலோமீற்றர் நீளமான உஹன மஹாஓயா வீதி அம்பாறையிலிருந்து உஹனவூடாக மஹாஓயா நகரை இணைக்கும் பிரதான வீதியென்பதுடன், இலங்கை அரசாங்கத்தால் அம்பாறையிலிருந்து கெவிலியாமடுவரை 33 கி.மீ தூரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கெவிலியமடு முதல் மஹாஓயாவரை 25 கிலோமீற்றர் தூர வீதி வழமையான வடிகால் அமைப்பின்றி போக்குவரத்து செய்வதற்கு சிரமமாக உள்ளதுடன், இவ்வீதியே புனரமைக்கப்படவுள்ளது. அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் உதவியுடன் பதுளை செங்கலடி வீதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிபிலவிலிருந்து செங்கலடிவரை 87 கி.மீ தூர கட்டுமானப்பணி நிறைவடைந்துள்ளதுடன், அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இதற்காக 60 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்கியது. இதற்கமைய எஞ்சிய நிதியைப் பயன்படுத்தி உஹன மஹாஓயா வீதி கெவிலியாமடுவிலிருந்து மஹாஓயாவரை 25 கி.மீ தூரம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.



கண்டி மாவட்டத்துக்கு அண்மையில் விஜயம் செய்த இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை அமைச்சர் ஜீவன் தொண்டமான் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். இதன்போது கண்டி ஹந்தானை, கித்துள்முல்ல வீட்டுத்திட்டத்தை உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பார்வையிட்டதுடன், ஹந்தானை ஸ்ரீ வாணி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினார்.

# சனத் நிஷாந்தவின் மரணம் கட்சிக்கும் நாட்டுக்கும் பேரிழப்பு

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் அகால மரணம் கட்சிக்கும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாரிய இழப்பாகுமென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வாகன விபத்தில் நேற்று மரணமடைந்த சனத் நிஷாந்தவின் பூதவுடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் கண்ணீர் மல்க இவ்வாறு தெரிவித்தார்.

விபத்தில் மரணமடைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரச்சிக்கட்டுவவில் இடம்பெறவுள்ளன.

அவருடைய பூதவுடல் நேற்று மாலை 6.00 மணி முதல் இன்று மதியம் 12.00 மணிவரை பொரளையிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் அவரது பூதவுடல் ஆரச்சிக்கட்டுவ பிரதேசத்திலுள்ள அவரது அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு அஞ்சலிக்காக வைக்கப்படுவதுடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரச்சிக்கட்டுவ கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளதாக, அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்துவுக்கு உயரிய விருது




சர்வதேச கிரிக்கெட் பேரவையால் வருடாந்தம் வழங்கப்படும் விருதுகளில் ஒன்றான வருடத்தின் அதிசிறந்த ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனை விருது இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்துவுக்கு கிடைத்துள்ளது. ஐசிசி மகளிர் சர்வதேச மகளிர் ஒருநாள் கிரிக்கெட் அணி, ஐசிசி மகளிர் ரி20 கிரிக்கெட் அணி ஆகியவற்றின் தலைவியாக ஐசிசியால் பெயரிடப்பட்டிருந்த அத்தபத்துவின் திறமைக்கு இவ்விருது சான்று பகர்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 13 வருடங்களாக விளையாடி வரும் 33 வயதுடைய அத்தபத்து வென்றெடுத்த முதலாவது அதி உயரிய ஐசிசி விருது இதுவாகும். 2023ஆம் ஆண்டில் அவர் 8 இன்னிங்ஸ்களில் 2 சதங்கள், ஒரு அரைச்சதம் உட்பட மொத்தமாக 415 ஓட்டங்களை பெற்றார். அவரது துடுப்பாட்ட சராசரி 69.16 ஆகவும் ஸ்ட்ரைக் ரேட் 125.37 ஆகவும் அமைந்திருந்தன. அத்துடன், 47 பவுண்டரிகளையும் 21 சிக்சர்களையும் விளாசியிருந்தார். பந்துவீச்சில் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

கடந்த வருடம் முழுவதும் அற்புதமான திறமைகளை வெளிப்படுத்தியதுடன், தலைமைத்துவத்தில் சிறந்த ஆளுமையை அவர் கொண்டிருந்தார். அத்துடன், தலைவி மற்றும் வீராங்கனை என்ற இரண்டு நிலைகளிலும் அவர் தனது ஆற்றல்களை அதிகபட்சமாக வெளிப்படுத்தியிருந்தார்.

# இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரணம் பேரதிர்ச்சியளிக்கிறது

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரணம் பேரதிர்ச்சியளிப்பதாகவும் துடிப்பான இளம் அரசியல்வாதியாக மக்களுக்கு சேவை செய்துவந்த அவரின் மரணம் பேரிழப்பாகுமெனவும், அமைச்சரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மறைவையிட்டு நேற்று (25) விடுத்த இரங்கல் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தாவது,

" விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும், அவரின் மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்த செய்தியை கேள்வியுற்ற அதிர்ச்சியிலிருந்து என்னால் மீள முடியவில்லை. எனது அமைச்சில் அவர் புரிந்துணர்வுடனும் நட்புறவுடனும் நடந்தார். புத்தளம் மக்களுக்காக மட்டுமின்றி, முழு நாட்டுக்கும் சேவையாற்றியவர். மலையக மக்கள் மீதும் புரிந்துணர்வுடன் செயற்பட்ட எனது சிறந்த நண்பர் அவர். அவரின் பிரிவால் துயருற்றுள்ள அவரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு; கிளிநொச்சியில் கலந்தாராய்வு

**(பரந்தன் குறூப் நிருபர்)**

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (24) விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றதுடன், சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானதெனவும் அவர் தெரிவித்தார்.

# சிறிய குளங்கள், வாய்க்கால்களை புனரமைக்க 100 கோடி ரூபா ஒதுக்கீடு

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சிறிய குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் வடிகான்களை புனரமைப்பு செய்வதற்காக இந்த வருடத்துக்கு 100 கோடி ரூபா கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறியளவிலான 17 ஆயிரம் நீர்ப்பாசன கட்டமைப்புகளை புனரமைப்பு செய்வதற்காக கடந்த வருடத்தில் 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 100 குளங்களுக்கான புனரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்திருப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.



குளங்கள் சேதமடைந்த நிலையில் கைவிடப்பட்டிருந்த பெருமளவு வயல் நிலங்களில் தற்போது விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு சிறுபோகத்துக்கு பின்னர் மேலும் பல குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் கமநல சேவைகள் அமைப்பின் கண்காணிப்புடன் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்க வரி அறவீடு தவிர்ந்த மாற்று வழி கிடையாது

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள தற்போதைய சூழ்நிலையில் வரி அறவிடுவதை தவிர்த்து வேறு மாற்றுவழி கிடையாதென, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் வருமானம் அதிகரிக்குமானால் பொருட்களின் விலை அதிகரிப்பில் பிரச்சினை கிடையாதெனத் தெரிவித்த அவர், வீழ்ச்சியடைந்துள்ள கைத்தொழில் துறையை மீண்டும் இயல்பு நிலைக்கு கட்டியெழுப்புவதே அதற்கான ஒரே தீர்வாக அமையுமெனவும் தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு அமைச்சர் வழங்கிய நேர்காணலின் போதே, இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் பெரும்பாலான கைத்தொழில் துறைகள் வீழ்ச்சியடைந்து காணப்படுவதாகவும் அக்கைத்தொழில் துறைகளை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கட்டுப்படுத்தும் வகையில் சாதாரண மக்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டுமானால் கைத்தொழில் துறைகளை மீண்டும் கட்டியெழுப்புவதே அதற்கு சிறந்த தீர்வாக அமையுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


National Lotteries Board
புதன் 2024.01.24
www.nlb.lk

மஹஜன சம்பத — 5369 — ரூ. 33,909,376.00
M — 3 2 5 3 5 9

3611 — 2024.01.24 — ரூ. 63,359,887.12
Q — 41 50 54 58 — Q — 52989

Mega POWER — 1717 — 2024.01.24 — 73681 — ரூ. 421,801,406.00
C — 21 — 05 20 73 74
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

VIP — 2024.01.24 — 0195
W — 7 3 3 1 0 6
W — ரூ. 23,889,918.44

2024.01.24 — 678 — ரூ. 3,502,344.84
09 11 17 19 — 27170 — 08

தன நிதானய — 1369 — 2024.01.24 — ரூ. 132,121,167.28
U — 12 20 60 68 — U — 51960



## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.18 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு என்.றீ. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.02.16 திகதியிட்ட ஈட்டு முறி இல. 3148 இன் பேரில் கம்பஹ, நீதிமன்ற வீதி, சநச சதுக்கம், எனும் முகவரியில் அமைந்த கம்பஹ டிவெலொப்மென்ற் கம்பனி பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து (பணிப்பாளர்கள் கலகெடிஹேன மங்கலதிரிய றோட், இல. 51/1/A எனும் முகவரியைச் சேர்ந்த களுதேவ இலிச் ஜனஜித் தி சில்வா, சியம்பலாபே, இல. 432 எனும் முகவரியைச் சேர்ந்த உடுவரகே சுனில் பெரேரா, பல்லேவல, கந்தலந்த, இல.1 எனும் முகவரியைச் சேர்ந்த விதங்க நிமலசிறி ஜயசூரிய, கண்டி, அஸ்கிரிய தொடன்வல பெசேஜ், இல. 71/33 எனும் முகவரியைச் சேர்ந்த சமரசிங்ஹ முதியன்சேலாகே அனில் ஹரிந்ர கமல் சமரசிங்ஹ, வத்தளை, கொங்கிதொட்ட என்.எச்.எஸ், இல. 340 எனும் முகவரியைச் சேர்ந்த டியுறன் டி சில்வா ஜயசிங்ஹ கனேமுல்ல, பொல்லதா, ஸ்ரீ போதி விஹாரய எனும் முகவரியைச் சேர்ந்த கந்தேகம சுமனசிறி, பெபிலியாவல, பல்லேகம, இல. 51/A எனும் முகவரியைச் சேர்ந்த ரணசிங்ஹகே குணரத்ன) நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது 2023.11.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.11,855,948.64 (பதினொரு மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் அறுபத்து நான்கு சதமும்) அத்துடன் ரூ. 6,750,000.00 (ஆறு மில்லியன் எழுநூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து (24.25%) வீதத்தில் 2023.11.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்கூறிய 2017.02.16 திகதியிட்ட ஈட்டு முறி இல. 3148 இன் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது ரூ. 11,855,948.64 (பதினொரு மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் அறுபத்து நான்கு சதமும்) அத்துடன் 2023.11.08 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 6A, பெயாபீல்ட் கார்டன்,கொழும்பு 8 எனும் முகவரியைச் சேர்ந்த சொக்மன் அன்ட் சமரவிக்ரம, ஏலதாரருக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கடவத்தை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளை உடுகஹபற்றுவில் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் நாபாபொட 343/B இலக்க கிராம சேவகர் பிரிவில் நாபாகொட கிராமத்தில் அமைந்த "தெல்கஹவத்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.என்.ஏ. டபிள்யு. சூரியாராச்சி தயாரித்த 2011 ஆகஸ்ட் 26 திகதியிட்ட வரைபடம் இல. 4999 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A1, வடக்கில் பாதையும் வரைபடம் இல. 579 இல் காணித்துண்டுகள் B மற்றும் C உம், கிழக்கில் வரைபடம் இல. 579 இல் காணித்துண்டு B உம் எலயும் (ஓடை) தெற்கில் வசந்த பியதாஸ மற்றும் சமரசேகர ஆகியோரின் காணிகளும் மேற்கில் பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4999 இன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்தாறு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1,பே.36.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு A1 கீழ் விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்கூறிய நாபாகொட கிராமத்தில் அமைந்த "தெல்கஹவத்தயின் காணித்துண்டு A" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ. காதிகேசு தயாரித்த 1946 ஜுலை 03 திகதியிட்ட வரைபடம் இல. 579 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A, வடக்கில் அகிலிஸ் அப்புவின் காணியும் கிழக்கில் இக்காணியின் காணித்துண்டுகள் B மற்றும் C உம் எலயும்(ஓடை) தெற்கில் படதொல வளவ்வ உரிமை கேபேகம ஆச்சிகே சேதன் சிங்யோவின் காணியும் மேற்கில் படதொல வளவ்வயின் காணியும் டபிள்யு. வில்லியம் பாஸின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 579 இன் பிரகாரம் ஒரு றூட் முப்பத்தாறு தசம் எட்டு எட்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1,பே.36.88) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி அத்தனகலை காணிப்பதிவகத்தில் B 345/112 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.டீ. லியனகுணவர்தன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**கடவத்தை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 14

## குறள் தரும் சிந்தனை



வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

# நாட்டின் முன்னேற்றத்திற்கு தேசிய நல்லிணக்கம் அவசியம்

இலங்கை ஐரோப்பியரின் ஏகாதிபத்தியத்திற்கு 443 வருடங்கள் உள்ளாகி இருந்தது. இக்காலப்பகுதியில் இந்நாட்டுக்கே உரித்தான பல பாரம்பரியங்களும் விழுமியங்களும் அழிந்து மறைந்து போயுள்ளன. உணவுப் பழக்கவழக்கங்கள் முதல் நடத்தைகளிலும கூட மாற்றங்கள் ஏற்பட்டன.

அதேநேரம் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டு மக்களை பிரித்தாளுவதற்காக பிரித்தானிய ஏகாதிபத்தியம் பிரித்தாளும் தந்திரங்களைப் பயன்படுத்தியது. இந்நாடு சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் வரை இத்தந்திரம் குறிப்பிடத்தக்க வகையில் பயனளிக்கவில்லை. மக்கள் தமது நாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட்டதன் விளைவே அதுவாகும்.

அந்நிய ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்வதில்தான் மக்கள் அதிக அக்கறை செலுத்தினர். அதற்காக அவர்கள் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒற்றுமையாகச் செயற்பட்டனர். குறிப்பாக சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அன்றைய தமிழ், முஸ்லிம், சிங்களத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இதற்கு சிறந்த முன்னுதாரணங்களாக உள்ளன.

அன்றைய தலைவர்கள் இன, மத ரீதியிலான பேதங்களுக்கு அப்பால் இலங்கையர் என சிந்தனையுடன் செயற்பட்டதன் விளைவாக இந்நாட்டுக்கு சுதந்திரம் வழங்குவதைத் தாமதப்படுத்தவோ இழுத்தடிக்கவோ முடியாத நிலைக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியம் உள்ளானது. அதனால் 1948 இல் இந்நாட்டுக்கு பிரித்தானியா சுதந்திரம் வழங்கியது.

ஆனால் சுந்திரத்திற்குப் பின்னர் சில தலைவர்கள் பல்லின மக்கள் வாழும் நாடொன்றுக்கு பொருத்தமற்ற கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தனர். அவர்கள் அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ளும் வகையில் முன்னெடுத்த நடவடிக்கைகள் இன, மத, பிரதேச ரீதியிலான சந்தேகங்களுக்கு வித்திடக்கூடிய வகையில் அமைந்தன. இதற்கு தமிழ் பேசும் தலைவர்களும் மக்களும் கூட ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர். குறிப்பாக தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்தனர். ஆனால் அந்த எதிர்ப்புப் போராட்டங்களை தங்களது நலன்களுக்காக அவர்கள் பயன்படுத்தலாயினர். அவர்கள் தூரநோக்குடன் செயற்படத் தவறினர். தங்களது செயற்பாடுகளின் பின்விளைவுகள் குறித்து அவர்கள் எண்ணிப் பார்க்கவும் இல்லை.

இதன் விளைவாக இனரீதியிலான பார்வை கூர்மையடைந்ததோடு, சந்தேகங்களும் வலுப்பெறலாயின. அதனால் துரதிஷ்டவசமாக சுமார் மூன்று தசாப்த காலம் நீடித்த யுத்தம் தோற்றம் பெற்றது. இந்த யுத்தத்தின் விளைவாக நாடும் மக்களும் இழந்தவை கொஞ்ச நஞ்சமல்ல. விலைமதிக்க முடியாத மனித வளங்களை இழந்த இந்நாடு பொருளாதார ரீதியிலும் பல வருடங்கள் பின்னடைவுக்கு உள்ளாகியது.

யுத்தம் முடிந்து சுமார் 15 வருடங்களாகியும் இந்நாடு இன்னும் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் பிரவேசித்திருப்பதாகத் தெரியவில்லை. கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு நாடு உள்ளானது. அந்நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் பொருளாதார நெருக்கடி நிலவிய போது மக்கள் முகம்கொடுத்த அசௌகரியங்கள் பெரிதும் நீங்கியுள்ளன. ஆன போதிலும் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் நாட்டை இட்டுச் செல்லும் வகையில் அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வேலைத்திட்டங்களின் வெற்றிக்கும் நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கும் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாலான ஒற்றுமையுடன் கூடிய பார்வை இன்றியமையாததாகும். இது பல மட்டங்களிலும் தற்போது உணரப்பட்டுள்ள விடயமாகும்.

இப்பின்னணியில் அண்மையில் அநுராதபுரம் நகருக்கு விஜயம் செய்திருந்த முன்னாள் சபாநாயகரும் நீதியான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய, 'இந்நாடு சுதந்திரம் பெற்று 70 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் வடக்கு, தெற்கில் இன்னும் ஒற்றுமை இல்லாத நிலை காணப்படுகிறது. எதிர்கால சந்ததியினர் சுதந்திரமாக வாழ்வதற்கு தேசிய நல்லிணக்கம் மிகவும் அவசியமானது'' என்றுள்ளார்.

அது முற்றிலும் உண்மையான கூற்றாகும். இந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தேசிய நல்லிணக்கம் மிக முக்கியமானது. இந்நாட்டு மக்கள் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒற்றுமையாகச செயற்பட்டிருந்தால் இந்நா டு ஏனைய நாடுகளை விடவும் பல மடங்களுக்கு முன்னேற்றமடைந்திருக்கும். அதுவே நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள ஆர்வலர்களின் கருத்தாகும்.

ஆகவே இந்நாட்டின் நலன்களையும் முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தி செயற்படுவது இந்நாட்டு குடிமக்களின் பொறுப்பாகும். அப்போதுதான் இந்நாடு விரைவாகவும் வேகமாகவும் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும். அது மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிவகை செய்யும். அதனால் தேசிய நலலிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்துவது காலத்தின் அவசியத் தேவை எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# அன்னை முத்துமாரி அருள்பாலிக்கும் புண்ணியம் நிறைந்த பூமி மாத்தளை



காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும், மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவது போல் மாத்தளை என்றதும் முத்துமாரியம்மைதான் நினைவில் வருகிறார்.

அருளாட்சி நடத்தும் அன்னையாக அன்னை முத்துமாரி மாத்தளையில் குடிகொண்டு அருள்பாலிக்கின்றாள்.

மாத்தளை மலையகத்தின் தலைவாயில். இராமேஸ்வரம் கரையிலிருந்து படகுகள் மூலமும் பாய்மரக் கப்பல் மூலமும் கடலைக் கடந்து, கொடிய காடுகளுக்கிடையே கால்நடையாக உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம் மாத்தளை முத்துமாரி. மலையகத் தமிழ்மக்களின் வரலாறு மாத்தளை முத்துமாரியம்மன் வரலாற்றுடன் இணைந்துள்ளது. வரலாற்று சிறப்பும் புராதன தொன்மையும் கொண்ட ஆலயத்தின் மாசிமகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று, சுவாமி உள்வீதி, வெளிவீதி வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

காரைநகர் ஈழத்து சிதம்பரம் மங்களேஸ்வரர் குருக்களின் பேரனும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பிரதான குருக்களான சுப்பிரமணிய குருக்களின் மருமகனும், சிவஸ்ரீ மணி சரவணபவாநந்த குருக்கள் மற்றும் சாமி விஸ்வநாத குருக்களிடம் வேதங்களை கற்றவருமான சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஷ்ணகுமார் கிரியைகளை நடத்தவிருக்கிறார்.

தமிழ் மக்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து சென்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கொண்டே சென்றிருக்கின்றார்கள். பிரித்தானியப் பேரரசின் போது உலகத்தின் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த தமிழக மக்கள் அங்கெல்லாம் மாரியம்மனைக் கொண்டு சென்று வழிபட்டு வருகின்றார்கள். தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், தாய்லாந்து மற்றும் பிஜி, மாட்டினிக், குவாதலோப் சென் வின்ஸ்டன், ரீ நாட்இ டுபாக்கோ, சுரிநாம், பிரெஞ் கயானா உட்பட பிரெஞ்சு மொழி பேசுகின்ற தீவுகளில் கூட மாரியம்மனைப் போற்றி கரகம்பாலித்து வழிபடும் பாங்கினை இன்றும் காண்கின்றோம்.

மாத்தளை மாரியம்மனிடம் அடைக்கலம் புகுந்து மலைநாட்டில் அடியெடுத்து வைத்தவர்கள்தான் மலையகத் தமிழர்களின் மூதாதையர்கள்.

கொடியேற்றம் 02.02.2024 அன்று வெள்ளிக்கிழமையும், தேர்த் திருவிழா 24.02.2024 சனிக்கிழமையும் நடைபெறவிருக்கின்றன.

1983 ஆம் ஆண்டு ஜுலை கலவரத்தில் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட பஞ்சரதங்களை மீளநிர்மாணித்து மாத்தளை நகர வீதிகளில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் (1993) அம்பாள் பவனி வரச்செய்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியார் மற்றும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய பரிபாலன சபை உறுப்பினர்கள் ஆகியோர் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள் ஆவர்.

## பெப்ரவரி 2ஆம் திகதி ஆலய கொடியேற்றம்

மாத்தளை முத்துமாரியம்மன் தெய்வீகக் கோலத்தில் சிந்தை இழந்துபோன கவிஞர் நவாலியூர் சொக்கநாதன், 1964 ஆம் ஆண்டு எழுதிய 'மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி' என்ற நூலை பலரும் மறந்து போயிருந்த நிலையில், பெரும் பொக்கிஷம் போன்று பேணி இளைய தலைமுறையினர் கற்றறிந்து பயன்பெறும் வகையில் மாத்தளை எச். எச். விக்கிரமசிங்க அதனை மறுபதிப்பு செய்து 1993 ஆம் ஆண்டு ஆலயத் தலைவராக இருந்த மாரிமுத்துச் செட்டியாரிடம் சமர்ப்பித்திருந்தார்.

முருகேசுபிள்ளை அவர்கள் அன்னை முத்துமாரியை பற்றி பாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளையில் மாசிமக திருவிழா என்ற பாடல் வரிகளோடு 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப்படத்தின் ஊடாக மாத்தளை தேர்திருவிழா காட்சிகளை பூஜை வழிபாடுகளை மாத்தளை காத்திகேசு பதிவுசெய்திருக்கிறார். மாத்தளை பெ. வடிவேலன் மலையகத்தில் 'மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' உட்பட பல நூல்களைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் விக்கினேஸ்வரர் சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன் மற்றும் வேலாயுதம் சுதர்ஷன், அங்கமுத்து யோகராஜா செட்டியார், கந்தையா கனகரட்ணம், வேலு அழகேஸ்வரன், அங்கமுத்து திருச்செல்வம் ஆசாரியார், வீரையா முத்துசாமி, இராமசாமி கிருஷ்ணகுமார், சுப்பையா பிரதீபன், மாரிமுத்து நாகேந்திரன், செல்லையா விஸ்வநாதன், தியாகராஜா கிஷோகுமார் ஆகியோர் ஆலயத்தை சிறந்த முறையில் பரிபாலித்து வருகின்றனர்.

மாத்தளை முத்துமாரியம்மன் அருளின், அன்பின், இரக்கத்தின், கருணையின் ஒரு குறியீடு. மாத்தளை முத்துமாரி அம்பிகையைத் தரிசித்து தேர்திருவிழாவில் கலந்து அன்பையும் இரக்கத்தையும் யாசிப்பது எமது கடமையாகும்.

**சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் குருக்கள், ஆலயபரிபாலன சபை உறுப்பினர்கள்**

ஆக்கம்:
**காயத்திரி விக்கிரமசிங்க...**

## பிராணிகளால் பெரும் தொல்லை!

# பயிர்ச்செய்கையாளர் எதிர்நோக்கும் சவால்!

விவசாயச் செய்கையில் எதிர்நோக்கப்படுகின்ற சவால்கள் அதிகம் ஆகும். வரட்சி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தப் பாதிப்புகளுக்கு அப்பால் பீடைத்தாக்கமும் பெரும் சேதங்களை பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தி விடுகின்றது.

இவ்வாறான காரணிகளுக்கு அப்பால் தற்போது பிராணிகளின் தொந்தரவு காரணமாக பயிர்ச்செய்கையில் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதாக பயிர்ச்செய்கையாளர்கள் கூறுகின்றனர். கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் பிராணிகளின் தொந்தரவு காரணமாக விவசாயச் செய்கையை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

விவசாய உற்பத்திகளை பிராணிகள் தின்று தீர்ப்பதுடன், அவற்றை அழித்து சேதமாக்கி விட்டும் செல்வதால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் யானை, அணில், மயில் மற்றும் குரங்குகளால் சேனைப் பயிர்ச்செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் அண்மைக்காலமாக காட்டு யானைகள், அணில், மயில், குரங்குகளின் தொல்லையால் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் குடியிருப்பாளர்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பகலில் கிராமங்களுக்குள் உட்புகும் அணில்களும், குரங்குகளும், மயில்களும் காய்கறிகளை சேதப்படுத்தி விட்டுச் செல்கின்றன. இளம் தென்னை மரங்கள் மற்றும் பழமரங்களுக்கு அவை பலத்த சேதத்தை விளைவிக்கின்றன.

குரங்குகள் வீட்டின் கூரைகளுக்கு மேலாகப் பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகள் சேதமடைவதுடன், சில வேளைகளில் வீட்டில் ஒருவரும் இல்லாத சந்தர்ப்பங்களில் வீட்டுக்குள் புகுந்து சமைத்த உணவு மற்றும் ஏனைய உணவுப் பொருட்களை உண்கின்றன. சமையல் பாத்திரங்களையும் குரங்குகள் வெளியே எடுத்துச் சென்று விடுகின்றன.

வீட்டில் சிறுவர்கள் தனியாகவுள்ள வேளைகளில் இந்த குரங்குகள் வருவதால் குந்தைகளும், சிறுவர்களும் எந்நேரமும் அச்சத்துடன் வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. அத்துடன் இரவு வேளைகளில் நீருக்காகவும் உணவுக்காகவும் கூட்டம் கூட்டமாக வரும் காட்டு யானைகள் மரங்களுக்கும் குடியிருப்புகளுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுவதுடன் உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகின்றன. இதனால் இரவு வேளைகளில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கும் நிலைமையும் ஏற்படுகின்றது.

உயிர்களுக்கு மிகவும் அச்சத்தை ஏற்படுத்தும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இரவு வேளைகளில் விடியும் வரை நித்திரையின்றி விழித்திருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



காட்டு அணில்கள்,காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்றவற்றை கட்டுப்படுத்த யானை வெடிகள், மின்வேலி மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கான உபகரணங்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# இலங்கை-இந்தியா இடையே பாலம் நிர்மாணிப்பதில் பா.ஜ.க அரசு ஆர்வம்!



தமிழ்நாட்டில் அமைந்துள்ள இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகியவை இந்துக்களின் புனித தலங்களில் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. இந்த ஊர்கள் எல்லாம் மிகவும் பிரபலமானவைதான் என்றாலும் கூட, கடந்த ஒரு சில நாட்களாக இந்தியா முழுவதும் பேசப்பட்டு வருகின்றன.

அயோத்தி நகரில் பல்வேறு சர்ச்சைகள் மற்றும் பிரச்சினைகளைக் கடந்து இராமர் கோயில் கும்பாபிஷேகம் கோலாகமாக நடைபெற்று முடிந்திருப்பதுதான் இதற்குக் காரணம். இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகியவை அயோத்தி இராமர் கோயிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஊர்கள் ஆகும்.

இதன் காரணமாகவே அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக, இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகிய இடங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்று வந்தார். கூடவே அரிச்சல் முனைக்கும் மோடி சென்றிருந்தார். இது தனுஷ்கோடிக்கு மிக அருகில் உள்ளது. இந்த அரிச்சல் முனைதான், இராமர் பாலத்தின் தொடக்கப் புள்ளியாக கருதப்படுகிறது.

இந்தச் சூழலில் அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் எல்லாம் கோலாகலமாக நடைபெற்று முடிந்த பின்னரும் கூட, இந்த ஊர்கள் எல்லாம் மீண்டும் செய்திகளில் இடம்பிடிக்கத் தொடங்கியுள்ளன. மத்திய அரசின் ஒரு அதிரடி திட்டம்தான் இதற்குக் காரணம்.

ஆம், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையே பிரம்மாண்டமான கடல் பாலம் ஒன்றை கட்டுவதற்கு இந்தியாவின் மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தனுஷ்கோடி மற்றும் இலங்கையின் தலைமன்னார் ஆகிய ஊர்களை இணைக்கும் வகையில், கடலுக்கு மேலே இந்த பாலத்தை கட்ட மத்திய அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த பாலத்தின் நீளம் 23 கிலோ மீட்டர்களாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

தனுஷ்கோடி மற்றும் தலைமன்னார் ஆகிய ஊர்களுக்கு இடையேயான தொலைவும் மிகவும் குறைவு என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எனினும் கடலுக்கு மேலே பாலம் கட்டுவதால், இது மிகவும் சவாலான காரியமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கு அதிக பொருட்செலவு ஏற்படலாம். இதன் காரணமாக இந்த பிரம்மாண்ட பாலத்தை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வை இந்திய மத்திய அரசு விரைவில் நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வரும் ஒரு திட்டம் ஆகும். தற்போது அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழா நடைபெற்று முடிந்துள்ளதையடுத்து, இது தொடர்பான பேச்சுக்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், இந்தியா_இலங்கை இடையே, சுற்றுலா மற்றும் பொருளாதாரம் ஆகியவை வலுவடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அத்துடன் இந்தியா மற்றும் இலங்கை இடையேயான பயண நேரம் மற்றும் பயண செலவுகளையும் இந்தப் பாலம் குறைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பாலம் பயன்பாட்டிற்கு வந்தால், அது இன்றைய அதிநவீன யுகத்தின் இராமர் பாலமாக இருக்கலாம். ஏனெனில் இந்த உத்தேச பாலத்திற்கு இராமர் பெயரே சூட்டப்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாக உள்ளன.

# உடுகொடவில் தாய் சேய் சிகிச்சை நிலையம் மீள்திறப்பு



அத்தனகலை ருக்கஹவில, உடுகொட பிரதேசத்தில் தாய் சேய் சிகிச்சை நிலையத்தின் மீள்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

அத்தனகலை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சிசர குமார புளத்சிங்கள இச்சிகிச்சை நிலையத்தின் வரலாறு தொடர்பாகத் தெரிவித்ததாவது:

"உடுகொடையில் வசிக்கும் எம்.எம்.பவுஸ் மொஹமட் என்பவரின் மனைவி எம்.எஸ்.யு. சாகியா பிரசவத்துக்குச் செல்லவிருந்தார். வத்துபிட்டிவல மருத்துவமனைக்கு தாய்சேய் சிகிச்சைக்காக அதிகாலையில் செல்லாவிடின் சிகிச்சை கிடைப்பது சிக்கலாகி விடுமென்பதால், அச்சிகிச்சை நிலையம் உடுகொடையில் இருப்பது வசதியாக இருக்குமென்று அப்பெண் தனது கணவரிடம் கூறினார்.

உடுகொடை மஸ்ஜிதுநூர் பள்ளிவாசலுக்குச் சொந்தமான இவ்விடத்தில் இச்சிகிச்சை நிலையம் அமைக்க அனுமதி கிடைத்தாலும் இக்கட்டடத்தை கட்டுவதற்கான வசதி இல்லாதிருந்தது.

அத்தனகல்ல பிரதேச சபை உறுப்பினரான எம்.எச்.எம். சுபைரிடம் இக்கட்டடத்தை கட்டி முடிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு அவரின் ஒதுக்கீட்டு நிதி மற்றும் ஏனைய உறுப்பினர்களின் நிதியுதவியுடன் இச்சிகிச்சை நிலையத்தின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் சில முட்டுக்கட்டைகள் காரணமாக மூடப்பட்டது. பின்னர் மஸ்ஜிதுநூர் பரிபாலன சபையும் உதவும் கரங்கள் மாதர் சங்கமும் இணைந்து இச்சிகிச்சை நிலையத்தை மீண்டும் திறப்பதற்காக பணி முன்னெடுக்கப்பட்டது.

சமூக சேவையாளர் பிர்தௌஸ் உட்பட பலரும் இந்நிகழ்வில் உரையாற்றினர். மஸ்ஜிதுநூர் பள்ளி நிர்வாக தலைவரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. உதவும் கரங்கள் மாதர் சங்க உறுப்பினர் பாத்திமா சியாமா நன்றியுரை நிகழ்த்தினார்.



# ரமழானுக்கு தயாராக ஆரம்பிக்கும் மாதம்

அல்லாஹுதஆலா இவ்வுலகில் சிலவற்றை விட சிலதை மேன்மைப்படுத்தியுள்ளான். இடங்களில் மக்கா முகர்ரமா, மதீனா முனவ்வரா, பைத்துல் முகத்திஸ் ஆகிய புனிதத்தலங்களை ஏனைய சகல இடங்களை விடவும் அவன் கண்ணியப்படுத்தி வைத்துள்ளான். அதேபோன்று கால நேரங்களைப் படைத்து வெள்ளிக்கிழமை நாளை நாட்களின் தலையானதாகவும் மாதங்களில் முஹர்ரம், துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, ரஜப் ஆகிய நான்கு மாதங்களை சிறப்பானதாகவும் ஆக்கி வைத்திருக்கிறான். இது தொடர்பில் அல் குர்ஆனின் பின்வரும் வசனம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

**'நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை. இதுதான் நேரான மார்க்கமாகும்'**

**(அல்குர்ஆன் 9:36)**

இதேவேளை நபி (ஸல்) அவர்கள், **'வானங்களும் பூமியும் படைக்கப்பட்ட நாளில் இருந்த (பழைய) நிலைக்குக் காலம் திரும்பி விட்டது. ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. (அவற்றில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வரக்கூடியவை. அவை துல் கஅதா, துல்ஹஜ் மற்றும் முஹர்ரம் ஆகியனவாகும். (மற்றொன்று) ஜுமாதஸ் ஸானிக்கும் ஷஃபான் மாதத்திற்கும் இடையிலுள்ள ரஜப் மாதமாகும்'.** (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

அல்லாஹ்வின் பேரருளால் தற்போது புனிதமான ரஜப் மாதம் எம்மை வந்தடைந்திருக்கிறது. இஸ்லாமிய மாதங்களில் அல்லாஹு தஆலாவால் கண்ணியப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் இதுவும் ஒன்றாகும். இம்மாதத்திற்கு எண்ணற்ற பெயர்கள் இருப்பதாக மார்க்க அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இது கண்ணியப்படுத்தப்பட்ட மாதம் என்று அழைக்கப்படும். அறியாமைக் காலத்தில் கண்ணியப்படுத்தப்படும் மாதமாக இம்மாதம் இருந்தது. அதேபோன்று அஸம்மு (செவிடு) என்றும் இம்மாதம் அழைக்கப்படும். இம்மாதத்தில் அரபிகள் போரை விட்டு விடுவார்கள். எனவே இம்மாதத்தில் ஆயுதங்களின் சப்தத்தைக் கேட்க முடியாது. யாருக்கும் எந்த அநீதம் செய்யப்படாத காரணத்தினால் எவரின் உதவி தேடும் குரலையும் இம்மாதத்தில் கேட்க முடியாது.

அதேநேரம் அஸப் (கொட்டக்கூடியது) என்றும் அழைக்கப்படும் இம்மாதத்தில் அல்லாஹ்வினுடைய அருள் அதிகமாக கொட்டப்படும் என்று மக்காவாசிகள் சொல்வார்கள்.

மேலும் ரஜ்ம் (விரட்டுதல்) என்றழைக்கப்படும் இம்மாதத்தில் ஷைத்தான் விரட்டி அடிக்கப்படுகின்றான். முகீம் (நிலையானது) என்றழைக்கப்படும் இம்மாதத்தின் கண்ணியம் நீக்கப்படாமல் நிலையாக தொடர்ந்து இருக்கிறது. 'முளர்' என்றழைக்கப்படும் இம் மாதத்தை முளர் என்ற அரபுக் கோத்திரத்தினர் மிக அதிகமாகக் கண்ணியப் படுத்துபவர்களாக இருந்தார்கள்.

முனஸ்ஸிலுல் அஸின்னா – (ஆயுத முனையை நீக்கக்கூடியது) என்றழைக்கப்படும் இம்மாதத்தில் அரபியர்கள் போர் நிறுத்தம் செய்வார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

ஆகவே, ரஜப் மாதத்திற்கு எண்ணற்ற பெயர்கள் இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இம்மாதத்தில் போரிடுவது, பாவம் இழைப்பது தடுக்கப்பட்டுள்ளன.

அல்லாஹு தஆலா தன் அருள்மறையில், **'சங்கையான மாதம் குறித்து உங்களிடம் அவர்கள் கேட்கிறார்கள். அதில் போரிடுவது மிகப்பெரிய (குற்றம்) என்று (நபியே!) நீங்கள் கூறுங்கள். (2:217)** என்று குறிப்பிட்டுள்ளான்.

இஸ்லாம் போரிடுவது, சண்டையிடுவது, அநீதம் செய்வது போன்ற காரியங்களை பொதுவாகத் தடுத்திருந்தாலும் இந்த சங்கையான மாதங்களில் இவை குறிப்பாகத் தடுக்கப்பட்டுள்ளன. எனவே பாவமான காரியங்களில் இம்மாதங்களில் அறவே ஈடுபடக்கூடாது. ஏனென்றால் மற்ற மாதங்களில் பாவங்களில் ஈடுபடுவதை விட இம்மாதங்களில் ஈடுபடுவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இது தொடர்பாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, **'இம்மாதத்தை இறைவன் கண்ணியமான மாதமாக ஆக்கியிருக்கிறான். இம்மாதத்தில் அநீதம் செய்யாதீர்கள் என்று தடுத்திருக்கிறான். எனவே மற்ற மாதங்களை விட இம்மாதத்தில் செய்யப்படும் பாவம் மிக மோசமானதாக பார்க்கப்படும். அதேபோன்று மற்ற மாதங்களை விட இம்மாதத்தில் செய்யப்படும் நற்காரியங்கள் மிக உயர்ந்ததாகக் கருதப்படும்'** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: தப்ஸீரு அத்தபரி).

மேலும் நபி (ஸல்) அவர்கள் சங்கையான மாதங்களில் நோன்பு வைப்பதை ஆர்வப்படுத்தினார்கள்.

**'ஒரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்று வந்த நபித்தோழர் ஒருவருக்கு தன்னுடைய மூன்று விரல்களை சேர்த்து பின்பு பிரித்துக் காட்டி சங்கையான மாதங்களில் நோன்பு வையுங்கள். பின்பு விட்டு விடுங்கள். சங்கையான மாதங்களில் நோன்பு வையுங்கள். பின்பு விட்டு விடுங்கள். சங்கையான மாதங்களில் நோன்பு வையுங்கள். பின்பு விட்டு விடுங்கள் என்று மூன்று முறை கூறினார்கள்'.**

(ஆதாரம்: சுனன் அபீதாவூத்)

எனவே, இம்மாதத்திலிருந்து சுன்னத்தான நோன்புகளை நோற்பதுடன் விடுபட்ட ரமழானுடைய நோன்புகளையும் அவசர அவசரமாகக் களா செய்து கொள்வோம்.

அதேநேரம் அல் இஸ்ரா வல் மிஃராஜ் நிகழ்வும் இம்மாதத்தில் நிகழ்ந்துள்ளது. இந்த அற்புத நிகழ்வு நடந்த காலம் குறித்து மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இருந்த போதிலும், சில மார்க்க அறிஞர்கள் இந்நிகழ்வு ரஜப் மாதத்தின் இருபத்தேழாம் இரவு நிகழ்ந்ததாகக் கூறுகின்றனர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் இந்நிகழ்வு நினைவுபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அல் இஸ்ரா வல் மிஃராஜ் என்பது நபி (ஸல்) அவர்களது வாழ்வில் நடந்த மிகப் பெரிய அற்புதங்களில் ஒன்றாகும்.

அல் இஸ்ரா என்றால் இரவுப் பயணம் செய்தல் என்பது அர்த்தமாகும். நபி (ஸல்) அவர்கள், ஒரு நாள் இரவு மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து ஜெரூஸலத்திலுள்ள 'மஸ்ஜிதுல் அக்ஸா' விற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இதுவே 'அல் இஸ்ரா' என்று அழைக்கப்படுகின்றது.

எனவே, ரஜப் மாதத்தின் மகத்துவத்தைப் பேணுவோம், இயன்றளவு அதில் நோன்பு நோற்று பிரார்த்திப்போம். எதிர்வரக்கூடிய ரமழானுக்கான திட்டமிடல் ஒன்றை தயாரித்துக் கொள்வோம். ரமழான் தொடர்பான சட்டதிட்டங்களை கற்றுக் கொள்வதுடன் விடுபட்ட கழா நோன்புகள் அனைத்தையும் நோற்றுக் கொள்வோம். வல்ல நாயன் அல்லாஹ் ரஜப் மற்றும் ஷஃபான் ஆகிய மாதங்களில் நல்லமல் புரிந்து சங்கைமிகு ரமழானை அடைய எம்மனைவருக்கும் தௌபீக் செய்யட்டும்.

**அப்துல் காலித் முப்தி முஹம்மது மின்ஹாஜ்...**
**(காஷிபி, மளாஹிரி) நிந்தவூர்**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# புன்னகையின் மகத்துவம்

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், 'எந்த ஒரு நன்மையையும் குறைவாகக் கருதாதீர்கள். உங்கள் சகோதரனை புன்முறுவலுடன் சந்திப்பதாக இருந்தாலும் சரியே... என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இதேவேளை ஜரீர் பின் அப்துல்லாஹ் அல்பஜ்வி (ரழி) அவர்கள், 'நான் இஸ்லாத்தை ஏற்ற நாள் தொடக்கம் நபி (ஸல்) அவர்கள் என்னை எப்போது பார்த்தாலும் புன்முறுவல் பூத்த நிலையிலேயே வரவேற்பார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

புன்முறுவல் என்பது பல வகையிலானது. முகத்தில் எப்போதும் நிரந்தரமாக குடியிருக்கும், புன்னகை அதில் ஒருவகையாகும். நீங்கள் ஒரு ஆசிரியராக வகுப்பறையில் பிரவேசிக்கும் போதும், மாணவர்களைச் சந்திக்கும் போதும் புன்னகையுடன் இருங்கள். விமானத்தில் பறக்கின்ற போது அல்லது வீதியில் பயணிக்கின்ற போது புன்னகையுடன் இருங்கள். எப்போதும் மலர்ந்த முகம், எப்போதும் புன்முறுவல். அதுதான் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையாகும்.

ஆனால் கோபத்திலும் கஷ்டமான தருணங்களிலும் கலக்கமான நேரங்களிலும் புன்முறுவல் செய்வது சாதாரண மனிதர்களால் இயலாத காரியம். இருப்பினும் நபி (ஸல்) அவர்களால் அப்படி இருக்க முடிந்தது. நபி (ஸல்) அவர்களும், அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்களும் ஒருநாள் மதீனாவின் வீதி வழியே நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அச்சமயம் நபியவர்களின் கழுத்தில் நஜ்ரான் தேசத்தை சேர்ந்த கடினமான ஒரு சால்வை (துண்டு) கிடந்தது. நபிகளாரின் பின்னால் வேகமாக வந்த ஒரு கிராமவாசி வந்த வேகத்தில் அந்தத் துண்டை பிடித்து மூர்க்கத்தனமாக இழுத்தார். அதுவும் கழுத்தில் காயம் ஏற்படும் அளவுக்கு இழுத்தார். இது தொடர்பில் அனஸ்(ரழி) அவர்கள் நபிகளாரின் முகத்தின் ஓரங்களில் மூர்க்கமாக இழுத்த அடையாளங்கள் பதிந்திருந்தன. 'ஓ முஹம்மதே! இறைவன் உமக்கு தந்திருக்கும் செல்வத்திலிருந்து எனக்கும் பங்குதாரும்'! என்பதுதான் அக்கிராமவாசியின் கோரிக்கை.

அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், திரும்பிப் பார்த்தார்கள்! சிரித்தார்கள்! அவருக்கு உதவிகள் செய்யுமாறு தன்னுடன் வந்தவர்களுக்கு உத்தரவிட்டார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்கள் கோபப்படவுமில்லை. அவரைத் தண்டிக்க முயலவில்லை. அதனால் தான் நபி(ஸல்) அவர்கள், 'மல்யுத்தம் புரிபவர் உண்மையில் மாவீரர் அல்ல. மாறாக கோபத்தின் பொழுது தம் மனதை அடக்கி (பொறுமை) காப்பவரே மாவீரர் ஆவார் என்று கூறினார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

அனஸ் (ரழி) அவர்களுடைய இளைய சகோதரனில் ஒருவர் அபூ உமாமா (ரழி) ஆவார். அவரிடத்தில் ஒரு சிறிய சிட்டுக்குருவி இருந்தது. அதற்கு நுகைர் என பெயரிட்டிருந்தார். அவர் எப்பொழுதும் அதனுடன் விளையாடிக் கொண்டே இருப்பார். நபிகளாரிடத்தில் அனஸ் (ரழி) அவர்கள் வரும் போதெல்லாம் இவரும் கூடவே வருவார். இவரைக் காணும் போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் விளையாட்டாக பேசுவது வழக்கம். ஒருநாள் கவலை தோய்ந்த முகத்துடன் அவர் இருக்கக் கண்ட நபியவர்கள் 'என்ன நடந்தது?' என்று விசாரித்தார்கள். சிட்டுக்குருவி இறந்த விடயத்தை தோழர்கள் கூறியதும் அச்சிறுவனை ஆறுதல் படுத்துவதற்காக நபியவர்கள் விளையாட்டாக பேசத் தொடங்கினார்கள்.

'அபூ உமைர்! நுகைருக்கு என்ன நடந்தது?' என்று அச்சிறுவனுடன் அலவளாவிய படி நபி (ஸல்) அவர்கள் அவரைச் சாந்தப்படுத்தினார்கள்'

(ஆதாரம்: மாலிக் ஹயாது ஸஷா).

'ஒட்டகம் ஒன்று எனக்கு இனாமாகத் தாருங்கள்' என்று கேட்டவரிடத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ஒட்டகக்குட்டிதான் தருவேன்' என்றதும் 'ஒட்டகக்குட்டி வேண்டாம்' என்று அவர் கூறினார். அப்போது நபிகளார், 'எல்லா ஒட்டகமும் இன்னொரு ஒட்டகத்தின் குட்டி தானே' என்று கூறி புன்முறுவல் பூத்தார்கள்.

மதீனாவுக்கு அருகே இருக்கும் கிராமத்தை சேர்ந்த ஒரு நபித்தோழரான ஸாஹிர் (ரழி) அவர்கள் நபிகளாரை பார்ப்பதற்கு வரும் போதெல்லாம் நகரத்தில் கிடைக்காத ஏதாவது அபூர்வப் பொருளைப் பரிசாகக் கொண்டு வருவார். நபிகளாரும் அவருக்கு கிராமத்தில் கிடைக்காத பொருளை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

எப்போது நபி(ஸல்) அவர்கள் அவரைக் கண்டாலும் 'ஸாஹிர் நமது கிராமத்து தோழர் நாம் அவரது நகரத்து நண்பர்' என்று கூறி அவரை அதிகம் விரும்பினார்கள். ஆனால் அவர் சற்று கடுகடுப்பானவராக இருப்பதால் நபித் தோழர்களோ அவ்வளவாக இவரை நெருங்குவதில்லை.

ஒருநாள் மதீனாவின் கடைத்தெரு வீதியில் ஸாஹிர் (ரழி) மும்முரமாக வியாபாரம் செய்து கொண்டிருந்தார். மெதுவாக வந்த நபி(ஸல்) அவர்கள் ஸாஹிர் (ரழி) அவரின் பின்னால் வந்து அவருடைய கழுத்தோடு தன் இரு கைகளையும் போட்டு இறுக்கி அணைத்தார்கள். இந்த திடீர் நிகழ்வை எதிர்பார்க்காத ஸாஹிர் விடுங்கள்... விடுங்கள்... யார் அது...? என்று சத்தம் போட்டார். திரும்பிப் பார்த்து நபிகளார் என்று தெரிந்ததும், தன் முதுகை நபி(ஸல்) அவர்களின் உடலுடன் ஒட்டியவாறு அசையாமல் நின்றார். அவருடன் விளையாட்டாக நபி(ஸல்), 'இந்த அடிமையை விலைக்கு வாங்குபவர் யார்?' என்று சப்தமாக மக்களிடம் கேட்டார்கள். விளையாட்டுக்குத்தான் என்றாலும் ஸாஹிர் கடுகடுப்பானவர் என்பதால் யாரும் வாங்க விரும்பவில்லை. அப்போது நபிகளாரிடம் ஸாஹிர் கூறினார். 'நான் ஒரு செல்லா காசு, என்னை யாரும் விலைக்கு வாங்க மாட்டார்கள்'

உடனே நபி(ஸல்) அவர்கள், 'ஆனால் அல்லாஹ்விடத்தில் நீர் விலை மதிக்க முடியாத ஒரு மனிதர்' என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: அஹ்மத்). ஒரு சோற்றுப் பருக்கை சிதறியதன் பெறுமதி நமக்குத் தெரியாது. அதை எடுத்துச் செல்லும் எறும்புக்குத் தான் அது புரியும். அவ்வாறு தான் புன்னகையும் ஆகும். இம்மையில் இல்லாவிட்டாலும் மறுமையில் அதன் மதிப்பு நமக்குத் தெரியவரும்.

**'...எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர் (அங்கு) அதனையும் கண்டு கொள்வார். (அவ்வாறே) எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ அதனையும் அவன் அங்கு கண்டுகொள்வான். (அல் குர்ஆன் 99:38)**

தொகுப்பு: **உம்மு பாதிமா அஸ்கா...**

# இஸ்லாம் போதிக்கும் சகவாழ்வு

எந்த மனிதனும் தன்னந்தனியாக வாழ்ந்து விட முடியாது. ஒருவரோடு ஒருவர் சேர்ந்து, இணைந்து, இசைந்து தான் வாழ வேண்டும். அப்படி வாழுகின்ற போது மதம், இனம், மொழி, நிறம், கலை, கலாசாரம், சமயம், பண்பாடு போன்றவற்றை அவன் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

"மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவில் இருந்து தான் உற்பத்தி செய்தான். பின்பு அவ்விருவரில் இருந்தும் ஆண்கள், பெண்கள் என பலரையும் இப்பூமியில் பரப்பினான். ஆகவே, அத்தகைய அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக் கேட்டுக்கொள்கின்றீர்கள். இன்னும் இரத்தக் கலப்பான தொப்புள் கொடி உறவினர்களிடமும் அன்பாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கின்றான்". (அல் குர்ஆன் 4:1)

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். ஆகவே, உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்கள் தான் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், யாவற்றையும் சூழ்ந்து தெரிந்தவன்". (அல் குர்ஆன் 49:13)

இந்த இரண்டு வசனங்களும் மனிதன் எங்கிருந்து வந்தவன், அவன் எப்படிப்பட்டவன், அவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவனைச் சுற்றியிருப்பவர்களும் அவனைப் போன்ற மனிதர்கள் தான் என்பதை வெகு அழகாக எடுத்துக் கூறுகிறது. இறுதியாக நீங்கள் யாராக இருந்தாலும் நீங்களும் மனிதர் தான் என்பதை மட்டும் மறந்து விடாதீர் என்பதை சற்று அழுத்தமாகவே உணர்த்திக் காட்டுகிறது. அதனால் தீய சக்திகளுக்கும், தீய சிந்தனைகளுக்கும் எப்போதுமே நாம் உடன்பட்டு விடக்கூடாது. நபி(ஸல்) அவர்களும் அன்னாரது அருமைத் தோழர்களும் அவ்வாறு தான் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

"அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் புசிப்பவனாக இருப்பவன் உண்மையான இறைவிசுவாசியல்ல...!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியது அனைத்து வகையான அண்டை வீட்டார்களுக்கும் பொருந்தும். இறைவன் புறத் தோற்றங்களையும், புற உருவங்களையும் பார்ப்பதில்லை. மனிதன் தான் அநேக நேரங்களில் புறத்தோற்றங்களையும் புற உருவங்களையும் பார்க்கக்கூடியவனாக இருக்கின்றான்.

எவர் ஒரு ஆத்மாவை வாழ வைக்கிறாரோ, அவர் அனைத்து ஆத்மாக்களையும் வாழ வைத்தவரைப் போன்றவர் ஆவார்" (அல் குர்ஆன் 5:32) என்ற இறைவசனம் பொதுமைத் தன்மையுடன் தான் உரையாடுகிறது, இங்கு சாதி, மத பேதங்கள் அறவே கூறப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இன்னும் ஒருபடி மேலே போய் "உங்களிடமிருந்து மற்றவர்கள் பெறும் நிம்மதியில் தான் உங்களது முழு நிம்மதியும் நிறைந்திருக்கிறது" என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'இஸ்லாம்', 'முஸ்லிம்' என்ற அரபுச் சொல்லிற்கு கூட முறையே 'நிம்மதியைத் தருதல்' என்றும், 'நிம்மதியைத் தருபவர்' என்றும் தான் பொருள்.

எனவே இஸ்லாத்தின் நற்பெயருக்கு ஏற்ப நன் மக்களாக நடந்து கொள்வதில் தான் நமக்கான எதிர்காலம் பிரகாசிக்கும். அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

**அபூ மதீஹா...**



# அல்குர்ஆனை ஓதுவோம்

நபிகள் (ஸல்) அவர்கள் ஹிராக் குகையில் தனிமையில் தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அல்லாஹ்வின் கட்டளைப் படி ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னார் முன் தோன்றி 'அல்லாஹ்வின் தூதரே! அச்சம் வேண்டாம். நான் வானவர் ஜிப்ரீல் (அலை). அல்லாஹ்வின் ஏவல்படி குர்ஆனுடைய மாதமாகிய ரமழான் மாதத்தில் தங்களுக்குக் குர்ஆனைக் கற்றுக் கொடுக்க வந்துள்ளேன்' எனக் கூறி ஸலாம் கூறியதோடு, 'இக்ரஃ' ஓதுவீராக... எனப் பணித்தார்கள்.

நபி (ஸல்) அவர்களும் ஓதினார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கலாம், அல்குர்ஆனில் இருந்து கற்றுக்கொடுத்த முதல் வசனம் இதுவாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை அல்லாஹ் இவ்வுலகிற்கு அனுப்பியதின் நோக்கமே அல்குர்ஆனை உலகத்தாருக்குப் போதிப்பதற்காகவேயாகும். உங்களில் சிறந்த மனிதர்கள் அல்குர்ஆனைக் கற்று, அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரேயாவார். (ஆதாரம் புஹாரி, முஸ்லிம், முஸ்னத் அஹமத்) என்றும் 'ஒரு கூட்டத்தாருடன் இருந்து குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தால் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் ரஹ்மத்தும், இறங்கும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத்)

அல்குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுள்ளார்கள். குறிப்பாக உமர் இப்னு காத்தாப் (ரழி) அவர்கள் குர்ஆன் ஓதப்படுவதை கேட்டுக் கொண்டிருந்த பின்புதான் இஸ்லாத்தை ஏற்றார்கள். அதேபோன்று தான் நஜ்ஜாஸ் மன்னரின் கூட்டத்தார் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

மேலும் நபி (ஸல்) அவர்கள், குர்ஆனை ஓதுங்கள், அது மறுமையில் பரிந்து பேசக்கூடியதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் முஸ்லிம்) குறிப்பாக நோன்பும், அல்குர்ஆனும் மறுமையில் அடியானுக்குப் பரிந்து பேசும் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: அஹமத் ஹாகிம்).

உடலுக்கு உயிர் எவ்வாறு முக்கியமோ அதேபோன்று இறை விசுவாசியின் உடலுக்கு அல்குர்ஆன் மிகவும் அவசியமானது.

ஒருவன் குர்ஆனை ஓதிக்கொண்டிருக்கையில் ஒவ்வொரு ஆயத்திற்கும் இறைவனிடத்தில் அந்த அடியானின் அந்தஸ்து அதிகரித்துக் கொண்டே செல்லும் (ஆதாரம் திர்மிதி) என்று குறிப்பிட்ட நபி (ஸல்) அவர்கள், 'குர்ஆனை உடையவர்களுக்கு மறுமையில் இவ்வாறு கூறப்படும் ஓதுவீராக... நீர் தங்குமிடம், நீர் ஓதும் இறுதி வசனத்தில் உள்ளது (ஆதாரம் திர்மிதி) என்றும் குர்ஆனை மனனமிட்டு ஓதுபவர்கள் சங்கைமிகு வானவர்களுடன் இருப்பார்கள். அவர்களுக்கு இரண்டு கூலிகள் உண்டு (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) என்றும் கூறியுள்ளார்க்ள.

எனவே அல் குர்ஆனை ஓதுவதிலும், விளங்குவதிலும் கற்றுக்கொடுப்பதிலும் கவனம் செலுத்துவோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அருளைப் பெற்றிடுவோம்.

**ஏ.ஸீ.எம். ஹனீபா...**
மஸ்ஸல, பேருவளை

# பொது இணக்கப்பாட்டுடனான திட்டங்களை நடைமுறைப்படுத்த எம்பிக்களுக்கு எந்தவித தடையும் கிடையாது

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரதும் சிறப்புரிமையை இல்லா தொழிக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் தமது யோசனையின் கீழான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எந்த தடையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி குழு மற்றும் கிராம மட்டத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இணைந்து பொது இணக்கப்பாட்டுடனான யோசனைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 27 இன் கீழ் 2ல் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

வரவு செலவுத் திட்டத்தினை எதிர்த்த குழுவினர் அதன் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ள போது பலாத்காரமாக அதன் பங்காளிகளாகி யுள்ளதுடன் அவர்கள் வரவு செலவு திட்டத்தை எதிர்த்தாலும் மக்கள் பிரதிநிதிகளாக குழுக்களில் கலந்து கொண்டு மக்கள் இணக்கப்பாட்டுடன் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த தடையும் கிடையாது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டி யெழுப்புவதில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவின் ஒத்துழைப்பை குறைவாக மதிப்பிட முடியாது.

மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பல வருடங்களுக்குப் பின் பிரதேச அபிவிருத்திக்கென 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் தெரிவு செய்யப்பட்டுள்ள 91பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக மேலும் 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சினாலா வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் ஊடாக மாவட்ட இணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. நேர்மையான வகையில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அந்த ஆலோசனைகள் அமைந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.பொது இணைக்கப்பாட்டுடனான திட்டங்களை நடைமுறைப்படுத்த எம்பிக்களுக்கு எந்தவித தடையும் கிடையாது.

## கட்டுநாயக்க நெடுஞ்சாலை வாகன விபத்தில்...

கால்களில் ஏற்பட்ட பாரிய காயங்கள் காரணமாகவே மரணம் ஏற்பட்டுள்ளதாக வட கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரதம விசேட நீதிமன்ற மருத்துவர் ரமேஷ் அழகியவன்ன மரண பரிசோதனையின் பின்னர் தெரிவித்தார்.

இதன் பின்னர், இராஜாங்க அமைச்சரின் பூதவுடல் நேற்று வைத்தியசாலையிலிருந்து கொண்டுவரப்பட்டு பிற்பகல் 5.30 மணி முதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், இன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு புத்தளத்திலுள்ள அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இராஜாங்க அமைச்சரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர். இதேவேளை கொழும்பிலுள்ள இராஜாங்க அமைச்சரின் இல்லத்துக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொண்டார்.

இராஜாங்க அமைச்சரின் இறுதிக் கிரியைகள் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரச்சிக்கட்டுவ கத்தோலிக்க மயானத்தில் இடம்பெறவுள்ளதாக, அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

4 பிள்ளைகளின் தந்தையாகிய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த 2015ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்டு 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார். அதற்கு முன்னர் அவர் வடமேல் மாகாணத்தில் கடற்றொழில் அமைச்சராகவும் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை உறுப்பினராகவும் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இனி முன்னணி ஏற்றுமதி துறையாக...

அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (24) நடைபெற்ற இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதுவரை பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியுமெனவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் போட்டிமிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுமெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் வலுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சி துறைக்காக சுமார் 8 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது, இனிப்புப் பண்ட தொழிற்றுறையினூடாக தேசிய பொருளாதாரத்துக்கு ஆற்றிய பங்களிப்பை பாராட்டி, நாட்டிலுள்ள எட்டு முன்னணி இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை வழங்கி வைத்தார். இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் கலாநிதி சமித பெரேரா நினைவுப்பரிசு வழங்கினார். மெலிபன் ஸ்தாபகர் ஏ.ஜி.ஹின்னி அப்புஹாமி, கெண்டோஸ் ஸ்தாபகர் உபாலி விஜேவர்தன, Elephant House ஸ்தாபகர் ஆர்தர் வொன் போஸ்னர், மஞ்சி ஸ்தாபகர் மேனக விக்ரமசிங்க, மோதா ஸ்தாபகர் ஜூலியஸ் மோதா, உஸ்வத்த ஸ்தாபகர் பி.ஜே.சி.பெரேரா, லக்கி லேண்ட் ஸ்தாபகர் சிங்கசாமி முத்தையா, செரிஸ் பிஸ்கட் ஸ்தாபகர் விதானகே ஜோன் அப்புஹாமி ஆகியோருக்கு ஜனாதிபதியால் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு...

வலியுறுத்தியுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று முன்தினம் (24) அனுப்பிய கடிதத்திலேயே தமிழக முதல்வர் ஸ்டாலின் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். தமிழக கடற்றொழிலாளர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாகவும், அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "தமிழக கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் இதுபோன்று கைது செய்யப்படுவதை தவிர்க்கவும், இந்திய கடற்றொழிலாளர்களின் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏதுவாகவும், உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கை குழுவை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் கடந்த 22ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழகத்தை சேர்ந்த 6 கடற்றொழிலாளர்களை அவர்களின் மீன்பிடிப் படகுகளுடன் விடுதலை செய்வதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன், இலங்கை சிறையிலுள்ள ஏனைய தமிழக கடற்றொழிலாளர்களையும் அவர்களின் படகுகளுடன் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினை நீடித்தால் பதற்றமான சூழ்நிலை உருவாகுமென்பதால், இந்த விடயம் தொடர்பாக மத்திய அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

## 09வது பாராளுமன்றத்தின்...

தகவல்கள் தெரிவிக்கின்றன. பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் (24) நிறைவு செய்யப்படவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் அது இன்றையதினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டதாகவும், அவ்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுமெனவும் இதற்காக மிக எளிமையான வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடைசியாக பாராளுமன்ற அமர்வுகள் கடந்த 23ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்நிலையில், பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடைவதுடன், கோப் மற்றும் கோபா உள்ளிட்ட பல தெரிவுக் குழுக்கள் அதன் மூலம் இரத்தாகி, அத்தெரிவுக்குழுக்கள் அனைத்தும் மீண்டும் புதிதாக நியமிக்கப்படுமெனவும், அவ்வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## கந்தக்காடு புனர்வாழ்வு...

நேற்று அதிகாலை சுங்காவில பாலத்துக்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நவசேனபுர தொழிற்பயிற்சி மத்திய நிலையத்திலுள்ள கைதிகள் மற்றும் கந்தக்காடு தொழிற்பயிற்சி மத்திய நிலையத்திலுள்ள கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்தே இந்தக் கைதிகள் தப்பிச் சென்றதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற கைதிகளில் ஏனைய கைதிகள் சோமாவதி வனப்பகுதி மற்றும் அதற்கு அண்டிய இடங்களில் மறைந்திருப்பதாகத் தெரிவித்த பொலிஸார், இவர்களை கைது செய்வதற்காக இராணுவத்தினருடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 408 கைதிகள் புனர்வாழ்வு பெற்று வருவதாகவும் அவர்களில் சுமார் 200 பேர் தப்பிச் சென்றிருக்கலாமெனவும், வெலிக்கந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

## தரமற்ற மின் வேலிகளால்...

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது. கடந்த வருடத்தில் சுமார் 470 காட்டு யானைகள் உயிரிழந்ததாகவும் அவற்றில் 50 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகவும், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது. இந்நிலையில் நாடளாவிய ரீதியில் தரம் குறைந்த மின்சார வேலிகளை ஆய்வு செய்யும் வேலைத்திட்டம் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், தரமற்ற மின்சார வேலிகளால் காட்டு யானைகள் உயிரிழந்தமை கடந்த காலத்தில் பதிவாகியவதால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தரமற்ற மின்சார வேலிகளை அகற்றி தரமானதாக அவற்றை மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளதாகவும், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது.

## ஆனமடுவ விபத்தில் தந்தை,...

தாய் ஆபத்தான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நவகத்தேகம, வெலேவெவ பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ விசேட படையின் லெப்டினன்ட் பதவி வகித்த ஜீவக செனவிரத்ன (38 வயது) மற்றும் அவரது மகன் மனுஜய பிரகாஷ்வர (10 வயது) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இம்மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிளும் மரம் ஏற்றிய லொறியொன்றும் மோதியே இந்த விபத்து சம்பவித்ததாகவும் நவகத்தேகம பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள ரஜமஹா விகாரைக்கு முன்பாக இந்த விபத்து சம்பவித்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக ஆனமடுவ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில் உயிரிழந்த இராஜாங்க....

புதுமணத் தம்பதியினருடன் இணைந்து இறுதியாக எடுத்துக்கொண்ட செல்ஃபி தற்போது முகநூலில் வைரலாகியுள்ளது.

இந்த செல்ஃபியை எடுத்தவர் தனது தனிப்பட்ட முகநூல் கணக்கில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

பண்டாரவத்தை, சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் நடைபெற்ற திருமண வைபவத்தில் நேற்றுமுன்தினம் (24) இரவு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கலந்துகொண்டுவிட்டு, கொழும்பு திரும்பிய போதே, இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கினார். இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த சொகுசு வாகனம், அதே திசையில் முன்னால் பயணித்த கொள்கலன் பாரவூர்தியின் பின்பக்கத்தில் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## குற்றவியல் தண்டனை கோவையில்...

குற்றவியல் தண்டனைக் கோவையிலுள்ள பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் அந்தச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் மற்றும் ஆண் பிள்ளைகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துதல் குற்றச்செயல் என்பதை அறிமுகப்படுத்துவதற்குமாக 2021ஆம் வருடம் ஜனவரி மாதம் 18ஆம் திகதி மற்றும் அந்தாண்டின் ஜூன் 28ஆம் திகதிகளில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களிலேயே அது தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் சட்டமூலத்தை தயாரிப்பது தொடர்பாக சட்ட மாஅதிபரின் யோசனைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அந்த வகையில் அச்சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதனையடுத்து பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக அதனை சமர்ப்பிப்பதற்கும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பத்திரத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## விசேட குழுவின் பரிந்துரை...

நேற்று அமைச்சரிடம் கையளித்தது. சம்பள திருத்தம் மற்றும் சம்பள முரண்பாடுகளை களைதல், அதிபர்களின் கொடுப்பனவை 6,000 ரூபாவிலிருந்து 15,000 ரூபாவாக அதிகரித்தல், அரசசேவை அதிகாரிகளுக்கு கிடைக்கும் தொடர்பாடல் பயணச் செலவு, வாகனம், வீடு உள்ளிட்ட கொடுப்பனவுகள் மற்றும் தூரப் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்களுக்கான விசேட கொடுப்பனவு தொடர்பாக 6 முக்கிய விடயங்கள் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. தற்போது 16 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணப்படும் அதிபர் சேவை தரம் III, II, I க்கு உட்பட்ட அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் உப அதிபர்கள், சேவைகளை பாடசாலை கட்டமைப்பின் புதிய தேவைகளை கவனத்திற்கொண்டு அதிபர்களுக்கான அதி உயர் தரத்தை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அதனூடாக சேவை யாப்பு திருத்தம் மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், கல்வித்துறை அதிகாரிகளிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்
## (26.01.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
நவீன கருவிகளின் உதவியுடன் வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். கூட்டு தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் குறையாது.

**ரிஷபம் :**
குடும்பத்தில் முன்னேற்றமான போக்கு காணப்படும். கடனை சமாளிப்பீர்கள். நண்பர்களின் உதவி கிட்டும்.

**மிதுனம்:**
பண வசதிகள் போதுமானதாக இருக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்க பெறும்.

**கடகம்:**
குடும்பத்தில் சிறு சிறு கடன் தொல்லைகள் இருந்தாலும் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. தாமதங்கள் வந்தாலும் முன்னேறுவீர்கள்.

**சிம்மம்:**
குடும்பத்தில் கடன் பிரச்சினை தீர்ந்து அமைதி நிலவும். புதிய கிளை தொழில் தொடங்கும் எண்ணம் தோன்றும் .

**கன்னி:**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகாண ஏற்பாடுகளை செய்வீர்கள். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பண வசதி அதிகமாகும்.

**துலாம்:**
குடும்பத்தில் பழைய கடன் தொல்லைகள் தலைகாட்டும். கலைஞர்கள் சிலருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்:**
கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் அதிக லாபம் ஏற்படும். குடும்பம் சீராக நடைபெற்றாலும் சிறு பிரச்சினை தோன்றி மறையும்.

**தனுசு:**
கலைஞர்கள் அதிக வருமானம் வரும் ஒப்பந்தங்களை பெற கடுமையாக முயற்சிப்பார்கள்.

**மகரம்:**
கூட்டுத் தொழிலில் போட்டி அதிகரித்தாலும் எதிர்பார்க்கும் லாபம் உண்டு. குடும்பத்தில் சீரான போக்கு காணப்படும்.

**கும்பம்:**
கூட்டுத் தொழில் வியாபாரத்தில் லாபம் கூடுதலாகும். குடும்பத்தில் தம்பதிகள் ஒற்றுமை அதிகரிக்கும்.

**மீனம்:**
போட்டியாளர்கள் கரங்கள் ஓங்கி இருக்கும். பணியாளர்களின் வேலைகளை அடிக்கடி கண்காணித்து வாருங்கள்.

## எண்ணெய் விலையில் திடீர்...

வகை மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 80.04 அமெரிக்க டொலராக உள்ளது.

இதேவேளை, சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்றையதினம் 2.68 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இசைஞானி இளையராஜா...

மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (28) ஆகிய இரு தினங்களில் கொழும்பில் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளதுடன், இந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தனது பங்களிப்பை வழங்கும் நோக்கில் அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக அவர் நாட்டை வந்தடைந்ததாக, இசை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## வெற்றிடத்துக்கு ஜகத்...

பிரியங்கர செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கர நியமிக்கப்பட்டுள்ளார். தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று (26) அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்ற திடீர் விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழந்தார்.

## கட்டார் விபத்தில்...

சிக்கி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். நவகிரியைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளையின் தந்தையான 24 வயதுடைய டிபில்ஸ்குமார் துவிகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு, நேற்று முன்தினம் (24) இறுதிச்சடங்கு நடைபெற்றதுடன், இந்தச் சம்பவம் யாழ். நவகிரி பிரதேசத்தில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பொதுச் செயலாளர் பதவிக்கு...

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக ஞா.சிறிநேசன் தெரிவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் இருப்பதாக தாம் அறிவதாகவும், அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் பதவி மட்டக்களப்புக்கு தரப்பட வேண்டுமென்று தாம் முன்மொழிவை வைக்கும் போது, மட்டக்களப்பிலிருந்து பொதுச் செயலாளர் பதவிக்கு மற்றுமொரு பிரேரணை முன்வைக்கப்படக் கூடாதென்பதில் தாம் தெளிவாக இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி பாரிய வரலாற்றை கொண்ட கட்சியெனவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் சுட்டிக்காட்டினார்.

## மருத்துவ சேவை விருத்திக்காக...

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், விசேட வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவ நிறுவனம் உட்பட அனைத்துத் துறைகளின் மருத்துவர்களின் பங்களிப்புடன் இப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை எதிர்காலத்தில் நாடு சுமையாக உணராத வகையில் இந்த நாட்டு மக்களுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்கக்கூடிய ஓர் அமைப்பு தொடர்பாக பேச வேண்டுமென்றார்.

மேலும், மக்களுக்கு அதிகளவான சேவைகளை எவ்வாறு வழங்க முடியுமெனக் கேள்வியெழுப்பிய அவர், மருந்துகளுக்கு செலவழிக்கும் பணத்துக்கு நியாயம் செய்வோம், குறைந்த செலவில் இந்த சேவையை வழங்குவோம். அதை எவ்வாறு செய்வதென்பது தொடர்பாக கலந்துரையாடியதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை புதிய அத்தியாயத்துக்கு கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தை எட்டியதாகவும், மருத்துவர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்தார்.

# தர்கா நகரை கல்வியின் கேந்திர நிலையமாக்கும் முயற்சியில் 'ரூமி ஹாஷிம் கல்வி நிலையம்'



விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவுகளில் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை மேற்கொள்ளவென மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது தான் தர்கா நகர் ரூமி ஹாஷிம் கல்வி நிலையமாகும். 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்வி நிலையம் முற்றிலும் இலாப நோக்கற்றதாகும். க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞான, கணித பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கென விஷேட பிரத்தியேக வகுப்புக்களை நாட்டின் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தி வருகின்றது. இதன் ஊடாக மாணவ, மாணவியருக்கு விஞ்ஞானம், கணிதப் பிரிவுகளில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பதே இந்நிலையத்தின் அடிப்படை நோக்கமாக உள்ளது.

தர்கா நகரானது இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவின் மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டத்தின் ஒரு பிரதேசமாகும். இங்கு பிறந்து வளர்ந்த ரூமி ஹாஷிமின் சிந்தனையில் உருவானது தான் இந்த தர்கா நகர் விஞ்ஞான கல்வித்திட்டமாகும்.

தர்கா நகர் ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தினதும் இக்கல்வித் திட்டத்தினதும் தலைவராகவும் தர்கா நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்களான ஹாஷிம், வஜீஹா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராகவும் அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவராகவும் விளங்கும் கலாநிதி ரூமி ஹாஷிம் இத்திட்டம் குறித்து குறிப்பிடும் போது, 'எனது பெற்றோரும் எனது குடும்ப அங்கத்தவர்களும் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் தான் எப்போதும் எனக்கு ஆலோசனை, அறிவுரை வழங்கி இருக்கின்றார்கள். இதன் நிமித்தம் எனது குடும்பத்தினரும், சகோதரிகளும் என்னோடு கைகோர்த்து முழுமையான ஒத்துழைப்பை நல்கி உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதேநேரம் எனது கல்வி செயற்பாடுகளுக்கும் சமூகப் பணிகளுக்கும் நல்ல ஆலோசகராகவும், அனைத்து வழிகளிலும் எனக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும், நின்று என்னோடு இணைந்து எனது உடன்பிறந்த சகோதரர் மர்ஹூம் அல்ஹாஜ் ரஷ்மி ஹாசிம் பயணித்தார். இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட முன்னரே சுமார் 25 வருடங்கள் நானும் ரஸ்மி ஹாஷிமும் கல்விக்காகவும், சமூகத்திற்காகவும், ஏராளமான சேவைகளை செய்துள்ளோம். அவை என்றும் மறக்க முடியாதவை.

எனினும் அவரது மறைவுக்குப் பின் என்னோடு தோழமையோடு, தோளோடு தோல் நின்று, இணைந்த கரங்களாக, எனது வெற்றியின் ஒரு முக்கியஸ்தராக, எனது சமூகப் பணியில் உடன் பிறவா சகோதரராக எச்.ஜே. ஜெஸூக் அஹமட் இணைந்து பயணிக்கிறார். அவரது சேவைகள் அர்ப்பணிப்பு மிக்கது. விலை மதிக்க முடியாதது' என்றுள்ளார்.

கல்வியின் ஊடாகவே எந்தவொரு சமூகமும் சுயமாகவும் தனித்துவத்துடனும் முன்னேற்றமடையக் கூடியதாக இருக்கும். கல்வியின் மூலமே முழுமையான முன்னேற்றத்தையும் அடைந்து கொள்ள முடியும். இந்தப் பின்புலத்தில் தான் நவீன உலகின் தொழிற்சந்தைக்கு ஏற்ப எமது இளம் பராயத்தினரை தயார்படுத்தும் வகையில் விஞ்ஞான, கணிதப் பிரிவுகளில் முன்னேறிச் செல்வதற்கு உதவும் வகையில் க.பொ.த உயர் தரத்தின் விஞ்ஞான, கணித பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கென பிரத்தியேக வகுப்புக்களை முன்னணி ஆசிரியர்களை கொண்டு நடாத்துகின்றோம்' என்றும் குறிப்பிடுகிறார் கலாநிதி ரூமி ஹாஷிம்.

இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் சமூக நலன் விரும்பிகளும் பிரதேசவாசிகளும் தர்கா நகர் விஞ்ஞான திட்டத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்புக்களை நல்குவதோடு பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

தர்கா நகரை இலங்கையின் உயர் கல்வியின் கேந்திர நிலையங்களில் ஒன்றாக மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதாக தர்கா நகர் ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் செயலாளரும் 'பைன் கியூ பார்மசூட்டிக்கல் நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜெஸூக் அஹமட் தெரிவிக்கின்றார்.



என்றாலும் இவ்விஞ்ஞான கல்வி திட்டத்தின் ஆரம்பம் குறித்து நிலையத்தின் செயலாளர் ஜெஸூக் அஹமட் குறிப்பிடும் போது, தர்கா நகர் ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் நபீல் நஜீம் உள்ளிட்ட சில மாணவர்கள் 2014 இல் க.பொ.த. மாணவர்களுக்கு திறமையான ஆசிரியர்களை கொண்டு கல்விக் கருத்தரங்கொன்றை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அதனை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பொருளாதார உதவியைத் திரட்டும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். அச்சமயம் கலாநிதி ரூமி ஹாசிமை நாடினால் இக்கருத்தரங்குக்கு தேவையான நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்த அவர்கள் என்னை அணுகினர். அதற்கேற்க கலாநிதி ரூமியுடன் இவ்விளைஞர்களுக்கு சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்தேன். அதனடிப்படையில் அவர்கள் குறித்த கல்வி கருத்தரங்கை வெற்றிகரமாக நடாத்தினர்.



தர்கா நகரில் அளுத்கம் வீதிய பெண்கள் தேசிய பாடசாலை, ஸாஹிரா கல்லூரி மற்றும் அல் ஹம்றா என மூன்று பிரதான பாடசாலைகள் உள்ளன. என்றாலும் இப்பாடசாலைகளில் கற்று க.பொ.த உயர் தர கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி பெறும் மாணவ மாணவியரில் பொருளாதார வசதி படைத்தவர்கள் கொழும்புக்கும் தூர இடங்களுக்கு சென்று தங்கியிருந்தும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லும் நிலை அன்றைய காலகட்டத்தில் காணப்பட்டது. ஆனால் பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் அவ்வாறு பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தனர்.

இவ்வாறான சூழலில் இப்பிரதேச மாணவ, மாணவிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு பெற்றோர்களதும் நலன் விரும்பிகளதும் பழைய மாணவர்களதும் வேண்டுகோளின் அடிப்படையில் ஏழு மாணவர்களுடன் தான் தர்கா நகர் விஞ்ஞான திட்டம் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு தர்கா நகர் ஸாஹிரா கல்லூரியின் கணிதப் பிரிவு ஆசிரியர் எம்.எஸ்.எம். ஸபான் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் அன்று தொடக்கம் அர்ப்பணிப்புக்களுடன் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். தற்போது 250 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நிலையத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவுகளில் கல்வி பெறுகின்றனர்.

ஆரம்பத்தில் இத்திட்டத்தின் பிரத்தியேக வகுப்புக்கள் ஸஹிராக் கல்லூரியின் வகுப்பறைக் கட்டிடமொன்றில் அதிபர், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. சொற்ப காலத்தில் தனியார் கட்டிடமொன்றுக்கு இப்பிரத்தியேக வகுப்புக்கள் இடமாற்றம் செய்யப்பட்டன. என்றாலும் மாணவர்களின் வருகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினால் இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு தர்கா நகர் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் காப்பக நிலையத்திற்கு இத்திட்டத்தின் பிரத்தியேக வகுப்புக்கள் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதே நேரம், கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட விஞ்ஞானம், கணிதம் தொடர்பான பட்டப் படிப்புகளுக்காக இந்நிலையத்தின் பிரத்தியேக வகுப்புக்களில் கல்வி பெற்ற 80 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். அவர்களில் சிலர் மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும் ஏனைய கணித, விஞ்ஞானப் பிரிவு பட்டதாரிகளாவும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மாணவ மாணவிகள் இந்நிலையத்திற்கு வருகை தந்து கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். சமூகத்தில் பேசப்படும் அளவுக்கு இந்நிலையம் வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அளிக்கும் பங்களிப்புக்கள் அளப்பரியது. அவர்களது அர்ப்பணிப்புமிக்க பணி என்றும் மறக்க முடியாதவை. மெச்சிப்பாராட்டத்தக்கவை என்றும் குறிப்பிடுகிறார் கலாநிதி ஹாஷிம்.

இதேவேளை தர்கா நகர் விஞ்ஞான திட்டத்தின் கீழ், இவ்வருடம் முதல் க.பொ.த. உயர் தரத்தில் வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களதும் நலன் விரும்பிகளதும் வேண்டுகோளின் அடிப்படையில் பிரத்தியேக வகுப்புக்களை நடாத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இக்கல்வி நிலையத்தின் செயலாளர் ஜெஸூக் அஹமட், க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பொதுப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்கும் வகையிலான விஷேட பிரத்தியேக வகுப்புக்களை தர்காநகர், பேருவளை ஆகிய பிரதேசங்களிலும் நடாத்துகின்றோம். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை உட்பட பொதுப் பரீட்சைகளை இலக்காகக் கொண்டு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் விஷேட கல்விக் கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றோம். இதேவேளை களுத்துறை, பேருவளை மற்றும் வியங்கல்ல போன்ற பிரதேசங்களில் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கும் விஷேட பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துமாறும் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளாலும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பிலும் நாம் விஷேட கவனம் செலுத்தியுள்ளோம்,

அதேநேரம் கடந்த 10 வருட காலப்பகுதியில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் களுத்துறை மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 02 வீதத்தில் இருந்து 10 வீதம் வரை அதிகரித்துள்ளது. அத்தோடு ஆரம்பத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி பயில பெண் மாணவிகள் அதிக ஆர்வம் காட்டிய போதிலும் கடந்த சில வருடங்களாக ஆண் மாணவர்கள் மத்தியிலும் குறிப்பிடத்தக்களவில் ஆர்வமும் ஏற்பட்டுள்ளன. எமது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் மாத்திரமல்லாமல் பெறுமதியான ஆலோசனைகளையும் பிரத்தியேக வகுப்புகளுக்கான ஆசிரியர்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என பலரும் வழங்கி வருகின்றனர். அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம். நயீம் சேரின் ஆலோசனைகளும் மஸீர் மௌலவியின் இஸ்லாமிய வழிகாட்டல்களும் குறிப்பிடத்தக்கவை.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த கற்றறிந்தவர்களும் சமூக நலன் விரும்பிகளும் இந்த வகுப்புக்களை சிறப்பாக முன்னெடுக்க அளிக்கும் ஊக்குவிப்பு எமக்கு பெரும் பக்கபலமாக உள்ளது. ரபீஸ் ஹம்ஸா, சமதான நீதவான் ஹுஸைமத் ஹுஸைன், இஸ்திஹாம் முஹம்மத் உள்ளிட்ட பலர் எம்மோடு தோளோடு தோள் நின்று இப்பிரத்தியேக வகுப்பு கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கவென பங்களிக்கின்றனர். இவர்கள் அனைவரதும் ஒரே நோக்கம் தர்கா நகர் உயர்கல்வியின் கேந்திர நிலையமாக வேண்டும் என்பதாகும். அந்த நோக்கத்தை ரூமி ஹாஷிம் நிலையமும் அதன் தலைவரும் நிச்சயம் நிறைவேற்றி வைப்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்றும் குறிப்பிடுகிறார் செயலாளர் ஜெஸூக் அஹமட்.

இவை இவ்வாறிருக்க, ரூமி ஹாஷிம் மன்றத்தின் ஊடாக வேறுபல சமூக சேவைகளும் தர்கா நகரிலும் இம்மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**மர்லின் மரிக்கார்**

## ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்திற்கு வித்தூன்றியவர்கள்



தெஹிவளை மீலாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் மர்ஹூம் ஏ.எம்.எம். ஹாஷிம்



தர்கா நகர் அளுத்கம் வீதிய முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை மர்ஹூமா வஜீஹா ஹாஷிம்



அபான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் முன்னாள் சிரேஷ்ட பொது முகாமையாளரான பொறியியலாளர் மர்ஹூம் எம்.எச்.எம். ரஷ்மி









> 'தர்கா டவுன் சயன்ஸ் புரொஜெக்ட்' (தர்கா நகர் விஞ்ஞான திட்டம் டி.எஸ்.பி) இல் கல்வி பொதுத் தராதர உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளில் கற்று பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்றுள்ள மாணவ, மாணவியருக்கு பணப்பரிசில் மற்றும் நினைவுச் சின்னம், விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கும் வைபவம் நாளை 27 ஆம் திகதி தர்கா நகர், ஸாஹிராக் கல்லூரியின் நளீம் ஹாஜியார் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான கலாநிதி எம்.எச்.எம் ரூமி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தின் போது களுத்துறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் கல்வி கற்று கடந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 09 பாடங்களில் ஏ சித்தி பெற்ற மாணவ மாணவிகளும் பணப்பரிசில் மற்றும் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.



LE/LE/208

# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான,

## பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம் : 101730000007**
**கடனாளியின் முழுப் பெயர் : மாதம்பே மில்ஸ் தனியார் கம்பனி மற்றும் உடகமலியனகே சமன் தமயந்தி**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.12.29 ஆம் திகதி 2365 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.12.29 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் “தினமின”, “தினகரன்” மற்றும் “டெய்லி நியூஸ்” பத்திரிகைகளிலும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2024.02.16 ஆம் திகதி பி.ப 02.00 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி கொழும்புக் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தாள் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 3483 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலமும் மற்றும் ஒப்பந்த இலக்கம் 4405 படி, எட்டு கோடி முப்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒரு ரூபா முப்பத்து ஏழு சதம் (83,138,951.37), 2023.10.31 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**(01) கடன் இலக்கம் 101730000007**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **இரண்டு கோடி அறுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுபத்து ஐந்து ரூபா நாற்பத்து ஆறு சதம் (26,027,065.46)** மற்றும் **2023.10.31** ஆம் திகதி வரை நிலுவையான **ஐந்து கோடி எழுபத்து ஒரு இலட்சத்து பதின் ஓராயிரத்து எண்ணூற்று எண்பத்து ஐந்து ரூபா தொன்னூற்று ஒரு சதத்தினையும் (ரூபா 57,111,885.91)** இதன்படி முழுத் தொகையான **எட்டு கோடி முப்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒரு ரூபா முப்பத்து ஏழு (83,138,951.37) சதத்தினையும்**

(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **இரண்டு கோடி அறுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுபத்து ஐந்து ரூபா நாற்பத்து ஆறு சதத்திற்காக (ரூபா 26,027,065.46)** சதத்திற்காக அறவிட வேண்டிய **22.82%** வீத வருடாந்த வட்டியினையும், **2023.11.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

(03) 2023.11.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட கடனின் மொத்த நிலுவைத் தொகையான **நான்கு கோடி முப்பத்து இரண்டு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து மூன்று ரூபா ஐம்பத்து ஐந்து (ரூபா 43,266,853.55)** சதத்திற்காக மாதாந்தம் 1.67% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

(04) 1990ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏலவிற்பனையாளர் **பீ.கே.ஈ. சேனாபத்தி** என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் **2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28** ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கடன் இலக்கம் 101730000007**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

1. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோரளையில் உடுகஹ பத்துவவில் சீத்தாவக்க பிரதேச சபை எல்லையில், சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 429A ஹிங்குரல கிராமசேவகர் பிரிவில் வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வெரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி A என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** பாதையும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 90 ஆம் இலக்க காணித்துண்டும்) பாதை மற்றும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும்) மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும்) **கிழக்கே** 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும் பாதை (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும்) 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 94 ஆம் இலக்க காணித்துண்டும்) மற்றும் காணித்துண்டிலக்கம் E மற்றும் Bயும் **தெற்கே** 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 94 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 65B என்ற காணித்துண்டும் மற்றும் பாதை **மேற்கே** 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 54 ஆம் இலக்க காணித்துண்டும், 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 56 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 662 ஆம் இலக்க காணி காணி வரைபடத்தின்படி 60 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பத்தொன்பது ஏக்கர் மூன்று ரூட் பத்தொன்பது தசம் ஆறு இரண்டு பேர்சஸ்கள் ஆகும். **(ஏக்.19. ரூட்03. பேச். 19.62)** அல்லது எட்டு தசம் பூச்சியம் நான்கு இரண்டு இரண்டு ஹெக்டயர்களாகும். (8.0422) ஆகும். இக் காணித்துண்டு அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் **B167/67** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் **யூ.கே. ஜி.பி.எஸ். புஷ்பகுமார** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி C என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** பாதையும் **கிழக்கே** 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும், 1012 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 2 ஆம் இலக்க காணித்துண்டும் தெற்கே பாதையும் மேற்கே பாதை 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு பேர்சஸ்கள் ஆகும். (ஏக்.0. ரூட்0. பேச்.11) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஏழு எட்டு ஹெக்டயர்களாகும். (0.0278) ஆகும். இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B163/76 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே. ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி D என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதையும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டு) கிழக்கே பாதை மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87 ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் தெற்கே 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87 ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் மேற்கே பாதை (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டு) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது தசம் ஐந்து பூச்சியம் பேர்சஸ்கள் ஆகும். (ஏக்.0. ரூட்0. பேச்.20.50) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஒன்று எட்டு ஹெக்டயர்களாகும். (0.0518) ஆகும். இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B163/71 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே. ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி E என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் ( 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டு) கிழக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டு) 1651 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 5B என்ற இலக்க காணி மற்றும் பாதை (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87 ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் தெற்கே (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 97B மற்றும் 1618 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 7ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் மேற்கே A என்ற இலக்க காணித்துண்டு 662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 94 அம் இலக்க மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு ஏக்கர் இரண்டு ரூட் பூசசியம் தசம் ஏழு இரண்டு பேச்சஸ்களாகும் ஆகும் (ஏக்.11 ரூட்2. பேச்.00.72) அல்லது நான்கு தசம் ஆறு ஐந்து ஐந்து ஏழு ஹெக்டயர்களாகும். (4.6557) ஆகும். இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸ ாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B163/77 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 20.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே. **ஜி.பி.எஸ். புஷ்பகுமார** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 5B என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84ஆம் இலக்க காணித்துண்டு) மற்றும் தர்ஷன பெரேரா என்பவரினது காணியும் **கிழக்கே** ஹிங்குரல காள்வாயும் தெற்கே (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 97B என்ற காணித்துண்டும். **மேற்கே 5A** என்ற இலக்க காணித்துண்டும்) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு ஏக்கர் முப்பத்து மூன்று தசம் நான்கு ஆறு பேச்சஸ்களாகும். **(ஏக்.11 ரூட்0. பேச்.33.46)** அல்லது நான்கு தசம் ஐந்து மூன்று ஆறு ஒன்று ஹெக்டயர்களாகும். **(4.5361)** இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் **அவிஸ்ஸாவலை** காணிப்பதிவு காரியாலயத்தில் **B163/75** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொதுமுகாமையாளர்**
**22.01.2024**

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி**
**சேர்.சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை**
**த.பெ.இல.2085**
**கொழும்பு - 02**

## மன்னிப்புக்கோரல்

சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவில் புளக்“J” கிராம சேவையாளர் பிரிவில் இல: 106/1C எனும் முகவரியில் வசிக்கும் 922980039V எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக்கொண்ட இப்ராகீம் முஹம்மது இஸ்திகார் ஆகிய நான், தம்புள்ள நீதிமன்றத்தில் வழக்கு இல: 17609 இன் கீழுள்ள வழக்கில் 2015ம் ஆண்டின் 31ம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் சட்டத்தின் 131ம் இலக்க அத்தியாயத்தை மீறி பொதுப்போக்குவரத்து வாகனத்தில் மருந்துகளை ஏற்றிச்சென்ற குற்றத்திற்காக ரூபா.100,000.00 தண்டப்பணம் செலுத்தியதுடன் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சகல பொதுமக்களிடமும் மன்னிப்புக்கோருகிறேன். மேலும் இனிமேல் இவ்வாறான குற்றத்தைச் செய்யமாட்டேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

**இப்ராஹீம் முஹம்மது இஸ்திகார்**

## இலங்கை வங்கி

**பின்வரும் அமைவிடங்களில் குத்தகை அடிப்படையில் தானியங்கி பணம் மீளப்பெறுதல்/செலுத்துதல் இயந்திரங்களை (ATMs) தாபிப்பதற்காக பொருத்தமான கட்டடங்கள் அல்லது வெற்றுக்காணிகள் தேவைப்படுகின்றன**

| காலி மாவட்டம் | மாத்தறை மாவட்டம் | ஹம்பந்தொட்ட மாவட்டம் |
|---|---|---|
| காலி நகரம் (சரெந்துகடே சந்தி) | முலட்டியன | ஹுங்கம |
| கின்தொட்ட | யட்டியன | பொலான சந்தி |
| ஹப்புகல | | பந்தகிரிய |
| கஹதுவத்த சந்தி | | நெட்டோல்பிட்டிய |
| மஹயின்துருவ | | வீரவில சந்தி |
| மீட்டியாகொட | | |

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- ஆகக் குறைந்த குத்தகை காலமானது 10 வருடங்களாக இருத்தல் வேண்டும்.
- மேற்குறிப்பிட்டுள்ள அமைவிடத்திலிருந்து 500மீ ஆரத்தினுள் அமைந்திருத்தல் வேண்டும்.
- இலகுவில் அடையக்கூடிய இடத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமானளவு வாகன தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும்.
- ஒரு கட்ட 30 அம்பியர் மின்சார வழங்கல் இருத்தல் வேண்டும்.
- வெற்றுக்காணிக்கு 140 அடி$^2$ (7’x 20’) அல்லது கட்டடமொன்றிற்கு 91 அடி$^2$ (7’ x 13’) ஆகக் குறைந்த தரை பரப்பாகவிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டட வரைபடம், நில அளவை வரைபடம், உறுதி மற்றும் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை ஆகியவற்றை கீழேயுள்ள முகவரியை அடையும் பாங்கில் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து 14 நாட்களுள் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “**தென் மாகாணத்தின் இலங்கை வங்கிகளில் ATM இயந்திரங்களை தாபிப்பதற்கான பொருத்தமான கட்டடங்கள் அல்லது வெற்றுக்காணிகள்**” என தயவு செய்து அடையாளம் காட்டப்படல் வேண்டும்.

**உதவி பொது முகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**தென் மாகாண அலுவலகம்,**
**இல.: 11, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.**
**தொலைபேசி: 041-2232238, 041-2220949.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கல்வி அமைச்சு

**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)**
**NERDC நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட கழிவறைத் தொகுதிகளின் நிர்மாணத்திற்கான விலைமனுக்கள் (I ஆம் கட்டம்)**
**Bid No.: NERDC/DPC Minor(W)/01/24**

1. இடைநிகழ்வுகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக 3,340,650 ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் **NERDC** நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட கழிவறைத் தொகுதிகளின் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   வேலைகளின் சுருக்கமான விளக்கம் : **NERDC** நிலையத்தில் உத்தேசிக்கப்பட்ட கழிவறைத் தொகுதிகளின் நிருமாணம்.
   செயற்றிட்ட அமைவிடம் : **NERDC** நிலையம், ஏக்கல, ஜா-எல
   ஒப்பந்தக் காலப்பகுதி : 90 நாட்காட்டி நாட்கள்

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் **CIDA [ICTAD]** சி-08 அல்லது மேற்பட்ட தர தேவைப்பாடுகளை கொண்டிருத்தலும் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: **CIDA[ICTAD]** சி-08 அல்லது மேற்பட்டது.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் அலுவலகரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொலைபேசி: 011-3500017. தொலைநகல்: 011-2233153. மின்னஞ்சல்: **supplies@nerdc.lk**

6. **2024.01.26** ஆம் திகதியிலிருந்து 2024.02.13 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. **2024.02.14** ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Bid Invitation No.: NERDC/ DPC Minor/W.01/24 – Bids for Construction of proposed Toilet Blocks at NERDC Centre [Stage I] DO NOT OPEN BEFORE 2.00 PM on 2024.02.14”** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 42 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 30,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 70 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் அதாவது 2024.04.24 ஆம் திகதி வரையுமானது.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**பணிப்பாளர் நாயகம்,**
**NERDC, 2P/17B, கைத்தொழில் பேட்டை**
**ஏக்கல, ஜா-எல**
**தொலைபேசி : 011-2236284/2236307**
**தொலைநகல் : 011-2233153**

**வழங்கல் அலுவலர்,**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**2P/17B, கைத்தொழில் பேட்டை,**
**ஏக்கல, ஜா-எல.**

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்
### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்
### பிரிவு 55

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520007 கண்ட இல. 12 பத்திர இல. : 01 துண்ட இல. 0166, 0140, 0107 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த.

இல. 270, அம்பஹேன, பிட்டிபன தெற்கு, கிரிவத்துடுவ எனும் விலாசத்தைக் கொண்ட மத்தும கங்கானமலாகே சொபிநோனா (2012.11.02) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.02.19 ஆம் திகதிக்கு முன் இல. 06 1ம் லேன் , ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்
### 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்
### பிரிவு 55

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் அத்திடிய - தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521002 கண்ட இல.08 பத்திர இல.01 துண்ட இல.411ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல 269/01 A, பிரதான வீதி, அத்திடிய, தெஹிவளை (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட வலிமுனி தேவகே சந்திரசேன (2022.11.20) (முழுப்பெயர்) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 5/3,3ம் படிவம் இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.24 - 2024.02.26 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) திருத்தப்பட்டவறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு : AKU/LND/06/LA74**
**காணி அமைச்சின் இல : 4/3/13/2019/PC/630**

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 2023.12.02ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2360/74 இலக்கம் கொண்ட அரசாங்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : மாத்தறை
பிரதேச செயலகப் பிரிவு : அக்குரஸ்ஸை
கிராம உத்தியோகத்தர் பிரிவு : போபிட்டிய
கிராமத்தின் பெயர் : மலிதுவ
காணியின் பெயர் : புன்சிகே தெனியவத்த, நவஹவுல்ஹேன
பட இலக்கம் : கடஸ்டர் இலக்கம் 820513 இல் வலய இல. 03 தாள் இலக்கம் - 1
துண்டு இலக்கங்கள் : 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19

**கே.ஜீ.டி. அநோஜா,**
**பிரதேச செயலாளர்,**
**அக்குரஸ்ஸ**

**2024 ஜனவரி மாதம் 24 திகதி**
**அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தில்**

### 1964 இலக்கம் 28 ஐக் கொண்ட காணி எடுத்தற் (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பிலக்கம் : KDS/HAR/4/2/1/52**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் : 4-3/18/2018/WS/316**

இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது மேலதிக விபரங்களுக்கு 2023 பெப்ரவரி மாதம் 02ம் திகதி இலக்கம் 2317/76 மற்றும் 2023 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி இலக்கம் 2361 / 24 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

பிரதேச செயலாளர் பிரிவு : ஹரிஸ்பத்துவ
கிராமம் : ருவன்புர ஹிரியலகம்மன
அமைவிடம் : மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் குழுகம்மன சியபத்துவ சிறுபிரிவில் ருவன்புர மற்றும் ஹிரியலகம்மன கிராமங்கள்.
காணியின் பெயர் : யஹலதென்ன வத்த முதுன்ஹேன
அடிப்படை வரைபட இலக்கம் : மஹ 7173, மஹ 7476
காணித் துண்டு இலக்கம் : ஆ.வ.மஹ 7173 இல் துண்டு இலக்கம் 2,3,4,5,6,7,8,9,10,11,12,13 மற்றும் ஆ.வ.மஹ 7176 இல் துண்டு இலக்கம் 1,2

**மொஹான் தர்மதாச**
**பிரதேச செயலாளர்**
**ஹாரிஸ்பத்துவ**

**2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**ஹாரிஸ்பத்துவ**
**நுகவெல**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377





2024ஆம் வருடத்தில் புனித ஹஜ் கடமையை மேற்கொள்ளும்...

# ஹஜ்ஜாஜிகளுக்கு சிறந்த சேவையை வழங்க எமது சங்கம் தயாராகவுள்ளது

## ஹஜ் முகவர்கள் சங்க புதிய தலைவர் ஏ.சி. பதுருதீன் முகம்மது கரீம் தெரிவிப்பு

புனித ஹஜ் கடமையை இவ்வருடம் (2024) நிறைவேற்றச் செல்லும் ஹாஜிகளுக்கு எந்தவித சிரமங்களும் இல்லாதவாறு சிறந்த சேவையை வழங்கவுள்ளதாக ஹஜ் டுவர்ஸ் ஒப்பரேட்டர்ஸ் அசோசியேசன் ஒப் ஸ்ரீலங்காவின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அல்ஹாஜ் ஏ.சி பதுருதீன் முகம்மது கரீம் தெரிவித்தார்.

நடப்பு ஆண்டிற்கான சங்கத்தின் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களை தெரிவு செய்யும் நிகழ்வு நுவரெலியாவில் உள்ள அரலிய கிரீன் சிட்டி ஹோட்டலில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைஸல் தலைமையில் அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது தலைவருக்காக இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் அதிக வாக்குகளைப் பெற்று புதிய தலைவராக கரீம் லங்கா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் உரிமையாளர் அல்ஹாஜ் ஏ.சி பதுருத்தீன் முஹம்மது கரீம் அமைப்பின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அமைப்பின் உதவித் தலைவர்களாக எம்.பி.எஸ். ஹஜ் ட்ரவல்ஸின் உரிமையாளர் அல்ஹாஜ் எம்.எஸ் அமானுல்லா மற்றும் சேப்வே ட்ரவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் எம். எஸ் .எம் பாரூக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளராக கைராஸ் இன்டர்நேஷனல் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் நிறுவனத்தின் தலைவர் எம்.எஸ்.எஸ். ஸமூனும் உதவிச் செயலாளராக குளோபல் லெசர் நிறுவனத்தின் எம். அஸ்கரும் தெரிவு செய்யப்பட்டனர். பொருளாளராக ட்ரவல்ஸ்



டேட்டா நிறுவனத்தின் எம்.ஜே குஹாப்டீன் மற்றும் உதவி பொருளாளராக மினா ட்ரவல்ஸின் உரிமையாளர் எம்.எப்.என்.எம். உசாமாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அசோசியேஷனின் ஏனைய உறுப்பினர்களாக புறாக் ட்ரவல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் குஸைன் கலீல், இமாரத் ட்ரவல்ஸ் நிறுவனத்தின் ஏ.பி.எம். நுஹ்மான், சபா ட்ரவல்ஸ் நிறுவனத்தின் எச். எம். சமீம், ஏசியன் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் நிறுவனத்தின் எம். நௌபர், ஹப்சா ட்ரவல்ஸ் நிறுவனத்தின் ஏ.ஜே.எம் லத்தீப், சுஹைர் ஹஜ் ட்ரவல்ஸ் உரிமையாளர் ஏ.பி.எம். சுஹைர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்

கடந்த காலங்களைப்போல் இறுதிவரை காத்திராது இவ்வருடத்திற்கான 2024ஆம் ஆண்டின் புனித ஹஜ் ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து முடித்து ஹாஜிகளுக்கு சிறப்பான வசதிகளை செய்து கொடுக்க இருப்பதாக சவூதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ளதால் ஹிஜ்ரி 1445 ஆம் வருடத்தின் ஹஜ்ஜை இவ்வருடம் நிறைவேற்ற இருக்கும் ஹாஜிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஹஜ் பிரிவில் 25 ஆயிரம் ரூபாய் பணத்தை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்தி தமது ஹஜ் பயண ஏற்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தின் ஹஜ் குழுவும் திணைக்களத்தின் பணிப்பாளரும் வேண்டியுள்ளார்கள். ஹஜ் பயண பதிவை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இணையதளத்தின் ஊடாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அசோசியேசனின் தலைவர் அல்ஹாஜ் ஏ.சி பதுருதீன் முகமது கரீம் தெரிவிக்கின்றார். இணையத்தள முகவரி ( www.muslimaffairs.gov.lk )

இலங்கையிலிருந்து இம்முறை சுமார் 3500 ஹாஜிளுக்கு சவூதி அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து ஹஜ் விசா ஹாஜிகளுக்கு வழங்க ஆரம்பித்து ஏப்ரல் மாதம் 25ஆம் திகதியுடன் நிறுத்தப்பட இருப்பதாகவும் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் தேதி முதல் மக்கா மற்றும் மதீனாவில் ஹாஜிகளை தங்க வைப்பதற்கான ஹோட்டல் வசதிகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளையும் ஹஜ் முகவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் சவூதி அரசு கேட்டுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவிக்கின்றார்.

எனவே, ஹாஜிகள் இறுதிவரை காத்திருக்காமல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட எமது முகவர் நிலையங்களினூடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

பதிவுகளை மேற்கொள்ள ரூ. 25,000.00 கட்டணத்தை இலங்கை வங்கிக் கிளைகளில் 2327593 எனும் திணைக்களத்தின் வங்கிக் கணக்கில் வைப்பில் இட்ட பின்னர் வங்கிப் பற்றுச் சீட்டை திணைக்களத்தின் கணக்குக் கிளையில் கொடுத்து திணைக்களத்தின் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.




முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் டுவர்ஸ் ஒப்பரேட்டர்ஸ் அசோசியேசன் ஒப் ஸ்ரீலங்கா அமைப்பின் கீழ் அங்கத்துவம் பெற்றுள்ள ஹஜ் முகவர்கள் கீழ்வருமாறு;

01. ஆத்திகா ஹஜ் ட்ரவல்ஸ் ( எம் கே முஹம்மத் ஜசீர்)
02. அப்துல்லாஹ் ட்ரவல்ஸ் ( எம்.எஸ்.எம் இப்ராஹிம்)
03. அஜ்வா ட்ரவல்ஸ் (சகுரான் ஹசன்)
04. அல் மாசா ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஏ.என்.எம்..ஸமீல்)
05. அல் அக்ஸா குளோபல் பிரைவேட் லிமிட்டெட் (எம்.ஆர்.எம்.நைசர்)
06. அல்ஹிஜ்ரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.எஸ். நசார்)
07. அல் ஹிக்மா ஹஜ் சேவிஸ் (எம்.ரி.எம்.அக்ரம்)
08. அல் கஸ்வா பிரைவேட் லிமிட்டெட் (எம்.ஜே.எம் ஜெயின்)
09. அல் உமைரா ஹஜ் ட்ரவல்ஸ் (ஐ.எல். அப்துல் கபூர்)
10. அல் ஸியாரா டுவர்ஸ் அன்ட் ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.என்.எம்.முல்தசிம்)
11. அமானத் டுவர்ஸ் அன்ட் ட்ரவல்ஸ் (எம்.ஜி.எம். இஸாம்)
12. அமீன் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.ஆர்.எம்.அர்சாட்)
13. அம்ஜா ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எச்.எம். அம்ஜடீன்)
14. ஏசியன் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எம்.ஐ.எம். நௌபர்)
15. அஸார் ட்ரவல்ஸ் பிறைவேட் லிமிட்டெட் (ஏ.ஜே. எம்.ஹஸன்)
16. அஸ்மி ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஏ.கே.எம்.அஸ்மி)
17. பறகத் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எம்.அவூன் அவூப்)
18. பின்னூரியா ஹஜ் உம்ரா சேர்விஸ் (எஸ்.எம்.எம். பைஸல்)
19. புறாக் ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டட் (கலீல் ஹுஸைன்)
20. கரீம் லங்கா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஏ.சி.பி.எம்.கரீம்)
21. எப்.அன்.எப். ட்ரவல்ஸ் (எப்.எம்.பஸீம்)
22. பெயார் ட்ரவல்ஸ் (எம்.எம்.ரஸான்)
23. ஹப்ஸா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் (ஜே.ஏ.லத்தீப்)
24. ஹாஜரா ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ்.ஏ. ஸாலிஹ் மௌலானா)
25. ஹலீம் லங்கா பிரைவேட் லிமிட்டெட் (எம். ஜே.எம்.அப்துல் ஹலீம்)
26. ஹமாஸ் ஹஜ் ட்ரவல்ஸ் (ஏ.எஸ்.கலீல்)
27. எச்.எம்.எச். ஹஜ் ட்ரவல்ஸ் (எச்.எம்.சியாஸ் மொஹமட்)
28. இமாரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஏ.பி.எம்.நுஃமான்)
29. இக்ரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.ஓ.எப்.ஜெசீம்)
30. ஐலண்ட் ட்ரவல்ஸ் (எஸ்.எச்.எம்.இக்பால்)
31. காரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.எம்.அஹமட் நிஜார்)
32. கைராஸ் இன்டர்நெசனல் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எம்.எஸ்.ஸப்ராஸ் சமூன்)
33. காக்கியா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எஸ்.எச்.சிராஜூடீன்)
34. எம்.என். ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எம்.என்.அப்துல்லா)
35. எம்.பி.எஸ் ஹஜ் ட்ரவல்ஸ் (எம்.பி.எஸ்.ஆப்டீன்)
36. மினா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம்.எப்.என்.எம்.உசாமா)
37. ரம்ழா ட்ரவல்ஸ் (ஜே.எம்.சிபான்)
38. ரஸாதி ட்ரவல்ஸ் (ஏ.ஆர்.எம்.ஸெய்ட்)
39. ரசீதியா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் (எம்.ஆர்.எம் சறூக்)
40. ரய்யான் ட்ரவல்ஸ் (எம்.என்.எம்.ஹஸன் பாரி )
41. ரீமா ஹஜ் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் (எம்.சி.எம்.சுபைர்)
42. ஸபா டிராவல்ஸ் (எச்.எம்.சமீம்)
43. சேப்வே ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எம். ஆர்.எம்.பாருக்)
44. ஸப்ரா ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஏ.எஸ். ஸய்யாப் அன்வர்)
45. சஹ்வான் ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ். எம்.எம்.ஸமீன்)
46. சித்தீக் ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எஸ்.எம்.எம். நுஃமான்)
47. ஸ்கைவேல்ட் ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ். சகாப்டீன்)
48. சுஹைர் ஹஜ் ட்ரவல்ஸ் (ஏ.பி.எம்.சுஹைர்)
49. ரி.ஜி.எல். ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் (எம்.எம்.தஸ்லீம்)
50. த குலோபல் ட்ரவல்ஸ் அன்ட் லெஸர் பிரைவேட் லிமிட்டெட் (எம்.ஏ.எம்.அஸ்ஹர்)
51. ட்ரவல் டேட்டா டுவர்ஸ் அன்ட் ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (ஜமீல் புவாத்)
52. உம்முல் குரா ட்ரவல்ஸ் அன்ட் பிறைவேட் லிமிட்டெட் (எம்.ஐ. குஸைனுடீன்)
53. சாகியா ட்ராவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (எம்.ஆர்.எம். இமாம்)
54. ஸம்ஸம் ஹஜ் ட்ரவல்ஸ் (ஐ.எல்.அப்துல் ரஷீத்).
55. சன்பவர் ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டெட் ( அனஸ் மர்சூக்)
56. எம்.எச்.கே. ட்ரவல்ஸ் ( மௌலவி எம்.ஜி.எம். கௌஸ் (சர்க்கி) )

இந்த அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் சகல முகவர்களும் அமைப்பின் முடிவுகளுக்கு அமைய ஒத்துழைத்து அவர்கள் உடைய ஆலோசனையின் பிரகாரமே இம்முறை ஹஜ் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்தார். தமது முகவர்கள் ஹாஜிகளுக்கு சிறப்பான சேவையை வழங்கி குறைகள் ஏற்படாதவாறு நல்ல முறையிலே ஹஜ்ஜை அவர்கள் நிறைவேற்றுவதற்கான உதவிகளை வழங்குவதற்கும் எமது அமைப்பின் முகவர்கள் சிறப்பாக சேவையை ஹாஜிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் நாங்கள் ஆலோசனை வழங்கியிருக்கிறோம்.

குறிப்பாக 10 வருடங்களுக்கு மேலாக அனுபவம் உள்ள பழைமையான சிறந்த சேவைகளை வழங்கிய முகவர்கள் இந்த அமைப்பில் இருக்கிறார்கள். முகவர் நிறுவனங்களினால் ஏதாவது குறைபாடுகள் ஏற்படின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு நீங்கள் முறைப்பாடுகளை வழங்கலாம். இந்த நிறுவனத்தில் அதிகமான அனுபவம் வாய்ந்தவர்கள் காணப்படுகின்றார்கள். முக்கியமாக நல்ல சேவைகளை வழங்கிய முகவர்கள் எமது அங்கத்துவ நிறுவனத்தில் இணைந்து இருப்பதும் கடந்த காலங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாததும் மிகவும் ஒரு சிறப்பான விடயமாக இருக்கின்றது

**எமது அசோசியேசனின் நிறுவுனர்கள்**

01. அல் ஹாஜ் பைஸல் ஏ. காதர் ட்ரவல் எக்சேஞ்
02. அல் ஹாஜ் எம்.ஏ.நிஜார் காரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ்
03. அல் ஹாஜ் மொஹிடீன் ஏ காதர் இக்ரா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் பிறைவேட் லிமிட்டெட்
04. அல் ஹாஜ் எம்.ஆர்.எம்.பாறுக் சேப்வே ட்ரவல்ஸ்
05. அல் ஹாஜ் அனஸ் மர்சூக் மிட்லண்ட் ட்ரவல்ஸ்
06. அல் ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். சுபைர் அய்மன் ட்ரவல்ஸ்
07. அல் ஹாஜ் எம்.கே.எம். ஜூனைட் சபையார் புஸ்ரா ட்ரவல்ஸ்
08. அல் ஹாஜ் ஹுஸைன் பாரி – சொய்ஸ் ட்ரவல்ஸ்
09. அல் ஹாஜ் மௌலவி எம். ஹஸனா லெப்பை – மக்கா ட்ரவல்ஸ்
10. அல் ஹாஜ் ஆர். சுக்ரி இஸட் ரி எஸ் சிலோன் லிமிட்டெட்.

இவ்வருட (2024) புனித ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பாக சவூதி அரேபியாவின் ஹஜ் அமைச்சருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு கடந்த (ஜனவரி) 7ஆம் திகதி புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் இலங்கை ஹஜ் குழு திணைக்களப் பணிப்பாளர் மற்றும் முகவர் நிலையங்கள் சார்பாக அதன் தலைவர் உள்ளிட்டோர் சென்று வந்துள்ளதையும் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நிச்சயமாக வழிபடுவதற்கான இப்புவியில் நிர்மாணிக்கப்பட்ட முதல் வீடு மக்காவில் உள்ளதாகும் (சூரா ஆல இம்ரான் வசனம் : 96)

"அப்பூமி மனிதர்களுக்கு அபயமளிக்கும் தலமாகும். யார் அங்கு நுழைகிறாரோ அவர் அச்சம் தீர்ந்தவராகின்றார் என்கிறது அல் குர்ஆன்."

**(சத்தார் எம் ஜாவித்)**





# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

- 01, 02 ஆம் கேள்விகளில் உள்ள உருக்களை ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது தென்படும் உருவை தெரிவு செய்க.

01. 

i.  ii.  iii. 

02. 

i.  ii.  iii. 

03. புஸ்பா, ரமணி, ராணி, வேனி நால்வரும் பொருட் கொள்வனவுக்காக சந்தைக்குப் புறப்பட்டனர். இவர்களில் ராணியை விட புஸ்பாவிடம் அதிக பணம் இருந்தது. ரமணியை விட ராணியிடம் அதிக பணம் இருந்தது. வேனியை விட ரமணியிடம் அதிக பணம் இருந்தது. இவர்களில் குறைந்த பணம், அதிக பணம் வைத்திருந்தவர்கள் முறையே,
i. புஸ்பா – வேனி ii. வேனி – புஸ்பா iii. வேனி – ரமணி

04. சலீம் நஸ்ரியை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். கிரு குணாவை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். நஸ்ரி கிருவை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். இவர்கள் நால்வரும் வைத்திருக்கும் மாபிள்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் அமையும் சரியான ஒழுங்கு,
i. சலீம், நஸ்ரி, கிரு, குணா ii. குணா, கிரு, நஸ்ரி, சலீம்
iii. நஸ்ரி, சலீம், கிரு, குணா

05. கீழே தாயக் கட்டைகளின் எதிரெதிர்ப்பக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் சரியாகப் புள்ளியிடப்பட்ட தாயக்கட்டையின் கீழ்க் கோடிடுக.

i.  ii.  iii. 

06. ஒரு திரைப்பட மாளிகையில் நீண்ட வரிசை நின்றது. அருண் முன்னாலிருந்து 17 ஆவதாகவும் சமீருக்குப் பின்னால் 15 பேரும் அருணுக்கும் சமீருக்கும் இடையில் 22 பேரும் நின்றனரெனில் அங்கு வரிசையில் மொத்தமாக நின்றவர்களின் எண்ணிக்கை யாது?
i. 54 பேர் ii. 56 பேர் iii. 55 பேர்

07. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்பட்டன. அவற்றின் தலைகளின் எண்ணிக்கை 15 கால்களின் எண்ணிக்கை 40 எனில், அங்கிருந்த கோழிகளின் எண்ணிக்கை யாது?
i. 5 ii. 10 iii. 7

08. “விரலுக்குத் தக்கது வீக்கம்” இப்பழமொழியின் கருத்து யாது?
i. வரவுக்கு ஏற்ற செலவு செய்தல்.
ii. விரல் எந்தளவாக இருக்குமோ அதே அளவு தான் வீக்கம்.
iii. ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினை உண்டு.

09. முதல் எழுத்து பாக்கில் உண்டு சாக்கில் இல்லை. இரண்டாவது எழுத்து விடலில் உண்டு விசிலில் இல்லை. மூன்றாவது எழுத்து சோலையில் இல்லை சாலையில் உண்டு. நான்காவது எழுத்து வலையில் உண்டு வளையில் இல்லை. அது என்ன?
i. பாடலை ii. பாடல் iii. பாடசாலை

10. 
உருவிலிருந்து வெட்டி நீக்கக்கூடிய முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 3 ii. 6 iii. 4

11. 
உருவில் அவதானிக்கக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?
i. 10
ii. 9
iii. 14

12. 35 இலிருந்து 45 வரை எண்ணும் எண்களில் 3, 4 வரும் தடவைகள் முறையே,
i. 8 ii. 24 iii. 7

13. ஓர் எண்ணை மூன்றால் பெருக்கி வரும் விடையிலிருந்து 4ஐக் கழித்தால் கிடைப்பது 20 எனில் அவ் எண் யாது?
i. 8 ii. 24 iii. 7

14. வீதியொன்றை அலங்கரிக்க சிவப்பு, மஞ்சள், பச்சை என்ற ஒழுங்கில் 132 கொடிகள் நடப்பட்டனவெனில் அங்கு நடப்பட்ட 126 ஆவது கொடியின் நிறம் யாது?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை

15. “உள்ளக் கருத்துக்களை அங்க அசைவுகள் மூலம் வெளிப்படுத்துதல்”
i. அபிநயம் ii. நயப்பு iii. அபிமானம்

16. 
அடுத்து வரும் உரு யாது?

i.  ii.  iii. 

17. மனிதனுக்கு மன நிறைவு போன்று சுகமளிக்கும் செல்வம் வேறொன்றும் இல்லை என்பதை விளக்கும் பழமொழி எது?
i. பேராசை பெருந்தரித்திரம்.
ii. குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளும்பாது.
iii. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

18. ஒரு மாதத்தின் முதலாந் திகதி சனிக்கிழமை வந்ததெனில் அம்மாதத்தின் 30 ஆம் திகதி என்ன கிழமையில் முடிவடையும்?
i. செவ்வாய்க்கிழமை ii. திங்கட்கிழமை iii. ஞாயிற்றுக்கிழமை

19. 
உருவினுள் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 6
ii. 8
iii. 2

20. 
படத்திலுள்ள கடிகார முகப்பை தளவாடியின் முன் பிடித்தால் தென்படும் நேரம்,
i. 2 மணி 15 நிமிடம்
ii. 9 மணி 50 நிமிடம்
iii. 8 மணி 50 நிமிடம்

21. தரப்பட்ட செய்கையை அவதானித்து புள்ளிக்கோடு உள்ள இடத்துக்கு வரவேண்டிய உருவை விடைகளில் கண்டு கோடிடுக.



i.  ii.  iii. 

22. பாடசாலை மணி ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒருமுறை ஒலிக்கும். மு.ப 7.30 இற்கு முதல் மணி ஒலித்தது. ஐந்தாவதாக மணி ஒலிக்கும் நேரம் யாது?
i. பி.ப. 11.30 ii. மு.ப 10.30 iii. மு.ப. 11.30

23. பென்சில் இரண்டின் விலை ரூபா. 42.00 ஆகும். பேனா ஒன்றின் விலை பென்சில் ஒன்றின் விலையின் இரு மடங்கு அகும் எனின், பேனாவின் விலை யாது?
i. ரூபா. 42.00 ii. ரூபா 28.00 iii. ரூபா. 21.00

24. தளவாடியில் பார்க்கும் போது மாற்றம் ஏற்படாமல் அவ்வாறே தென்படும் ஆங்கில எழுத்துக்கள் எவை?
i. BE ii. TH iii. HE

25. சசீசனிடம் இரண்டு ரூபா, ஐந்து ரூபா, பத்து ரூபா குற்றிகள் மொத்தம் 8 குற்றி நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி 38 ரூபா எனின் 2 ரூபா நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?
i. 2 ii. 4 iii. 3

26. வகுப்பொன்றிலிருந்த 12 மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானதை அடுத்து தமக்குள் கைகுலுக்கிக் கொண்டனர். எனவே அவ்வகுப்பில் நிகழ்ந்த கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?
i. 144 ii. 132 iii. 66

27. விஸ்வாவை விட சதீஸ் உயரமானவன். சபேசை விட விஸ்வா குள்ளமானவன். சபேஸ் சதீசைவிட உயரமானவன். மூவரில் உயரமானவர் யார்?
i. சதீஸ் ii. விஸ்வா iii. சபேஸ்

28. ஓர் எண்ணை இண்டால் பெருக்கி வரும் விடையுடன் இரண்டைக் கூட்டி வரும் விடையை மீண்டும் இரண்டால் வகுக்க 4 விடையாக வருகின்றது. எனவே அவ்வெண் யாது?
i. 3 ii. 4 iii. 8

29. ஓர் எண்ணின் ½ பங்குடன் 5ஐக் கூட்ட 30 விடையாகக் கிடைத்ததெனில் அவ்வெண் யாது?
i. 60 ii. 25 iii. 50

30. குமரன் தான் வைத்திருந்த பணத்தொகையுடன் ரூபா. 100.00ஐச் சேர்த்தான். பின்பு மொத்தத் தொகையை இரண்டாகப் பிரித்து ஒரு பங்கை தனது தங்கைக்குக் கொடுத்தான். தங்கைக்குக் கொடுத்த தொகை ரூபா. 150.00 எனில் குமரன் வைத்திருந்த தொகை யாது?
i. 200.00 ii. 300.00 iii. 150.00

31. மரம் ஒன்றைத் தறிக்க 5 தொழிலாளர்களுக்கு 4 நாட்கள் தேவையெனக் கணிக்கப்பட்டது. எனவே அம்மரத்தை 1 நாளில் தறித்து முடிக்க எத்தனை தொழிலாளர்கள் தேவைப்படுவர்?
i. 4 பேர் ii. 5 பேர் iii. 20 பேர்

32. பௌர்ணமி வானின் அழகை இரசித்துக் கொண்டிருந்த சாந்தி கிழக்கு வானை நோக்கி பார்த்தவாறு “அதோ வானவில், வானவில்” என்று கத்தினாள்.
i. இரவில் கிழக்கில் வானவில் தோன்றாது
ii. இரவில் வானவில் தோன்றாது
iii. பௌர்ணமி இரவில் வானவில் மேற்கே தோன்றும்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

33. கமலினதும் அமீனினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 43kg ஆகும். கமல், அமீன், வினோத் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 57kg எனின் வினோத்தின் நிறை யாது?
i. 14kg ii. 13kg iii. 10 kg

- **காட்டப்பட்டுள்ள முப்பரிமாண உருவை அமைப்பதற்குரிய சரியான வெட்டுருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

34.




35.




36. "ஓய்வெடுக்கின்றன" இச்சொல் எக்காலத்தைக் காட்டுகின்றது?
i. நிகழ்காலம் ii. எதிர்காலம் iii. இறந்தகாலம்

37. ஒரு வளவில் 25 பனம் விதைகள் வட்ட ஒழுங்கில் விதைக்கப்பட்டன. ஒவ்வொரு பனம் விதைக்குமிடையில் 5m இடைவெளி விடப்பட்டதெனில் விதைகள் நடப்பட்ட வட்டத்தின் சுற்றளவு யாது?
i. 120m ii. 125m iii. 130m

38. எனது வயது 10 எனது அம்மாவினதும் அப்பாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எனது வயதின் 8 மடங்கு. அம்மாவின் வயதைவிட அப்பாவிற்கு 10 வயது அதிகம் எனவே அப்பாவின் வயது,
i. 45 ii. 35 iii. 25

39. கோலத்தை அவதானித்து அடுத்த வரும் எழுத்துக்களைத் தெரிவு செய்க.
STUVW ⟶ WVUT ⟶ TUV ⟶ ?
i. VU ii. TU iii. UV

40. விளையாட்டுப் போட்டியொன்றில் 4 அணிகள் மோதிக்கொண்டன. ஒரு அணி மற்றைய அணியுடன் ஒரு போட்டியில் விளையாடியது எனின், அங்கு எத்தனை போட்டிகள் இடம் பெற்றிருக்கும்?
i. 7 ii. 6 iii. 12

# கடந்த வார (19.01.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

I. 01. அருவி
02. இயற்கை
03. கனிகள்
04. மரங்கள்
05. பச்சைக் கம்பளம் விரித்தாற் போல
06. பறவையால்

II. 07. i. சென்றோம்
ii. பெருக்கமடைகின்றன
iii. தொடங்கியது
iv. பெய்யும்
v. வந்தார்
vi. எழுதப்பட்டது
08. i. நீர் ii. கத்தும் iii. கன்று
09. i. விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு காலையில் வயலுக்குச் சென்றனர்.
10. i. பிள்ளைகள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றனர்.
11. i. மின்விசிறி ii. திருவிழா
12. i. அரசன் "என்னையே நீ உணவாக உட்கொள்" என்றான்.
ii. ஞாலத்தின் மானப்பெரியது எது?
iii. பெரியவரே! கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்.
13. i. கற்பாறை ii. கடலலை
14. i. காய்ச்சல் ii. தலையணை iii. இளநீர்
15. i. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
ii. ஆனைக்கும் அடி சறுக்கும்
16. i. பேனை ii. நெற்கதிர்
17. i. உதவி செய்தல்
18. i. Waterfalls ii. Train
19. i. வகுப்பறை
ii. உங்கள் வயது எத்தனை? (உங்களுக்கு எத்தனை வயது?)
20. i. You have a pencil
ii. May I go to the office
21. 304
22. 315
23. 200ml
24. 1kg 900g
25. ரூபாய் 90.00
26. 18
27. 6m 15cm
28. 2 மணி
29. i. தமிழ் ii. சுற்றாடல், ஆங்கிலம்

III.
30. 2
31. 1
32. 2
33. 3
34. 1
35. 1
36. 2
37. 2
38. 1
39. 1
40. 2
41. 3
42. 2
43. 1
44. 2
45. 1
46. 3
47. 2
48. 1
49. 2
50. 3
51. 3
52. 1
53. 3
54. 2
55. 1
56. 3
57. 2
58. 3
59. 1


## விலைமனுக்களுக்கான அழைத்தல்



பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் - செயற்றிட்டம் ID P 163305**

### கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

**Procurement of Agricultural Machineries & Double Drum Vibration Roller (10 Ton)**

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து கடனொன்றை உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகையின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள அம்சங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாணம், உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டத்தின் சார்பாக மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இயந்திராதிகளின் வழங்குனராக பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
05. விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்படுத்தல்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் பிரிவின் விலைமனுக்கோரல் தரவில் வழங்கப்பட்டுள்ளன.
அ. கடந்த 5 (ஐந்து) வருடங்களில் செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்காக பெறப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட மொத்தமான பணக்கொடுப்பனவுகளின் வருடாந்த ஆகக்குறைந்த சராசரி நிதிப்புரள்வானது 50 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
ஆ. ஆர்வமுள்ள விலைமனுதாரரானவர் இலங்கையில் பதிவு பெற்ற கம்பனியொன்றாக 8 (எட்டு) வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு இருந்திருத்தல் வேண்டும்.
இ. ஆர்வமுள்ள விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளர் இந்த வியாபாரத்தில் மற்றும் இந்த ஒப்பந்தத்திலும் ஆகக் குறைந்தது கடந்த 7(ஏழு) வருடங்களில் இருந்திருத்தல் வேண்டும் (2017-2023)
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மட்டக்களப்பு, கல்லடி, சரவண வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்று (தொலைபேசி இல.: 065-2223512. தொலைநகல்: 065 2225655, மின்னஞ்சல்: btaclg@gmail.com) எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
07. 2024.01.26 ஆம் திகதியிலிருந்து 2024.02.15 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் மட்டக்களப்பு, கல்லடி, சரவண வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், **LDSP,** செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
08. 2024.02.16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மட்டக்களப்பு, கல்லடி, சரவண வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், **LDSP,** செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
09. சாத்தியமான விலைமனுதாரர் வழங்கப்பட்ட பொதிகளின் ஒன்று அல்லது மேற்பட்டவைகளுக்கு பங்குபற்றலாம்.
10. விலைமனுக்கள் 2024.05.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. மட்டக்களப்பு, கல்லடி, சரவண வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், **LDSP,** செயற்றிட்ட உதவிப் பணிப்பாளர் பிரதான அலுவலகத்தில் 2024.01.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுமென்பதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.
13. ஒப்பந்தத்தை வழங்குவதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
14. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்த நேரத்திலும் இந்த பெறுகைகை இரத்துச் செய்வதற்கும் அல்லது மீளப்பெறுவதற்குமான உரிமையை தொழில் வழங்குநர் கொண்டுள்ளார்.

| விலைமனு இல. | வேலைகளின் விளக்கம் | எண்ணிக்கை | ஒப்பந்தக் காலம் | தகுதித் தன்மை | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| LDSP/EP/BT/KPWPS/PT2/2023/(01) | விவசாய இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்:<br>Lot 1 – Tractor<br>Lot 2 – Agriculture Cultivator<br>Lot 3 – Rotavator Cultivator | 03<br>03<br>01 | 45 நாட்காட்டி நாட்கள் | 8 வருடங்களுக்கு மேலான காலப்பகுதிக்கு இலங்கையில் இயந்திராதிகளுக்காக கம்பனி பதிவு பெற்ற வழங்குநர் | 160,000.00 | 2024.06.28 |
| LDSP/EP/BT/KPWPS/PT2/2023/(02) | Lot 4 – Double Drum Vibration Roller<br>Lot 5 – Low Bed Trailor | 01<br>01 | 45 நாட்காட்டி நாட்கள் | 8 வருடங்களுக்கு மேலான காலப்பகுதிக்கு இலங்கையில் இயந்திராதிகளுக்காக கம்பனி பதிவு பெற்ற வழங்குநர் | 135,000.00 | 2024.06.28 |

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (LDSP), கி.மா.,**
**உள்ளூராட்சித் திணைக்களம், கிழக்கு மாகாணம்.**
**26.01.2024**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்
## உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்

**உலக வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றினால் நிதியிடப்பட்டது**
**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் (LDSP)**

**செயற்றிட்டப் பெயர்: காளிவயல் வீதி கட்டம் - III - இன் மீதி வேலையின் மீள்நிர்மாண தொடர்ச்சி ( LDSP வேலைகளின் பூர்த்தியாக்கம்)**

**Contract No.: LDSP/NP/JAF/PPS//2024/PT3/01**
**செயற்றிட்டப் பெயர்: கிராமக்கோட்டு சந்தியில் கடைத் தொகுதியின் கூரையின் மீதி வேலை கட்டம் II. Contract No.: LDSP/NP/JAF/PPS//2024/PT2/05**

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை LDSP PT 02 மற்றும் 03 இன் கீழ் காளிவயல் வீதி கட்டம் **III,** கிராமக்கோட்டு சந்தியில் கடைத் தொகுதியின் கூரையின் மீதி வேலை ஆகிய ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. வடமாகாணம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேச சபையின் சார்பாக உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுவின் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவிற்குமான வேலைகளாகிய காளிவயல் வீதி கட்டம்-III மற்றும் கிராமக்கோட்டு சந்தியிலுள்ள கடைத் தொகுதியின் கூரை வேலையின் மீதி நிருமாண வேலைக்காகவும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்காக நெடுஞ்சாலை மற்றும் கட்டட நிருமாணத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவைக் கொண்டிருப்பதுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார அல்லது கம்பனி பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்கான தகைமை தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தகைமை தகவல் 4 ஆம் பிரிவிலும் அட்டவணையின் 5 ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை புலோலி, பருத்தித்துறை பிரதேச சபை செயலாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 021 226 3276. தொலைநகல்: 021 226 3276 மின்னஞ்சல்: pointpedrops@gmail.com) 2024 சனவரி 29 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ருவரி 26 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
7. 2024 சனவரி 29 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ருவரி 26 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியில்) கீழேயுள்ள முகவரிக்கு 2024 பெப்ருவரி 27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள பிரகாரம் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. கீழேயுள்ள முகவரியில் 2024 பெப்ருவரி 12 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அவர்களின் சொந்த செலவிலேயே சமுகமளிக்கலாம்.
11. அனைத்து விலைமனுக்களும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவில் ஆகுசெலவு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் | தேவைப்படும் தரம் | விலைமனு சமர்ப்பித்தலுக்காக இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | தேவைப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணைத் தொகை (ரூபா) | செல்லுபடி--யாகும் காலம் |
| 1. | LDSP/NP/JAF/PPS/2024/PT3/01 | காளிவயல் வீதியின் மீள் நிர்மாணத்திற்கான மீதி வேலைகளின் தொடர்ச்சி. LDSP இன் வேலைகளின் பூர்த்தியாக்கம்) (கட்டம் -III) | 7.881 | 86 நாட்கள் | சி-7 அல்லது மேற்பட்டது (நெடுஞ்சாலை) | 77 நாட்கள் (2024.05.14 வரையும்) | 79,000.00 | 2024.01.11 |
| 2. | LDSP/NP/JAF/PPS/2024/PT2/05 | கிராமக்கோட்டு சந்தியில் கடைத் தொகுதியின் கூரையின் மீதி வேலை (கட்டம் -II) | 3.386 | 86 நாட்கள் | சி-8 அல்லது மேற்பட்டது (கட்டட நிர்மாணம்) | 63 நாட்கள் (2024.04.30 வரையும்) | 34,000.00 | 2024.05.28 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை பிரதேச சபை,**
**புலோலி.**
**29.01.2024**

# இந்தியா
## 75ஆவது குடியரசு தினம்
ஜனவரி 26, 2024









[illegible]

இந்தியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்





[illegible]

[illegible]

[illegible]

### உயர் ஸ்தானிகரின் செய்தி
## எனது அன்புக்குரிய இலங்கைச் சகோதர சகோதரிகளே,

[illegible]





[illegible]



[illegible]





[illegible]


இந்தியா
75ஆவது
குடியரசு
தினம்
ஜனவரி 26, 2024


முக்கியத்துவம் மிக்க ஓராண்டு
இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட 200 ஆண்டுகள்
நாடு முழுவதும் சுற்றுப் பயணம்



இந்தியாவின் 75வது
குடியரசு தினம்
LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.
உங்கள் வாழ்க்கைக்கான உயிரோட்டம்
இல.29/2, ஷானெல் கட்டடம்,
விசாகா வீதி,கொழும்பு - 04.
தொலைபேசி : 0112-552277
www.liclanka.com


IOC
Lanka IOC
75வது
இந்திய
குடியரசு
தினக்
கொண்டாட்டங்களுக்கு
மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!
XTRA PREMIUM EURO 3
HI OCTANE PETROL WITH FRICTION BUSTERS
SERVO
WORLD CLASS LUBRICANTS
LANKA SUPER DIESEL
Euro4

# பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய தேர்த் திருவிழா





கண்டி பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா உற்சவம் கடந்த (14) ஞாயிற்றுக்கிழமையன்று வாஸ்து சாந்தி கிரியையுடன் ஆரம்பமாகி கோலாகலமாக நடைபெற்றது. இரண்டாம் நாள் திங்கட்கிழமை மாலை புஸ்பாஞ்சலி திருவிழா விமரிசையாக நடைபெற்று, செவ்வாய்க்கிழமை (16) 108 கலசத் திருவிழாவும் நடைபெற்றது. அதேபோன்று, புதன்கிழமை கற்பூரத் திருவிழா நடைபெற்று வியாழக்கிழமை காலை திருவிளக்குத் திருவிழாவும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை குபேரலட்சுமி திருவிழாவும் நடைபெற்றதோடு சனிக்கிழமை காலை லட்சார்ச்சனை நடைபெற்றது.

கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மாவிளக்குத் திருவிழா நடைபெற்று அடுத்தநாள் திங்கட்கிழமை மாம்பழத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை 23 ஆம் திகதி பறவைக்காவடி ஊர்வலம், தீ மிதிப்பு வைபவம் மகேஸ்வரா பூசையுடன் அன்னதானம் வழங்கப்பட்டு இரவு வேட்டைத் திருவிழாவும் அடுத்த நாள் 24 ஆம் திகதி சங்காபிஷேக நிகழ்வும் பால்குட பவனியும் மகேஸ்வர பூசையுடன் அன்னதானமும் வழங்கப்பட்டு மாலை ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நேற்று 25ஆம் திகதி தீர்த்த உற்சவமும் கொடியிறக்கமும் நடைபெற்று இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையில் பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்றது. இன்று 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வைரவர் மடை நிகழ்வில் பன்விலை NEW AMBBAL CAFE உரிமையாளர் மயில் வாகனம் கணேசன் அனுசரணையில் கொட்டகலை ராகம்ஸ் இசைக்குழுவினரின் பக்திப்பாடல்கள் இசை நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

அத்துடன் தென்னிந்திய Zeeதமிழ் சரிகமப நிகழ்ச்சி புகழ் புசல்லாவை நயபனை தோட்டத்தைச் சேர்ந்த செல்வி அசானிக்கான வரவேற்பு நிகழ்வும் ஆசீர்வாத பூசையும் நடைபெறவுள்ளது. இரவு வைரவர் மடையுடன் திருவிழா நிகழ்வுகள் இனிதே நிறைவடையவுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவ்வருட தேர்த்திருவிழா நிகழ்வை பின்வருவோர் கையேற்று நடத்துகின்றனர். அறங்காவலர் சபைத் தலைவர் S.சுரேஸ்குமார், செயலாளர் திருமதி சங்கரன் உமாதேவி, பொருளாளர் S. சத்தியமோகன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் R.சுப்ரமணியம், M.நவநீதன், திருமதி K. மலர்வதனி, S. தியாகராஜா, R. சத்தியமூர்த்தி, திருமதி சகுந்தலா நாகராஜ் , K.சண்முகராஜா ஆகியோர். பன்விலை பிரதேசத்தில் கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பலர் திருவிழா நிகழ்வுகளில் ஆசி வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இன நல்லுறவுக்கு அடையாளமாக பூசை நிகழ்வுகளில் துனுஹப்பாவ ஸ்ரீ மஹாந்தாராம விகாராதிபதி தம்மாராம குணாநந்த தேரர் கலந்து ஆசியுரைகளை வழங்கி வைத்தார். மகோற்சவ பிரதம குரு யாழ்ப்பாணம் அம்பாள் உபாசகர் கிரியா பூஷணம் ஜோதிடமணி தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ இரா.அருள்நேச குருக்களும், யாழ்ப்பாணம் சாமுண்டா தேவிசமேத நாரையம்பதி ஞான வைரவர் ஆலயம் சங்கானை சாதகாசிரியர் சிவஸ்ரீ சந்ர ஜனார்த்தன சர்மா அவர்களும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆ.ரகுசர்மா அவர்களும் மாத்தளை நந்தகுமார் குருக்களும்,மோகன்ராஜ் சர்மா அவர்களும் மகோற்சவ கிரியைகளை இனிதே நிகழ்த்தி வைத்தனர்.

**(புசல்லாவை தினகரன் நிருபர் – நவநீதன்)**





















# ஈ.பி.டி.பியின் கொள்கைகளை தமிழ் கட்சிகள் பின்பற்றுவது வரவேற்கத்தக்கது

(கரவெட்டி தினகரன், நாகர்கோவில் விசேட நிருபர்கள்)



ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினுடைய கொள்கைகளை ஏற்று தமிழ் கட்சிகள் செயற்படுபடுவது வரவேற்கத்தக்கது என ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் நிர்வாகச் செயலாளரும். ஊடகப்பேச்சாளருமான.ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புதிய இந்திய தூதுவரை சந்தித்ததன் ஊடாக ஒரு செய்தியை வெளிப்படுத்தக்கூடியதாகவிருக்கிறது.

ஈழமக்கள் ஜனநாயக கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்ற அரசியல் தீர்வை அல்லது அரசியல் வழிகாட்டலை இன்று தமிழ் கட்சிகள் ஏற்று அல்லது பின்பற்றி வருகின்றமை வரவேற்கத்தக்கது. இணையவழி நிகழ்நிலை சட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு தரப்புகள் பல்வேறு விதமான கருத்துக்களை சொல்லி வருகிறார்கள்.

ஆனால் மடியிலே கனம் இருந்தால் தான் பயம் என்று ஒரு பழமொழி உண்டு. ஆகவே உண்மையான செய்திகளை வெளியிட்டு வருகின்ற எவரும் இதுதொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய தேவையில்லை.

மாறாக தவறான கருத்துக்களையோ, அல்லது உண்மைக்கு புறம்பான செய்திகளையோ வெளியிடுபவர்கள் தான் அச்சமடைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.



# யாழில் இளைஞனை கடத்த முயற்சி; ஒருவர் மடக்கி பிடிப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.நகர் பகுதியில் இளைஞனொருவரை கடத்த முற்பட்ட கும்பலை சேர்ந்த ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் யாழ்.நகர் முட்டாஸ் கடை சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. தனது தந்தையுடன் இளைஞன் ஒருவர் பயணித்துக்கொண்டிருந்த வேளை ,மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அவர்களை வழிமறித்து, தமது கைபேசியில் இளைஞனின் புகைப்படத்தை காட்டி , 'இது நீ தானே ?' என வினவியுள்ளனர். அதற்கு இளைஞன் ஆம் என்றதும் , இளைஞனை பிடித்து தமது மோட்டார் சைக்கிளில் ஏற்ற முற்பட்டுள்ளனர். இதன்போது இளைஞனும் தந்தையும் , கடத்தல் கும்பலுடன் முரண்பட்ட போது பொதுமக்கள் அவ்விடத்தில் கூடியதும், மோட்டார் சைக்கிளில் இருவர் தப்பி சென்றுள்ளனர்.

ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து , தடுத்து வைத்திருந்து , யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து , சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

# முல்லைத்தீவில் துப்பாக்கி ரவையுடன் இளைஞன் கைது

(ஓமந்தை விசேட நிருபர்)

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியிலுள்ள தனியார் வீட்டு காணியொன்றிலிருந்து நேற்று T56 துப்பாக்கிக்கான 100 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சந்தேகநபரின் வீட்டுக் காணியிலிருந்து ரி 56 துப்பாக்கிக்கான 100 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் 33 வயது மதிக்கதக்க சந்தேகநபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அதீத போதைப்பொருள் பாவனையால் ஒருவர் பலி

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்.நகரை அண்மித்த கலட்டி பகுதியில் அதீத போதைப்பொருள் பாவனையால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. கலட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இளைஞர் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பிரேதபரிசோதனையிலேயே இளைஞன் போதைப்பொருளை அதிக அளவில் நுகர்ந்தமையால் மரணம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பகுதியிலும் இதேபோன்று இளைஞர் ஒருவர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் போதைப்பொருள் பாவனையால் இரு மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.



மன்னார், பி.பி பொற்கேணி – அளக்கட்டு அஸ் / ஸபா பாலர் பாடசாலை விடுகைவிழா அண்மையில் பாடசாலை முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அலிகான் சரீப், உட்பட பள்ளி நிர்வாகிகள், கட்சி முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.


**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520001 கண்ட இல. 22 பத்திர இல. ... துண்ட இல. 0301 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 460, கலவில வீதி, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட அரங்கலகே தயானந்த (2023.11.30) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 06, 1ம் ஒழுங்கை புகையிரத நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 19.02.2024ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**



# கேள்வி அழைப்பு

## தேசிய விலங்கியல் பூங்காத் திணைக்களத்தில் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

தேசிய விலங்கியல் பூங்காத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழே விபரிக்கப்படும் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை திறந்த விலைமனுக் கோரல் மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | வாகன இலக்கம் | வகை | கேள்வி ஆவணத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ.) | கேள்வி ஆவணத்திற்கான மீளளிக்கப்படும் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | 53-2308 | டபிள் கெப் | 1000.00 | 3500.00 |
| 02 | RV-4378 | டிரக்டர் டெயிலர் | 1000.00 | 2500.00 |

1. இங்கு விற்பனை செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாகனங்களை 2024.01.29 முதல் 2024.02.16 வரை அலுவலக நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை திணைக்கள வளாகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. இவ்வாகனங்களை விற்பனை செய்வதற்காக கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2024.01.29 முதல் 2024.02.16 வரை அலுவலக நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை இடம்பெறும். ரூபா ஆயிரம் (1000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி அல்லது பணிப்பாளர் நாயகம், நிர்வாகப் பிரிவு, தேசிய விலங்கியல் பூங்காத் திணைக்களம், அநகாரிக தர்மபால மாவத்த, தெஹிவளை என்ற முகவரியில் குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒவ்வொரு வாகனத்திற்கும் வேறுவேறாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கேள்விப் பிணை வைப்பை செலுத்தியிருப்பதுடன், அப்பற்றுச்சீட்டின் மூலப்பிரதியைக் கட்டாயமாக விலைமனுக்களுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.02.16 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு மேற்படி முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரல் - 2024" என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொண்டுவந்து ஒப்படைக்கலாம். 2024.02.16 மு.ப. 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் பெறுகைக்குழுவின் விருப்பின் பிரகாரம் அமையும். கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

5. இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரங்களில் **011-2730278** ஐ அழைத்து நிர்வாக அதிகாரியிடம் 075-1516812 ஐ அழைத்து விடயப் பொருப்பதிகாரியிடம் அல்லது **adzoodep@gmail.com** மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய விலங்கியல் பூங்காத் திணைக்களம்,**
**அநகாரிக தர்மபால மாவத்த,**
**தெஹிவளை.**



# பெறுகை அறிவித்தல்

## கல்வி அமைச்சு

## திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவு,

கொழும்பு - 05, எல்விட்டிகல மாவத்த் இல.345/2 இல் அமைந்துள்ள கல்வியமைச்சிற்குச் சொந்தமான திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவில் கீழ்க்காணும் பெறுகைகளை நடத்திச் செல்வதற்காக தலைவர், பெறுகைக் குழுவினால் இத்தால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பெறுகை | இடம் | பெறுகைக் காலம் | கேள்விக் கட்டணம் (ரு) | கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் | கேள்வி பிணைமுறி பெறுமதி (ரு) |
|---|---|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்பு சேவையை நடத்திச் செல்லல் MSVR1/LOG/PRO/01/37 | நிபுனதாபியச நாராஹேன்பிட்ட | 2024.04.01 - 2025.03.31 வரையான ஒரு வருட காலத்திற்கு | 1000.00 | 2024.02.20 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு | 50,000.00 |
| | | இலங்கை கோள் மண்டபம் கொழும்பு - 07 | | 1000.00 | | |
| 02 | துப்புரவுவேற்பாட்டு சேவையைப் பெற்றுக் கொள்ளல் MSVR1/LOG/PRO/01/37 | 1. நிபுனதாபியச நாராஹேன்பிட்ட 2. செத்சிரிபாய 3ம் மாடி - பத்தரமுல்ல | 2024.04.01 - 2025.03.31 வரையான ஒரு வருட காலத்திற்கு | 1000.00 | 2024.02.20 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு | 50,000.00 |
| | | இலங்கை கோள் மண்டபம் கொழும்பு 07 | | 1000.00 | | |

01. மேற்படி ஒவ்வொரு பெறுகைக்குமான கேள்வி ஆவணங்களை 2024.01.30 முதல் 2024.02.19 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கொழும்பு - 05, எல்விட்டிகல மாவத்தை இல.354/2 இல் அமைந்துள்ள திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவு கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை அமைச்சின் காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை இவ் அமைச்சின் பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.02.20 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு தலைவர், சிறிய பெறுகைக் குழு, திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவு, கல்வியமைச்சு. "நிபுனதா பியச", இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அமைச்சின் தரைமாடி பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. 2024.02.20 பி.ப. 2.00 இற்கு பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

05. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு பெறுகையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரூ.50,000.00/- பெறுமதிக்குச் சமமான இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து 77 நாள் காலம் (2024.05.07) இற்கு செல்லுபடியாகுமாறு செயலாளர், கல்வியமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவின் பெயரில் பெற்றுக்கொள்ளும் கேள்விப் பிணை அல்லது ரூ25,000.00 தொகையை அமைச்சின் காசாளருக்கு செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஒவ்வொரு பெறுகையையும் நடத்திச் செல்லும் போது ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் அச் சேவையை நடத்திச் செல்வதுடன், ஒப்பந்தக்காரர் கல்வியமைச்சின் செயலாளரிடம் உடன்படிக்கைக்கு உட்படல் வேண்டும்.

07. இது பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படின் தொ.பே.இலக்கம்: 011 - 2136550 - பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் 011 - 2136551 உதவிப் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) அல்லது 011 - 2136554 பணிப்பாளர் - (செயற்பாட்டு பெறுகை மற்றும் பெறுகை)ஐ அழைத்து அல்லது 0112136555 பெறுகை பிரிவிற்கு அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

08. இப் பெறுகை பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.02.13 மு.ப. 11.00 இற்கு முதலாம் மாடி அமைச்சு செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக் குழு,**
**திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆய்வு மற்றும், புத்தாக்கங்கள் பிரிவு,**
**கல்வியமைச்சு,**
**"நிபுனதா பியச" இல. 354/2,**
**எல்விட்டிகல மாவத்த,**
**நாரஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05**



# அபெக்ஷா வைத்தியசாலை (மஹரகம)

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## 2024/2025 ஆம் ஆண்டுகளுக்கு அபெக்ஷா வைத்தியசாலையில் (மஹரகம) RAZAVI கட்டிடத்தில் 2 எண்ணிக்கையான 500 கேவீஏ மின்பிறப்பாக்கிகளின் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்னராக மற்றும் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகள்

01. கீழே விபரிக்கப்பட்டவாறு 2024/2025 ஆம் ஆண்டுகளுக்கு மின்பிறப்பாக்கி பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் சேவைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அபெக்ஷா வைத்தியசாலையின் (மஹரகம) சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுதாரர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அபெக்ஷா வைத்தியசாலையின் (மஹரகம) பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 8 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.

04. 2024.02.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

05. விலைமனுக்கள் 49 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2024.02.16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த வங்கியொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியொன்றினால் 15,000 ரூபா தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியாகும் காலமானது 77 நாட்களுக்காகவிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

08. மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முகவரி பின்வருமாறு :

**பணிப்பாளர்,**
**அபெக்ஷா வைத்தியசாலை (மஹரகம),**
**தொலைபேசி : 011 2844450**
**தொலைநகல்: 011 2842051**



# ஆண்டின் சிறந்த ஐ.சி.சி ஒருநாள் வீராங்கனையானார் சமரி அத்தபத்து

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் (ஐ.சி.சி.) ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனையாக இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து தெரிவாகியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளில் அவரது சிறந்த ஆட்டத்திற்காகவே இந்த கௌரவம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வரிசை வீராங்கனையாகவும் அணித் தலைவியாகவும் திறமையை வெளிப்படுத்திய அவர், நியூசிலாந்துக்கு எதிராக இலங்கையின் முதல் தொடர் வெற்றிக்கு அணியை வழி நடத்தி இருந்தார். அத்தபத்து 2023 ஆம் ஆண்டில் மொத்தம் 8 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 415 ஓட்டங்களையும் ஒரு விக்கெட்டையும் பெற்றுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரை 1–0 என கைப்பற்றி கடந்த ஆண்டை ஆரம்பித்த சமரி அத்த பத்து, அணித் தலைவியாக நியூசிலாந்துக்கு எதிராக முதல் முறை 2–1 என ஒருநாள் தொடரை இலங்கை வெல்ல உதவினார். இந்தத் தொடரில் அவர் அபாரமாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 108 மற்றும் ஆட்டமிழக்காது 140 என இரு சதங்களை பெற்றிருந்தார்.

எனினும் சமரி சோபிக்கத் தவறிய நிலையில் வெளிநாட்டு மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை அணி 0–2 என தொடர் தோல்வியை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஐ.சி.சி வெளியிட்ட ஆண்டின் சிறந்த மகளிர் ஒருநாள் மற்றும் டி20 இரு அணிகளுக்கும் தலைவியாக சமரி அத்தபத்துவின் பெயர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 33 வயதான சமரி அத்தபத்து இதுவரை இலங்கை அணி சார்பில் 98 மகளிர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 8 சதம் மற்றும் 15 அரைச்சதங்களுடன் 3255 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு 34.26 ஓட்ட சராசரியையும் பதிவு செய்துள்ளார்.

அதேபோன்று இதுவரை 122 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் அவர் ஒரு சதம் மற்றும் 8 அரைச்சதங்களுடன் 2651 ஓட்டங்களை குவித்துள்ளார். இதன் ஓட்ட சராசரி 22.65 ஆகும்.

பந்துவீச்சிலும் அவர் ஒருநாள் போட்டிகளில் 28 விக்கெட்டுகளையும் டி20 இல் 40 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

## சர்வதேச செய்திகள்



# காசாவின் கான் யூனிஸை சுற்றிவளைத்து தாக்குதல்: ஐ.நா. முகாம் மீது செல் வீச்சு

## போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம்

தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸை ஏனைய பகுதிகளில் இருந்து துண்டித்துள்ள இஸ்ரேலிய படை அங்கு நேற்று வான் மற்றும் தரை வழியாக உக்கிர தாக்குதலை நடத்தியது.

இந்த நகரில் உள்ள ஐ.நா அகதி முகாம் ஒன்றின் மீது இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டது கடும் கண்டத்திற்கு உள்ளாகியுள்ளது.

கான் யூனிஸை சுற்றிவளைத்ததாகக் கூறிய இஸ்ரேலிய இராணுவம் அங்கு இஸ்ரேலிய துருப்புகள் இடிந்த கட்டடங்களுக்கு மத்தியில் நகர்புற போர் நடவடிக்கையில் ஈடுபடும் வீடியோ கட்சிகளை வெளியிட்டுள்ளது.

கான் யூனிஸின் மத்திய மற்றும் மேற்கு பகுதியில் உக்கிர மோதலில் ஈடுபடுவதாக ஹமாஸ் ஊடக அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இந்த உக்கிர மோதல்கள் மற்றும் தாக்குதல்கள் காரணமாக அந்த நகரில் பெரும் உயிர்ச் சேதங்களும் பதிவாகியுள்ளன.

நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வீச்சுகளில் நுஸைரத் முகாமில் நான்கு சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கான் யூனிஸின் வடக்கில் உள்ள அல் சட்ர் அல் கார்பில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இஸ்ரேலிய வான் தாக்குதல் ஒன்றில் இரு சிறுவர்கள் உட்பட மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் அல் அமல் மருத்துவ மனையை முற்றுகையிட்டிருக்கும் இஸ்ரேலிய படைகள் அதனை சூழவுள்ள பகுதிகளில் செல் மற்றும் குண்டு தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ஐ.நா முகாம் ஒன்றின் மீது கடந்த புதனன்று (24) நடத்தப்பட்ட செல் குண்டு தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டு மேலும் 75 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் காசா பகுதிக்கான தலைவர் தோமஸ் வைட் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி தெரிவித்துள்ளார்.

“போரின் அடிப்படை விதிகள் மீண்டும் ஒருமுறை அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது” என்று எக்ஸ் சமூகதளத்தில் லசரினி குறிப்பிட்டார். அந்த வளாகம் ஐ.நா முகாம் என்பது தெளிவாக அடையாளமிடப்பட்டிருந்ததாகவும் அதன் இணைப்பு செயற்பாடுகள் இஸ்ரேலிய நிர்வாகத்துடன் பகிரப்பட்டு வந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாக்குதலை அடுத்து முகாமில் உள்ள கட்டடங்கள் தீப்பற்றி எரிந்ததாக பலஸ்தீன பகுதிகளுக்கான இடைக்கால ஐ.நா மனிதாபிமான இணைப்பாளர் ஜேம்ஸ் மக்கோல்ட்ரிக் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

“பலரும் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச்செல்ல முயன்றபோதும் அது முடியாமல்போயுள்ளது” என்றார்.

இந்த சம்பவம் குறித்து ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் இஸ்ரேல் இராணுத்திடம் வினவியபோது, “அந்தப் பகுதியில் உள்ள படைகளின் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாக” கூறியதோடு, இது ஹமாஸின் தாக்குதலால் இடம்பெற்றிருப்பதற்கான சாத்தியம் பற்றியும் விசாரித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அமெரிக்கா கண்டித்திருப்பதோடு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் வெடான்ட் படேல் கூறியதாவது, “பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு ஐ.நா வசதிகளின் பாதுகாக்கப்பட்ட அந்தஸ்து மதிக்கப்பட வேண்டும்” என்றார்.

### "இராணுவம் தீர்வல்ல"

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலில் 1,140 பேர் கொல்லப்பட்டு 240 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டதை அடுத்தே இந்தப் போர் வெடித்தது. இதில் தொடர்ந்து 132 பணயக்கைதிகள் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது. இதில் 28 பயணக்கைதிகளின் சடலங்களும் உள்ளடங்கும்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத குண்டு தாக்குதல்களில் காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 26 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இதில் 70 வீதமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசாவின் தெற்கு எல்லை நகரான ரபாவில் கடந்த புதனன்று பள்ளிவாசல் ஒன்று தாக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டதை பலஸ்தீனர்கள் பார்வையிட்டனர்.

“பாதுகாப்பு வலயம் என (இஸ்ரேலால்) அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் நாம் ரபாவை நோக்கி பயணித்தோம், ஆனால் அதுவும் மற்ற இடங்கள் போல உள்ளது” என்று கான் யூனிஸில் இருந்து இடம்பெயர்ந்து வந்த முஹமது பார்பக் ஏ.எப்.பி செய்தி நிறுவத்திடம் தெரிவித்தார்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இஸ்ரேலிய அரசுக்கு போர் நிறுத்தம் ஒன்றுக்கான அழுத்தம் அதிகரித்துள்ளது. குறிப்பாக காசா போர் ஆரம்பித்தது தொடக்கம் ஒரே நாளில் அதிகபட்சமாக கடந்த திங்களன்று 24 இஸ்ரேலிய படையினர் காசாவில் கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேலுக்குள்ளும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

டெல் அவிவ் நகரில் இஸ்ரேலிய ஆர்ப்பாட்டக்காரர்கள் “இரத்தக்களரியை நிறுத்து” என்று எழுதப்பட்ட பதாகையுடன் வீதியை மறித்ததோடு, ஹமாஸின் பிடியில் இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு உடன்பாடு ஒன்றுக்கு செல்லும்படி இஸ்ரேலிய அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

“அரசுக்கு இது போதும் என்று கூறவே நாம் இங்கு வந்திருக்கிறோம். அனைத்து பணயக்கைதிகளும் வீடு திரும்ப வேண்டும் என்பதோடு தற்போது போர் நிறுத்தம் ஒன்று வேண்டும்” என்று ஆர்ப்பாட்டக்காரரான சபிர் ஸ்லுஸ்கர் குறிப்பிட்டார்.

“இங்கு இராணுவத் தீர்வு இல்லை, இராஜதந்திர தீர்வு மாத்திரமே உள்ளது. உடன்படிக்கை ஒன்றினால் மாத்திரமே பணயக்கைதிகளை திரும்பக் கொண்டுவர முடியும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.



எனினும் தொடர்ந்து போரை முன்னெடுப்பதில் நெதன்யாகு விடாப்பிடியாக இருப்பதோடு, ஹமாஸின் “ஆக்கிரமிப்பு மற்றும் தீமை” அழிக்கப்படும் வரை சண்டை தொடரும் என்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசிய நெதன்யாகு குறிப்பிட்டார்.

### பணயக்கைதிகள் பேச்சு

போர் நிறுத்தம் ஒன்றுக்காக கைதிகள் பரிமாற்றம் ஒன்றுக்கான வாய்ப்பு தொடர்பில் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மத்திய கிழக்கு பிரதிநிதியான பிடிரட் மக்குர்க் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். மறுபுறம் ஹமாஸ் தூதுக் குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கெய்ரோ சென்று எகிப்து உளவுப் பிரிவு தலைவரை சந்தித்ததோடு புதிய போர்நிறுத்த முன்மொழிவுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியதாக பலஸ்தீன தரப்பை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதில் எகிப்து மற்றும் கட்டார் நாடுகள் மத்தியஸ் முயற்சியில் ஈடுபட்டு வருவதோடு இந்த நாடுகளின் முயற்சியில் கடந்த நவம்பரில் ஒருவார போர் நிறுத்தம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது 105 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதோடு அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருக்கும் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் நெதன்யாகு பணயக்கைதிகளின் குடும்பத்தினரிடம் பேசியபோது, கட்டாரின் மத்தியஸ்தம் “பிரச்சினைக்குரியது” என்றும் அது ஹமாஸுக்கு நிதி அளிப்பதாகவும் குற்றம்சாட்டி இருந்தார்.

இந்தக் கூற்று “திகைப்பளிப்பதாக” குறிப்பிட்டிருக்கும் கட்டார், நெதன்யாகு மத்தியஸ்த முயற்சிக்கு இடையூறு செய்வதாக குற்றம்சாட்டியுள்ளது. காசா போரினால் மத்திய கிழக்கில் உள்ள ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை இலக்கு வைத்து தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருப்பது இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வரும் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் இரு வர்த்தகக் கப்பல்களை இலக்கு வைத்து மூன்று ஏவுகணைகள் வீசியுள்ளனர். எனினும் அதில் ஒரு ஏவுகணை இலக்கு தவறியதாகவும் மற்ற இரண்டு ஏவுகணைகளையும் அமெரிக்க கடற்படை சுட்டுவீழ்த்தியதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்களை பின்னர் உறுதி செய்த ஹூத்திக்கள், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அந்த கிளர்ச்சியாளர்கள் மீது பதில் தாக்குதல்களை நடத்தி வந்தபோதும் தொடர்ந்து கப்பல்கள் இலக்கு வைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பதற்றம் நீடிக்கும் சூழலில் நேற்று இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். தெற்கு ஜெனினின் பீர் அல் பாஷா கிராமத்திற்குள் ஊடுருவிய இஸ்ரேலிய படை 24 வயதான விசாம் வலீத் முஹமது காஷான் என்பவரை சுட்டுக்கொன்றதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது.

இதன்போது இஸ்ரேலிய படை அவரது சகோதரர் அஹமது என்பவரையும் கைது செய்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் குறைந்தது 372 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# இஸ்ரேலுக்கு எதிரான வழக்கில் ஐ.நா நீதிமன்றம் இன்று தீர்ப்பு



காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபடுவதாக தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கில் இஸ்ரேலுக்கு எதிரான அவசர நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் இன்று (26) தீர்ப்பு வழங்கவுள்ளது.

இந்த ஐ.நா உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை (24) வெளியிட்ட அறிவிப்பில், தென்னாபிரிக்காவின் கோரிக்கை குறித்து 17 பேர் அடங்கிய நீதிபதிகள் குழாம் ஜனவரி 26 ஆம் திகதி பதிலளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பின்போது நீதிமன்றத்தில் தோன்றுவதற்காக தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் நலடி பன்டோர், ஹேக் நகருக்கு பயணிப்பதாக தென்னாபிரிக்க அரச பேச்சாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டதான பிரதான குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றம் இன்று தீர்ப்பளிக்காதபோதும், இஸ்ரேலிய நடவடிக்கைகளை தடுப்பதற்கு தென்னாபிரிக்கா விடுத்த கோரிக்கை தொடர்பிலேயே அவதானம் செலுத்தவுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற இரு நாள் வழக்கு விசாரணையில், பலஸ்தீன நிலப்பகுதியில் இஸ்ரேல் மேற்கொள்ளும் பேரழிவுகள் கொண்ட இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கும்படி சர்வதேச நீதிமன்றத்திடம் தென்னாபிரிக்கா கோரியிருந்தது.

இந்த நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா ஒன்பது தடை உத்தரவுகளை தாக்கல் செய்திருந்தது. அதில் காசாவில் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கு இஸ்ரேலுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படியும், காசாவுக்கான மனிதாபிமான உதவி விநியோகத்தை தடுக்காது வசதி அளிப்பதற்கு இஸ்ரேலை வழிநடத்தும்படியும் கோரியிருந்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மேன்முறையீடு இன்றி செயற்படுத்துவதற்கு கடப்பாடு இருந்தபோதும், அதனை செயற்படுத்துவதற்கு நீதிமன்றத்திடம் வழிமுறைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நைட்ரஜன் வாயுவை செலுத்தி மரண தண்டனைக்கு ஒப்புதல்

அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் மரண தண்டனைக் கைதி ஒருவரின் கடைசி நிமிட மேன்முறையீடு தோல்வி அடைந்த நிலையில் அந்தக் கைதி அந்நாட்டில் முதல் முறையாக நைட்ரஜன் வாயு மூலம் மரண தண்டனையை எதிர்கொண்டுள்ளார்.

கென்னத் இயுஜன் ஸ்மித் என்ற அந்தக் கைதிக்கு வழங்கப்படும் தண்டனை கொடூரமானது மற்றும் அசாதாரணமானது என்று அவரது வழக்கறிஞர் வாதிட்டபோதும் அமெரிக்க உச்ச நீதிமன்றம் மற்றும் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றம் தண்டனையை தடுப்பதை நிராகரித்தன. இதன்படி முகக் கவசம் ஒன்றின் மூலம் ஸ்மித்தின் உடலுக்குள் 15 நிமிடங்கள் நைட்ரஜன் செலுத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது. அமெரிக்க நேரப்படி நேற்று (25) இந்தத் தண்டனை நிறைவேற்றப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.



1988 ஆம் ஆண்டு கூலிக்காக போதகரின் மனைவி எலிசபட் சென்னட்டை கொலைசெய்ததாகவே 58 வயதான ஸ்மித் குற்றங்காணப்பட்டார்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் மரண தண்டனை கைதியாக இருக்கும் ஸ்மித்துக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விச ஊசி மூலம் மரண தண்டனை நிறைவேற்ற முயன்றபோதும், அதற்கான நரம்பை கண்டுபிடிக்க முடியாததால் தோல்வி அடைந்தது.

மனைவியின் காப்புறுதிப் பணத்தை பெறுவதற்காக கணவரால் திட்டமிடப்பட்ட கொலையை ஸ்மித்துடன் மேலும் ஒருவர் இணைந்து 1,000 டொலர் பணத்திற்கான செய்துள்ளனர்.

விசாரணை இடம்பெற்றபோது மதப் போதகரான அந்தக் கணவர் தற்கொலை செய்துகொண்ட நிலையில் மற்ற கொலையாளியான ஜோன் பொரஸ்ட் பாக்கர் மீது கடந்த 2010 ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரிமைப் பதிவுச் சட்டத்தின் பிரிவு 55**

அநுராதபுரம் மாவட்டம் கிழக்கு நுவரகம மாகாண பிரதேச செயலகப் பிரிவின் 257-3 படிமுறை 3 கிராமத்தின் காடாஸ்ட்ரல் வரைபட இல 110209 வலய இலக்கம் 01 பத்திர இல 01 லொட் இல 100 இன் காணி உரிமையாளரான, இல. 65, புதுபுர, அனுராதபுரம் என்ற விலாசத்தில் வசித்த நந்தா விஜேசிங்க என்பவர் 2022.01.11 அன்று மரணமடைந்துள்ளார். இறந்தவரின் வாரிசுதாரர்கள் 2024.02.06ம் திகதிக்கு முன்னர் அநுராதபுரம், தர்மபால மாவத்தை, இல. 87/25 ஏ இல் உள்ள பிராந்திய காணி உரித்துகள் நிருணயத் திணைக்களத்திற்கு சமூகமளிக்க வேண்டப்படுகின்றனர்.

எல்.எம்.ஜி. குணதிலக
துணை ஆணையாளர் (பதில்)
காணி உரித்துகள் நிருணயத் திணைக்கள பிராந்திய அலுவலகம்,
அநுராதபுரம்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

KA-1597 MARUTI 800, 2005, CAR அதியு யர் வி லைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 005601

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

ABQ-2531 BAJAJ 2017, THREEWHEELER அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 005599

## வேலைவாய்ப்பு

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

புறக்கோட்டை, பிரதான வீதியில் உள்ள அழகு சாதன கடைக்கு விற்பனை ஊழியர்கள் தேவை. வயது 30. தொடர்பு 0777433455. (கொழும்பு விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது. 005677

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

இறப்பர் பால் வெட்டுதல் மற்றும் தென்னந் தோட்ட வேலைக்கு குடும்பம் தேவை. 0712724866, 0769259188. 005813




## முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்-எலிய

### புதிய மாணவிகளைச் சேர்த்தல் - 2024

(தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம்)

**அரபு மொழி மற்றும் இஸ்லாமிய கல்வியில் தேர்ச்சி பெற்ற பன்முக ஆளுமை கொண்ட தாயியாக்களை உருவாக்கும் ஒரு களம்.**

### ஏன்? முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி?

1. தமிழ், சிங்கள மொழி மூலங்களிலான எட்டு வருட இஸ்லாமிய கற்கை நெறி.
2. பகுதி நேர அல் குர்ஆன் மனனப் பிரிவு.
3. க.பொ.த சாதாரண மற்றும் உயர் தர கலை, விஞ்ஞான பிரிவுகளுடன் அல் ஆலிம் பரீட்சைகளுக்கான தயார்படுத்தல்.
4. நான்கு மொழிகளை கற்றலுடன் தொடர்பாடல் விருத்தி.
5. தகவல் தொழிநுட்பக் கல்வி.
6. உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கூடிய, கற்றலுக்கான பாதுகாப்பு மிக்க ஆன்மீக சூழல்.
7. உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழக நுழைவுக்கான அதிகபட்ச வாய்ப்பும்.

### விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

- விண்ணப்பதாரி 2024.01.01ம் திகதியில் 12 வயதுக்கு மேற்படாதவராகவும் 11 வயதுக்குக் குறையாதவராகவும் இருப்பதோடு, 2023 ஆண்டில் 6ம் தரத்தில் தமிழ் / சிங்கள மொழி மூலம் கற்பவராகவும் இருக்க வேண்டும்.
- விடுதியில் தங்கியிருந்து கல்வியை தொடரக்கூடிய உடல் ஆரோக்கியம் இருத்தல்.

- மேற்படி தகுதிகளை கொண்ட மாணவிகள் கல்லூரியின் உத்தியோகபூர்வ இலக்கங்களைத் (0332270303 / 0759970303 whatsapp) தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களை pdf வடிவில் வட்ஸ்அப் மூலமாக எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாக கல்லூரிக்கு கையளிக்கும் போது பரீட்சைக் கட்டணமாக ரூபா 500.00 யினை செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக அனுப்புவதாயின் பரீட்சைக் கட்டணமான ரூபா 500.00 பெறுமதியான காசுக்கட்டளையையும் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**PRESIDENT,
MUSLIM LADIES ARABIC COLLEGE,
P.O BOX – 01, KAL ELIYA. (11160)**

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### ரூ.40,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.25%2026'A' தொடர்களின் கீழ் ரூ. 24,000 மில்லியனையும் 11.50%2028'B' தொடர்களின் கீழ் ரூ. 16,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 ஜனவரி 30 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.25%2026'A' | 11.50% 2028 'B' |
|---|---|---|
| ISIN* | LKB 00326L151 | LKB 00528L152 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 24,000 மில்லியன் | ரூ. 16,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.25% ஆண்டொன்றிற்கு | 11.50% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2023 டிசெம்பர் 15 | 2023 டிசெம்பர் 15 |
| முதிர்வுத்திகதி | 2026 டிசம்பர் 15 | 2028 டிசெம்பர் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 ஜுன் & 15 டிசெம்பர் | 15 ஜுன் & 15 டிசெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 1.4754 | ரூ. 100.00 இற்கு ரூ. 1.5082 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 ஜனவரி 30, செவ்வாய்க்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 ஜனவரி 30 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 பெப்ரவரி 01 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிட்டட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிட்டட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிட்டட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்கள்/ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்

**விலைமனுக்கோரலுக்கான அழைப்பு**

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்திற்கு 1,200 ± 5% மெ. தொன் யூரியா (Prilled) உரத்தை பைகளில் வழங்குவதற்கான விலைக்கோரல்**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் நிறுவனத்திற்கு மாற்றமுடியாத, திரும்பப்பெற முடியாத, கடன் கடிதம் (LC நிபந்தனைகள்) கொடுப்பனவு நிபந்தனைகளின் கீழ் 1,200 ± **5%** மெ. தொன் யூரியாவை (Prilled) வழங்குவதற்காக புகழ்வாய்ந்த உர உற்பத்தியாளர்கள், முதன்மையானவர்கள், வழங்குநர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

**விலைக்கோரல் இல : 2024/CCF/ICB/UR/(P)/01**

| விலைக்கோரல் இல. | அளவு (மெ.தொ) | உரத்தின் வகை | விலைக் கோரல் பிணை உத்தரவாதம் | மீளளிக்கப்படாத விலைக் கோரல் கட்டணம் | கொழும்புக்கு விநியோகித்தல் |
|---|---|---|---|---|---|
| 2024/CCF/ICB/ UR(P)/01 | 1,200± **5%** | யூரியா (Prilled) | USD 6000 | ரூபா 25,000.00 | கடன் கடிதம் நிறுவப்பட்ட நாளிலிருந்து 42 நாட்கள் |

02. விலைமனுதாரர்கள் பின்வரும் மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   I. சகல விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழான பொருட்களை வழங்குவதற்கு சட்டபூர்வமா உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   II. விலைமனுதாரர்கள் ஆர்வ முரண்பாடுகளைக் கொண்டிருத்தல் கூடாது.
   III. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாளில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடங்களுக்கு அந்தந்த நாட்டில் பொருத்தமான அதிகாரத்தில் வியாபாரமாகப் பதிவு செய்திருத்தல்.
   IV. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாள் முதல் அண்மைய கடந்த (01) ஒரு வருட காலத்திற்குள் எந்தவொரு நாட்டிற்கும் இரசாயன உரம் அல்லது வேறேதேனும் பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தில் அனுபவம்.
   V. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் விடயத்தில் உள்நாட்டு பிரதிநிதி / உள்நாட்டு முகவர் முதன்மையாளரின் சார்பாக பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.

03. சகல விலைமனுக்களுடனும் இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை உத்தரவாதம் அல்லது வங்கி வரைவு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைக்கோரல் பிணை உத்தரவாதம் / வங்கி வரைவு மேற்கூறப்பட்டவாறு இருக்க வேண்டும்.

04. விலைக்கோரல் ஆவணத்தின் ஒரு தொகுதிக்கு முறையே மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதி) அவர்களிடமிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தனித்தனியாக கொள்வனவு செய்யலாம்.

05. விலைக்கோரல் ஆவணங்கள் 2024 ஜனவரி 26ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 15ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணி மற்றும் பி.ப. 3.30 மணிக்கிடையில் வழங்கப்படும்.

06. விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும். (ICB)

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 பெப்ரவரி 08ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும்.

08. முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2024 பெப்ரவரி 16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**பெறுகைப் பிரிவு,**
**வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை.**

09. விலைக்கோரல்கள் 2024 பெப்ரவரி 16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

10. மேலதிக தகவல்களை வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி.'.தொலைநகல்: 94-11-4335711/ 94-11-2949091/ 077- 4451382)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு,**
**வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**
**திகதி : 2024.01.26**

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்

**விலைகோரலுக்கான அழைப்பு**

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்திற்கு 1,200 ± 5% மெ. தொன் யூரியா (Prilled) உரத்தை பைகளில் வழங்குவதற்கான விலைக்கோரல்**

**விலைக்கோரல் இல. 2024/CCF/NCB/UR(P)/02**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வத்தளை, ஹுணுப்பிட்டிய, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் நிறுவனத்திற்கு 1,200 ± **5%** மெ. தொன் யூரியாவை (Prilled) வழங்குவதற்காக தேசிய உர செயலகத்தில் (சேுளு) பதிவு செய்துள்ள புகழ்வாய்ந்த இறக்குமதியாளர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வ.'.ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| விலைக்கோரல் இல. | அளவு (மெ.தொ) | உரத்தின் வகை | விலைக் கோரல் பிணை உத்தரவாதம் (ரூபா சதம்) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் | வத்தளை, ஹுணுப்பிட்டிய, மத்திய களஞ்சியசாலை கட்டிடத்தொகுதிக்கு விநியோகித்தல் |
|---|---|---|---|---|---|
| 2024/CCF/ NCB/ UR(P)/02 | 1,200± **5%** | யூரியா (Prilled) | 1,980,000.00 | ரூபா 25,000.00 | ஒப்பந்தம்.'. கொள்வனவுக் கட்டளை கைச்சாத்திடப்பட்ட நாள் முதல் 7 நாட்கள் |

02. விலைமனுதாரர்கள் பின்வரும் மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   I. சகல விலைமனுதாரர்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழான பொருட்களை வழங்குவதற்கு சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   II. விலைமனுதாரர்கள் ஆர்வ முரண்பாடுகளைக் கொண்டிருத்தல் கூடாது.
   III. இலங்கையில் பொருத்தமான அதிகாரத்தில் வியாபாரமாகப் பதிவு செய்திருத்தல்.
   IV. தேசிய உர செயலகத்தினால் வழங்கப்படும் இறக்குமதி உரிமத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. சகல விலைமனுக்களுடனும் இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை உத்தரவாதம் அல்லது வங்கி வரைவு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைக்கோரல் பிணை உத்தரவாதம் / வங்கி வரைவு மேற்கூறப்பட்டவாறு இருக்க வேண்டும்.

04. மீளளிக்கப்படாத ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபா) விலைக்கோரல் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதி) அவர்களிடமிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

05. விலைக்கோரல் ஆவணங்கள் 2024 ஜனவரி 26ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 15ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணி மற்றும் பி.ப. 3.30 மணிக்கிடையில் வழங்கப்படும்.

06. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும். (NCB)

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 பெப்ரவரி 08ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு வத்தளை, ஹுணுப்பிட்டிய, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும்.

08. முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2024 பெப்ரவரி 16ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு,**
**வ.'.ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை.**

09. விலைக்கோரல்கள் 2024 பெப்ரவரி 16ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

10. மேலதிக தகவல்களை வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல்: 94-11-4335711/ 94-11-2949091/ 077- 4451382)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு,**
**வ/ப கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம்,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**

**திகதி: 2024-01-26**

**அறிவிப்பு**

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பெயர்: **வனிகசூரிய அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிடெட்**

நிறுவனத்தின் எண்: **PV00291579**

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : **எண் 45/10, கொழும்பு வீதி, ஹோமாகம**

இணைக்கப்பட்ட திகதி : **05.01.2024**

இயக்குநர்

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் - பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520001 கண்ட இல. 42 பத்திர இல. : --- துண்ட இல. 0056 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த. 332/2, தேவால வீதி, கட்டுவான, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட ஜயவிக்ரம விதானகே ஆரியதாச (2020.05.02) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.02.26 ஆம் திகதிக்கு முன் இல. 06 முதலாம் ஒழுங்கை, ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# பெறுகை அறிவித்தல்

# மருந்து உறைகளைக் கொள்வனவு செய்தல்

## ஆதார வைத்தியசாலை (போதனா) – கம்பளை

01. கீழ்க்காணும் மருந்து உறைகளை வழங்குவதற்காக கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா), பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. இலங்கைச் சந்தைக்கான மருந்து உறைகளை வழங்குகின்ற உற்பத்தியாளர்கள் மாத்திரம் இந்த கேள்வியில் கலந்துகொள்ள தகைமை பெறுவர்.
03. கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பிப்பதன் பேரில் ஓர் விலைமனுதாரர் சார்பாக எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படுபவரால் கொள்வனவு செய்யப்படும் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் விலைமனு ஆவணங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
    - அ) கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா), பெறுகைக்குழுத் தலைவருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பம்.
    - ஆ) வேலை நேரங்களில் கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா), கணக்காளருக்கு காசாக ரூ.1000.00 ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில்.
    - இ) ஓர் போட்டோப்பிரதி அல்லது உறுதி செய்த பிரதியுடன் வியாபார பதிவுச்சான்றிதழ்.
04. 2024.01.26 முதல் 2024.02.19 வரை மு.ப.9.30 மற்றும் பி.ப.2.00 மணிக்கிடையில் வேலை நாட்களில் கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா) இலிருந்து விலைமனு ஆவணங்களை சேகரிக்க முடியும்.
05. பொறியிடப்பட்ட விலைமனு ஆவணங்களை கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது 2024.02.20 மு.ப.10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா) கணக்காளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிடல் வேண்டும்.
06. 2024.02.20 மு.ப.10.30 இற்கு கம்பளை, ஆதார வைத்தியசாலை (போதனா) பெறுகைக்குழு தலைவரின் அலுவலகத்தில், கேள்விகள் மூடப்பட்ட பின்பு உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். அவ்வேளையில் ஓர் அவதானிப்பாளராக, விலைமனுதாரர் அல்லது பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

**மருத்துவர் துமிந்த டயஸ்,**
**பணிப்பாளர்**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா), கம்பளை**

## கொழும்பு மாநகர சபை

# கேள்வி/விலைமனுவிற்கான அழைத்தல்

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகள்/ பொருள்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | விளக்கம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகுதித் தன்மை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணை/ உத்தரவாதப் பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 1 | CPD21/ 026/ 2024 | வாகனங்களை வாடகைக்கு விடல் மற்றும் இயந்திரங் களுக்கான கேள்வி | இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளுக்காக வியாபார பதிவுடன் அனுபவத்தைக் கொண்டுள்ள வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | 5,900 ரூபா | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 2 | CPD 13/ 018/ 2024 | பொது நூலகம் மற்றும் நான்கு மாநகர இடப்பரப்பிற்கான சுகாதார சுத்திகரிப்பு சேவையாளர்கள் | | 5,900 ரூபா | பின்வருவனவற்றிக்கான நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்.<br>➢ பொது நூலகம் ரூ. 400,000.00<br>➢ போனவிஸ்டா<br>➢ பல்நோக்கு சனசமூக நிலையம் PAD - ரூ. 200, 000.00<br>➢ சுகாதார சிகிச்சை திணைக்களம்<br>➢ வனாத்தமுல்ல டிஸ்பென்சரி ரூ. 20, 000.00<br>➢ கொட்டாஞ்சேனை டிஸ்பென்சரி ரூ. 20,000.00<br>➢ வெள்ளவத்தை டிஸ்பென்சரி ரூ. 20,000.00 |
| 3 | CPD 22/ 0012/ 2024 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகளின் பெறுகைக்கான விலைமனுக்கள் | | 5,900 ரூபா | 200,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |

கேள்வி ஆவணத்தை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரு முறைகளினால் பெற்றுக் கொள்ளலாம்.

முறை 01 - www.colombo.mc.gov.lk என்ற கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. பின்வரும் முறையில் மீளளிக்கப்படாத கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை செலுத்தலாம்.

அ) நகர மண்டப மக்கள் வங்கி கிளையின் 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்திற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலிருந்தும் பணத்தை வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04,
  இல.147, ஹைலெவல் வீதி,
  கிருளப்பொன,
  கொழும்பு-06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
  மாளிகாகந்த
  கொழும்பு-10.

ii. கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் பற்றுச்சீட்டின்/ துண்டின் மூலப்பிரதியை இணைத்தல் கட்டாயமானதாகும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக் கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 2024.02.14 ஆம் திகதி வரையும் நகர மண்டப சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. 2024 பெப்ரவரி 14ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர் கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணமானது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட மாட்டாது என்பதுடன் வழங்கப்படவும் மாட்டாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை ஆகியன விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/பிணை 2024.07.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும்.

